
# 2012 அவ்யக்த முரளி



**<u>பொருளடக்கம் - 10</u>**

**18.01.2012** சேவைகள் செய்வது மட்டுமல்லாமல் ஒருவருக்கொருவர் சகயோகியாக இருந்து வாயுமண்டலத்தில் தீவிர முயற்சியில் அலையை பரப்புங்கள், மனதை வென்று ஆத்மாக்களுக்கு மனதால் சேவை செய்யுங்கள்!

**02.02.2012** தற்போது ஸ்மிருதி சொரூப அனுபவத்தின் அதாரிட்டி ஆகுங்கள். ஜுவாலாமுகி யோகத்தின் மூலம் அனைவருக்கும் ஒளி மற்றும் சக்தியின் கிரணங்களின் சகயோகம் அளியுங்கள்!

**05.03.2012** தற்பொழுது நாலா பக்கமும் துக்கம், அசாந்தி அதிகமாக இருக்கின்றது; ஆகையால் தங்களுடைய விஷ்வ கல்யாண சொருபத்தை பிரத்யட்சம் செய்யுங்கள், மனதின் மூலம் செய்யும் சேவையை அதிகப்படுத்துங்கள், பாபாவின் தொடர்பின் வர்ணத்தில் இருந்து இரட்டை புனிதமானவர் (ஹோலி) ஆகுங்கள்!

**20.03.2012** திருப்தியின் சக்தியை முகம் மற்றும் நடைத்தையில் தாரணை செய்து பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஆகுங்கள், சதா மகிழ்ச்சியாக இருங்கள் மற்றும் மகிழ்ச்சியை பிறருக்கு வழங்குங்கள்!

**03.04.2012** எனது என்பதை உனது என்பதாக மாற்றி கவலையில்லாத ராஜாவாக வீணானவைகள் வருவதற்கு வழியில்லாதவாறு, அந்த அளவு பாபாவின் அன்பு மற்றும் சேவையில் மனதை முழுவதுமாக ஈடுபடுத்துங்கள்!

**18.10.2012** அஹமதாபாத்திலிருந்து வீடியோ மூலம் கலந்துரையாடல்!

**02.11.2012** அவ்யக்த சந்திப்பின் முதல் குரூப்பின் நிகழ்ச்சிகள் மற்றும் உயிருக்கும் மேலான அவ்யக்த பாப்தாதாவின் இனிய செய்தி! (வீடியோ மிலன்!)

**30.11.2012** சந்துஷ்ட (திருப்தி) மணிகளின் பாக்கியம், "அடைய வேண்டியதை அடைந்து விட்டோம்" என்னும் உள்ளத்திலிருந்து எழும் கீதம்!

**15.12.2012** 'எனது' என்பதை 'உனது' என்று மாற்றிக் கொண்டு இரட்டை கிரீடதாரி கவலையில்லாத இராஜாக்களாக ஆகுங்கள்!

**31.12.2012** இந்த புதிய வருடத்தில் ஒவ்வொருவரும் சந்துஷ்டமணியாகி, திருப்தியின் சக்தியின் மூலம் பிரச்சனை இல்லாதவர்களாக, சமாதான சொரூபமாகுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## 18.01.2012 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சேவைகள் செய்வது மட்டுமல்லாமல் ஒருவருக்கொருவர் சகயோகியாக இருந்து வாயுமண்டலத்தில் தீவிர முயற்சியில் அலையை பரப்புங்கள், மனதை வென்று ஆத்மாக்களுக்கு மனதால் சேவை செய்யுங்கள்!

இன்று விசேஷமாக அன்பு நிறைந்த நன்னாளாகும் நாலாபுறமும் இருக்கக் கூடிய குழந்தைகள் அன்பு சொரூபத்தின் மூலமாக சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் அன்பு சொரூபமாகி அன்பில் மூழ்கியிருக்கின்றீர்கள். இன்று அமிர்த வேளையில் இருந்து நாலாபுறமும் இருக்ககூடிய குழந்தைகள் அமிர்தவேளைக்கு முன்னதாகவே அன்பு சொரூபத்தில் உள்ளத்தின் அன்பு முத்துக்களின் மாலையாகி எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். அநேக விதமான வெவ்வேறு விதமான மனதின் பாவனைகளை பாபாவின் முன்பாக வர்ணனை செய்து கொண்டிருந்தார்கள். நீங்கள் தெரிந்து கொண்டிருக்கின்றீர்கள், குழந்தைகளின் அன்பு எவ்வளவு உயர்வானது என்று நீங்கள் தெரிந்து கொண்டிருக்கின்றீர்கள். வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு பாவனைகளின் மூலமாக பாப்தாதாவின் முன்பாக தனது உள்ளத்தின் விசேஷங்களை சொல்லிக் கொண்டும் இருந்தார்கள். கண்களின் மூலமாக, வாய் மூலமாக தனது பாவனையை தெளிவுப்படுத்திக் கொண்டிருந்தார்கள். பாப்தாதா நாலாபுறமும் உள்ள குழந்தைகளின் அன்பான பாவனையை பார்த்து அன்பில் மூழ்கி விட்டார். மேலும் மனதில் ஆஹா! குழந்தைகளே ஆஹா! என பாடவும் பாடுகிறார். குழந்தைகள் வாயிலிருந்தும் ஆஹா! பாபா ஆஹா என்ற பாடலும்

ஒலித்துக் கொண்டிருக்கிறது. பாப்தாதா நாலாபுறமும் இருக்கக்கூடிய குழந்தைகளின் அன்பின் பாவனையைப் பார்த்து குழந்தைகளின் அன்பில் மூழ்கியிருந்தார். மற்றும் உளமார இந்த ஒரு வார்த்தை வெளிப்பட்டது ஆஹா! குழந்தைகளே ஆஹா, குழந்தைகளின் வாயில் இருந்து ஆஹா ஆஹா என்ற பாடல் காதில் விழுந்து கொண்டிருந்தது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து குழந்தைகளின் அன்பில் மூழ்கியிருந்தார். குழந்தைகள் பாபாவின் அன்பில் மூழ்கியிருந்தார்கள். இன்றைய தினம் பாபா குழந்தைகளை, குழந்தையில் இருந்து அதிகாரியாக ஆக்குவதற்காக திருஷ்டி வழங்கிக் கொண்டிருந்தார். இன்றைய தினம் குழந்தைகளுடைய இராஜ்ய திலகத்தின் தினம். இன்றைய நாள் பாப்தாதா சுயம் ஃபரிஸ்தா ரூபத்தில் இருந்து கொண்டு குழந்தைகளை உலக சேவைக்காக நிமித்தமாக ஆக்கியிருந்தார். சுயம் முதுகெலும்பாக ஆகி விட்டு குழந்தைகளை உலக மேடையில் பிரத்யட்சமாக ஆகியிருக்கின்றார். மேலும் பாப்தாதா இப்பொழுது குழந்தைகளின் சேவையைப் பார்த்து என்ன பொறுப்பு கொடுத்திருந்தாரோ, அதனுடைய ரிசல்ட்டைப் பார்த்து குழந்தைகளைப் பார்த்து மிக மிக மகிழ்ச்சி அடைகின்றார். உள்ளத்திலிருந்து வாழ்த்துக்கள் கொடுக்கின்றார், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்! பாப்தாதா பார்த்தார், இப்பொழுதும் கூட பாபா மூலமாக கொடுக்கப்பட்ட உலக சேவாதாரி என்ற வரதானம் ஒவ்வொரு குழந்தையும் மிகுந்த அன்பு மற்றும் உளமார செய்திருக்கின்றார்கள், செய்து கொண்டும் இருக்கின்றார்கள். ரிசல்ட் கூட பாப்தாதா பார்த்தார். ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் ஈடுபாடு இருக்கின்றது. மேரா பாபா (எனது (பாபா) பாபாவின் உள்ளத்தில் அன்பு இருக்கின்றது, ஆஹா எனது குழந்தைகளே! ஆஹா! தற்போதையை நேரத்தில் அதிகமான (மெஜாரிட்டி) சிறிய பெரிய சென்டரில் இருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளிடமும் ஊக்கம் இருக்கின்றது. இப்பொழுது வேக வேகமாக நாலாபுறமும் பாபாவை பிரத்யட்சப்படுத்தியே ஆக வேண்டும். இந்த ஊக்கம் உற்சாகத்தை பாப்தாதா சுற்றி வந்து பார்த்தார். சிறிய பெரிய சென்டரில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு சேவையின் ஊக்கம் மிக, மிக நன்றாக இருக்கின்றது. மேலும் எதிர்காலத்தில் கூட நன்றாகவே இருக்கும். பாப்தாதா இன்றைய அன்பான தினத்தில் நாலாபுறமும் இருக்கக்கூடிய உள்நாடு, மற்றும் வெளிநாட்டில் இருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் தன்னுடைய திருஷ்டியின் மூலமாக

உள்ளத்தின் மூலமாக அன்பு மற்றும் சேவைக்கு கைமாறாக உள்ளத்தின் அன்பு மற்றும் அன்பு நினைவுகள் கோடி கோடி மடங்கு கொடுத்துக் கொண்டிருக்கின்றார். இப்பொழுது நேரத்திற்கு ஏற்ப என்ன ஊக்கம் இருக்கின்றதோ பாபாவை பிரத்யட்சப்படுத்தியே தீர வேண்டும், அது மெது மெதுவாக ஆத்மாக்களின் உள்ளத்தில் கூட வர ஆரம்பித்திருக்கின்றது. புரிந்து கொண்டிருக்கின்றார்கள், பிரம்மா குமாரிகள் ஏதோ அடைந்திருக்கின்றார்கள், மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது, முதலில் நினைத்தார்கள் இவர்கள் என்ன செய்கின்றார்கள் என்று தெரியவில்லை என்று, இப்பொழுது இந்த அளவு வந்திருக்கின்றார்கள். நல்ல காரியம் செய்து கொண்டிருக்கின்றார்கள், நம்மால் செய்ய இயலாத காரியத்தை பிரம்மா குமாரிகள் ஒன்றுக்கூடி செய்து வெற்றியை அடைகின்றார்கள். எனவே இன்று பாப்தாதா முன்னால் அமர்ந்திருக்கக்கூடிய குழந்தைகளுக்கு மற்றும் நாலாபுறமும் எங்கெங்கு கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள், மற்றும் பார்த்தும் கொண்டிருக்கின்றார்கள், அனைத்துக் குழந்தைகளுக்குமே உள்ளத்தின் சிநேகத்தை விசேஷமாக கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

இப்பொழுது வரக்கூடிய காலத்தில் என்ன செய்ய வேண்டும். சேவைக்கான வாழ்த்துக்கள் பாப்தாதா கொடுத்து விட்டார். இப்பொழுது பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். என்னவென்றால் இப்பொழுது ஒவ்வொரு குழந்தைக்குமே இந்த ஊக்கம், உற்சாகம் திடமான நம்பிக்கை, தீவிர முயற்சி செய்தே ஆக வேண்டும் என்பதில் இருக்க வேண்டும். இப்பொழுது பாபாவிற்கு சமமாக ஃபரிஸ்தா ஆகியே தீர வேண்டும். ஏனென்றால் இப்பொழுது அனைவருக்குமே பாபாவுடன் ரிட்டர்ன் ஜெர்னி (திரும்ப வீட்டிற்கு போக வேண்டும்) பாப்சமான் ஃப்ரிஸ்தா ஆகியே தீர வேண்டும். ஏனென்றால் அனைவருமே உறுதி கொடுத்திருக்கின்றீர்கள். சேர்ந்தே செல்வோம், சேர்ந்த இராஜ்யம் செய்வோம், பிரம்மாபாபா கூட ஃபரிஸ்தா ஆகி விட்டார். சேர்ந்து எப்படி சொல்ல முடியும். பிரம்மாபாபா வாழ்க்கையில் ஃபரிஸ்தா நிலையின் சொரூபத்தை வெளிப்படுத்திக் காட்டினார். எவ்வளவு பொறுப்புக்கள் இருந்தது, அனைவரையுமே யோகி ஆக்கியே தீர வேண்டும், ஆனால் இவ்வளவு பொறுப்புகள் இருந்தும் கூட அனைவருமே பார்த்தோம்! விடுப்பட்ட நிலையில் அன்பானவராக இருந்தார். சதா கவலையற்ற

மகராஜாவாக இருந்தார். கவலையே இல்லை. அதே போன்று குழந்தைகளாகிய நீங்களும் கூட இப்பொழுது பாபாவிற்கு சமமாக கவலையற்ற மகாராஜா, ஃப்ரிஸ்தா ஆகியே தீர வேண்டும். இந்த திட சங்கல்பம் இருக்கின்றதா? ஆகியே தீர வேண்டும். அல்லது ஆகி விடுவோம் என்று நினைக்கின்றீர்களா? இப்பொழுது பாப்தாதா பார்த்தார். நேரத்தின் அனுசாரமாக எவ்வளவு சேவையில் ஊக்கம், உற்சாகம் இப்பொழுது நடைமுறையில் இருக்கின்றதோ, அதே அளவு இப்பொழுது தீவிரமான முயற்சியாளராக தானும் ஆக வேண்டும். பிறரையும் ஆக்க வேண்டும். சம்பன்னம் ஆக வேண்டும், ஆக்க வேண்டும். இந்த கருத்தை (பாயின்ட்) கருத்தில் வைத்துக் கொண்டு இப்பொழுது தானும் கூட ஊக்கம் உற்சாகத்தில் இருக்க வேண்டும். வாயமண்டலத்தில் கூட ஊக்கம். உற்சாகம் பிறருக்கும் கிடைக்க செய்ய வேண்டும். அனைவரும் சகயோகி ஆகி இப்பொழுது வாயுமண்டலத்தில் தீவிரமான முயற்சியின் அலைகளை பரப்புங்கள். எப்படி ஒருவருக்கொருவர் சேவைக்கான ஊக்கத்தை வாயுமண்டலத்தில் பரப்பியிருக்கின்றீர்களோ, அதேப்போன்று இப்பொழுது பாப்தாதா இதைத்தான் குழந்தைகளிடம் சுபமான ஆசை வைக்கின்றார். இந்த அலைகள் வாயுமண்டலத்தில் பரப்புங்கள். பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார் ஆனால் இப்பொழுதும் கூட முயற்சியிருக்கின்றது, தீவிரமான முயற்சி செய்ய வேண்டும். இப்பொழுது ஒவ்வொரு குழந்தைகளிடமும் பாப்தாதா இந்த ஒரு ஆசை வைத்திருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் பாபாவின் ஆசையின் நட்சத்திரமாக ஆக வேண்டும். யார் நினைக்கின்கின்றார்கள் பாபாவின் நட்சத்திரமாக இருந்து ஆகி விடுவேன், ஊக்கத்தை வாயுமண்டலத்தில் பரப்புவேன் என்பவர்கள் கை உயர்த்துங்கள், பாப்தாதா கைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார், பாப்தாதா பெரும்பான்மையான. குழந்தைகள் கை உயர்த்தினார்கள், பின்னால் இருப்பவர்கள் தெரியவில்லை ஆனால் முன்னால் இருப்பவர்களின் கைகள் தெரிய வருகிறது. இப்பொழுது பின்னால் இருப்பவர்களும் கை உயர்த்துகிறார்கள். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள் நல்லது பாப்தாதா பார்த்தார். விசேஷமாக மனதில் ஏதாவது ஒரு விசயத்தில் ஊக்கம், உற்சாகம் வந்தது என்றால் அந்த காரியம் சாகார ரூபத்தில் நன்றாக நடந்து விடும். எனவே பாப்தாதா இந்த முறை அன்பான தினத்தன்று இந்த ஹோம் ஒர்க் கொடுக்கின்றார். ஒவ்வொரு குழந்தையின் மனதின்

காரணத்தினால் சங்கல்பம் மற்றும் நேரம் வீணாகிக் கொண்டிருக்கின்றது, ஒருவேளை எப்பொழுதாவது ஏதாவது வீண் சங்கல்பம் வந்தது என்றால் அனைவருக்குமே அனுபவம் இருக்கும் நேரம் எவ்வளவு வீணாகி விடுகின்றது. சக்தி எவ்வளவு வீணாகி விடுகின்றது. பாப்தாதா இந்த ஹோம் ஓர்க் கொடுக்க விரும்புகின்றார், இந்த இரண்டு மாதங்கள் ஒவ்வொரு குழந்தையும் மனதின் வீணான சங்கல்பம் மற்றும் நேரம் விணாவது அதிலிருந்து விடுபட்டு சேமிப்பு செய்வதற்காக தனக்குத்தானே, தனக்காக விதிமுறையை உருவாக்க வேண்டும். இந்த இரண்டு மாதமும் ஒவ்வொருவரும் தனது சார்ட் வைத்துக் கொள்ளுங்கள். நேரம் வீணாவது, வீண் சங்கல்பம் இதன் மீது நான் எந்தளவு கட்டுப்பாடு கொண்டு வந்திருக்கின்றேன். ஏனென்றால் இப்பொழுது நேரத்திற்கு ஏற்ப உங்கள் அனைவருக்குமே மனதின் சக்தியின் மூலமாக ஆத்மாக்களுக்கு மனசா சேவை செய்வதற்கான நேரம் இது அதற்காக சதா மனதின் மீது கவனம் வைக்க வேண்டும். இது அவசியமானது, மனதை வென்றவர் உலகை வென்றவர் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மன்மனாபவ இது வாயுமண்டலத்தில் மனதின் வீணானதை அழித்து விட்டு சம்பள்ளமாக இருக்க வேண்டும். செய்ய முடியுமா, செய்வீர்களா? கைகளைத் தூக்குங்கள் பாப்தாதா பரிசு கொடுப்பார், தனது ரிசல்ட் (முடிவு) நீங்களே பாருங்கள். மனம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மனதின் மகிழ்ச்சியை பங்கிட்டுக் கொடுங்கள். இந்த முயற்சியை அனைவருமே ஒருவரைக்காட்டிலும் ஒருவர் முன்னால் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். வீணான, நேரம் சங்கல்பம் இரண்டையும் அழித்து விட வேண்டும் சக்திசாலியான சங்கல்பம், சக்திசாலியான நேரம். வரக்கூடிய காலத்தில் வாயுமண்டலத்தில் இது பரவ வேண்டும். பாப்தாதா ஒரு விஷயத்தில் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியாக இருக்கின்றார். எந்த விஷயத்தின் மீது? ஒவ்வொரு குழந்தையும் சேவை செய்திருக்கின்றார்கள் ஆனால் அதனுடன் கூடவே பாப்தாதாவின் அறிவுறுத்தல் என்ன இருக்கின்றதோ டபுள் இராஜா ஆக வேண்டும். தெரியும் தானே உங்களுக்கு, ஒன்று சுயராஜ்ய அதிகாரி, எதிர்கால இராஜ்ய அதிகாரி, சுயராஜ்ய அதிகாரி என்பதை பார்த்து பாபாவிற்கு பெருமை இருக்கின்றது. இப்படிப்பட்ட தந்தை உலகில் எங்குமே இருக்க முடியாது. நீங்கள் அனைவரும் சுயராஜ்ய அதிகாரி தானே? தன் மீது இராஜ்யம் செய்பவர், கர்மேந்திரியம் மீது இராஜ்யம் செய்யடவர், பாபா

இதைத்தான் விரும்புகின்றார். ஒவ்வொரு குழந்தையும், சுய இராஜ்ய அதிகாரியாக சதா இருக்க வேண்டும். அவ்வப்பொழுது அல்ல ஆக முடியுமா? இந்த இரண்டு மாதங்கள் பாபா கொடுத்திருக்கின்றார், சுய இராஜ்ய அதிகாரியாக நான் இருந்தேனா? அல்லது கர்மேந்திரியங்களின் வசம் போட்டிவிட்டேனா? இப்பொழுது கர்மாதீத் நிலையை அடைய வேண்டும். நேரம் நெருங்கி வந்து விட்டது. என்ன செய்ய வேண்டும். நடமாடிக் கொண்டு இருக்கும்பொழுதும் சுய இராஜ்ய அதிகாரி ஆகியே தீர வேண்டும். இந்த சம்ஸ்காரம் பிராமண குழந்தைகளாகிய உங்களுடையதுதான். டபுள் இராஜ்யம், சுய இராஜ்பம் மற்றும் எதிர் காலத்தில் உலக இராஜ்யம், பாப்தாதா குழந்தைகளை சுற்றி வந்து பார்க்கும்போது ரிசல்ட்டை குறிப்பு (நோட்) எடுத்தார். சதா சுய இராஜ்ய அதிகாரி இந்த விசபத்தில் இப்பொழுது கவனம் வேண்டும். இரண்டு காரியங்கள் பாப்தாதா கொடுத்திருக்கின்றார், ஒன்று இரண்டு மாதத்தில் சுயராஜ்ய அதிகாரியாக எந்த அளவு இருக்கின்றேன். தனது ரிசல்ட் பார்க்க வேண்டும். அதன் கூடவே மனதை கட்டுப்படுத்தக்கூடிய மனதின் மீது இராஜ்யம் செலுத்துவது மூலமாக வீணானதை அழித்து விட வேண்டும். இந்த விசயத்தில் யார் நம்பர் வாங்குகின்றார்களோ அவர்களுக்கு பாப்தாதா பரிக் கொடுப்பார். பிடித்திருக்கின்றதா? செய்து தானே ஆக வேண்டும், செய்வீர்களா? தலை அசைத்து சொல்லுங்கள். நல்லது.

பாப்தாதா இன்று அனைவரின் அன்பை சுவீகாரம் செய்தார். அமிர்தவேளை வதளத்தில் கூட நிறைய குழந்தைகளின் அலங்காரம் இருந்தது. அட்வான்ஸ் பார்ட்டியம் கூட வதனத்தில் இன்று தனது உள்ளத்தின் அன்பை கொடுப்பதற்காகவும், அடைவதற்காகவும் வந்திருந்தார்கள். அவர்கள் பாபாவிடம் கேட்கின்றார் எங்களுடைய இந்த பார்ட் எதுவரையிலும் என்று, என்ன பதில் கொடுப்பது. முதல் வரிசையில் உள்ளவர்களிடம் பாபா கேட்கின்றார்? என்ன பதில் கொடுப்பது. (நான் ரெடி என்று முதலில் தாதி ஜானகி சொல்லி விட்டார்) நீங்கள் தனியாக போவீர்கலா? தனியாக நான் போக மாட்டேன். எல்லோரும் சேர்ந்து போவோம். உங்களுக்கு அன்பு உள்ளது. தாதி தீதிகள் ஏன் எங்களை விட்டு தனியாக போய் விட்டார்கள். அவர்களின் பார்ட் அப்படி இருந்தது. அவர்கள் போகத்தான் வேண்டியிருந்தது. வேகவேகமாக பரிவாரத்தை உருவாக்க வேண்டும். ரிசல்ட்டை

வெளிப்படுத்த வேண்டும். அன்பு இருக்கின்றது, அன்பில் அனைவரும் வெற்றி. பாப்தாதாவிடம் அன்பு எல்லோருக்கும் இருக்கின்றது ஆனால் அன்புடன் கூடவே சக்தியும் வேண்டும். அதற்காக அமிர்தவேளையை சக்திசாலியாக ஆக்குங்கள். உட்காருவதற்கு பாப்தாதா வாழ்த்துக்கள் கொடுக்கின்றார் ஆனால் அமரக்கூடிய வாயுமண்டலம் சக்திசாலியாக இருக்க வேண்டும், சிலர் எப்படி இருக்கின்றார்கள், சிலர் எப்படி இருக்கின்றார்கள், ஒருவேளை நீங்கள் போட்டோ எடுத்தால் உங்களுக்கு என்ன தோன்றும், வேறு ஏதாவது நடக்கும் என்று. பாப்தாதா ஜுவாலாமுகி யோகத்தை பற்றி கூறியிருந்தார். அதன் மீது இன்னும் ஆழமான கவனம் கொடுக்க வேண்டும். அனைவருமே முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள் ஆனால் முயற்சியின் முன்னால் தீவிரம் என்ற வார்த்தையை சேர்க்க வேண்டும். இப்பொழுது பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் இந்த இரண்டு மாதங்கள் கொடுத்திருக்கின்றார். இதில் எந்த அளவு கவனம் கொடுப்பீர்களோ. கவனத்துடன் கூடவே பாப்தாதா கூட உங்களுக்கு அதிகமான சகயோகம் (உதவி) கொடுப்பார். மனதின் அதிகாரி மனதின் எஜமானனாகி மனதை அப்படி செலுத்துங்கள். எப்படி கைகால்களைதான் விரும்பியபடி எப்படி இயக்குகின்றீர்களோ அப்படியே மனதையும் தன் விருப்பப்படி இயக்க வேண்டும். எந்த எண்ணத்தை கொண்டு வர விரும்புகின்றீர்களோ அந்த எண்ணம் வர வேண்டும். இப்படி மனதை கட்டுப்படுத்த வேண்டும். தினசரி இரவில் ரிசல்ட் பாருங்கள், மனதில் ஆளுமை சக்தி, கட்டுப்படுத்தும் சக்தி எந்த அளவு இருந்தது. இப்பொழுது வேயமாக வீணானதை அழித்து விடுங்கள். அப்பொழுது சக்திசாலியாக ஆகி வாயுமண்டலத்தில் சக்தி நிறைந்த சக்திகளின் அலைகளைப் பரப்புங்கள். பாப்தாதா குழந்தைகளின் துக்கம், வேதனை, கூக்குரல் இதைக் கேட்டுக் கொண்டு குழந்தைகளின் மூலமாக இதை வேகமாக முடித்து விட விரும்புகின்றார். பாபா ஏற்கனவே கூறியிருந்தார் முயற்சி அனைவருமே செய்கின்றீர்கள் இப்பொழுது தீலிரம் என்ற வார்த்தையை சேர்க்க வேண்டும். செய்வேன், பார்க்கலாம் இந்த மாதிரி வார்த்தைகள் எல்லாம் வேண்டாம்.

அன்பின் அடையாளத்தைக்கூட இன்று பார்த்தார். ஒவ்வொருவரின் உள்ளத்தில் எவ்வளவு அன்பு உள்ளது. எவ்வளவு அன்பு உள்ளதோ

அதன் கூடவே சக்தியும் வேண்டும். இப்பொழுது சக்தியை அதிகாரிக்க வேண்டும். ஒருபோதும் எந்த ஒரு சகோதரியும் தன்னைத்தானே சக்தி என்று நினைக்க கூடாது, சிவசக்தி என்று நினைக்க வேண்டும். பாபா உங்களுடன் சேர்ந்தே இருக்கின்றார். பாண்டவர்களுடன் பாண்டவ பதி (தலைவன்) சேர்ந்தே இருக்கின்றார். இப்பொழுது என்ன செய்வீர்கள், பாப்தாதா என்ன சொன்னாரோ, முயற்சியின் முன்பாக தீவிரம் என்ற வார்த்தையை சேர்க்க வேண்டும் வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். ஒருவருக்கொருவர் சகயோகி ஆகி ஒவ்வொருவருமே அவர்களின் இடத்தில் அமர்ந்து கொண்டு சென்டரை சக்திசாலியாக ஆக்குங்கள், தன்னுடன் சேவையில் இணைந்து இருப்பவரையும் சக்திசாலி ஆக்குங்கள். இப்பொழுது என்ன செய்வீர்கள். புதுமையாக செய்வீர்கள் தானே மேரா பாபா என்று எப்பொழுது சொல்கின்றீர்களோ, அப்பொழுது என்னைப் போன்று ஆக வேண்டும் தானே என்று பாபா கேட்கின்றார். ஒவ்வொருவருமே தனது உள்ளத்தில் திட சங்கல்பம் செய்யுங்கள். நல்ல நல்ல சங்கல்பம் நீங்கள் செய்கின்றீர்கள். அமிர்தவேளையில் பாப்தாதா பார்த்தார், நல்ல சங்கல்பம் செய்கின்றீர்கள். இதை செய்வேன், அதை செய்வேன் என்று எப்பொழுது கர்மேயோகி ஆகின்றீர்களோ, சம்மந்தம் தொடர்பில் வருகின்றீர்களோ, அப்பொழுது வித்தியாசம் ஏற்படுகின்றது. கர்மயோகியின் ஸ்திதி அதில் கவனம் அதிகமாக வேண்டும். நல்லது எல்லோருமே மகிழ்ச்சியாக இருக்கின்றீர்களா? மகிழ்ச்சியாக இருக்கின்றீர்களா? நல்லது.

யாரெல்லாம் முதல் முறையாக வந்திருக்கின்றார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். பாதி வகுப்பு புதிய குழந்தைகள்தான், பாப்தாதா வந்திருக்ககூடிய புதிய குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். ஏனென்றால் கடைசி முடிவு நேரத்திற்கு முன்னதாக வந்து விட்டீர்கள் ஆனால் எவ்வளவு லேட்டாக வந்திருக்கின்றீர்களோ அந்தளவு தீவிரமான முயற்சி செய்ய வேண்டும் ஏனென்றால் இருக்கக்கூடிய இந்த குறைந்த நேரத்தில் எதிர்கால 21-பிறவிகளுக்கு ஆஸ்தி அடைய வேண்டும். அந்த அளவு கவனம் வைக்க வேண்டும். நேரத்தை சேமியுங்கள். ஒரு வினாடி கூட வீணாக்க வேண்டாம். தீவிரமான முயற்சியாளராகவே இருங்கள். சாதாரண முயற்சியின் மூலமாக போய் சேர்வது கஷ்டம். ஆனாலும் கூட பாப்தாதா

வந்திருக்கக்கூடிய குழந்தைகளுக்கு உள்ளத்தில் இருந்து வாழ்த்துக்கள் கொடுக்கின்றார். வாழ்த்துக்கள் நல்லது.

**சேவையின் பொறுப்பு இந்தூர்: (7000 பேர் வந்திருக்கின்றார்கள்**): நல்லது. சகோதரிகள் (டீச்சர்ஸ்) கை உயர்த்துகின்றார்கள். வாழ்த்துக்கள் கொடுக்கின்றார். பாப்தாதா. அனைத்து டீச்சர்களுக்கும் ஏன் வாழ்த்துக்கள் கொடுக்கின்றார், ஏனென்றால் பாப்தாதா பார்த்தார். இந்தூர் சேவையில் நிமித்தமாக யார் ஆகியிருக்கின்றார்களோ அவர்கள் சேவையின் ரிசல்ட்டை மிகவும் நன்றாக வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள். யாரெல்லாம் அங்கே விசேஷமாக நிமித்தமாக ஆகியிருக்கின்றார்களோ, வெளியில் உள்ளவர்களிடம் நல்ல தொடர்பு வைத்திருக்கின்றார்கள். பாபாவின் செய்தி நல்ல முறையில் கொடுத்திருக்கின்றீர்கள். இப்பொழுது சரியாக செய்திருக்கின்றீர்கள், அதற்கு வாழ்த்துக்கள் ஆனால் அந்தளவு தொடர்பு சம்மந்தத்தில் உள்ளவர் களை வாரிசாக ஆக்குங்கள். தொடர்பில் உள்ளவர்களை வாரிசாக கொண்டு வாருங்கள். கொண்டு வரமுடியும். தொடர்பு நல்ல முறையில் வைத்திருக்கின்றீர்கள். இன்று ரதத்தின் உடல் நிலை சிறிது சரியாக இல்லை, ஆனாலும் கூட பாப்தாதா சந்திப்பதற்காக வந்து விட்டார்.

பாப்தாதாவிற்கு குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஆஹா குழந்தைகளே! ஆஹா இந்த வார்த்தை உள்ளத்தில் இருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எந்தளவு ஆஹா பாபா என்று கூறுகின்றர்களோ அதை விட அதிகமாக பாபா ஆஹா! குழந்தைகளே ஆஹா என்று கூறுகின்றார். இந்தூர் தொடர்பில் உள்ளவர்களை இன்னும் சமீபத்தில் கொண்டு வர வேண்டும். கொண்டு வர முடியும் நம்பிக்கை உள்ளவர்களை எதிரில் கொண்டு வாருங்கள் நல்லது மீண்டும் சேவையில் நிமித்தமாக வந்துள்ளீர்கள் பாப்தாதாவிற்கும் மகிழ்ச்சி ஒவ்வொரு ஜோனுக்கும் மிக நன்றாகவே இந்த வாய்ப்பு கிடைக்கிறது. அதிகமான கூட்டத்தை கொண்டு வருவதற்கு நல்ல வாய்ப்பு இது. இந்த நிகழ்ச்சி மிக நன்றாக அமைந்துள்ளது. ஒவ்வொரு ஜோனுக்கும் வாய்ப்பு கிடைக்கிறது ஆனால் வாய்ப்பை அடைந்து நல்ல ரிசல்ட்டை தர வேண்டும். பாப்தாதாவிற்கு முன்பாக அவர்களை கொண்டு வர வேண்டும். நல்லது

**இரட்டை அயல் நாட்டினர் 400 பேர் வந்திருக்கின்றார்கள்.** மிக்க நல்லது. இரட்டை அயல் நாட்டு குழந்தைகள் யக்ஞத்திற்கு அலங்காரமாக இருப்பவர்கள். நீங்கள் வரும் பொழுதெல்லாம் யக்ஞம் அழகு பெறுகின்றது. அனைவரும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். ஏனென்றால் உங்களிடம் ஒரு விசேஷ தன்மை நன்றாக உள்ளது. செய்ய வேண்டியதை உடனடியாக செய்வீர்கள். வளர்த்துக் கொண்டே செல்ல மாட்டீர்கள். பாப்தாதா பார்க்கின்றார். நாளுக்கு நாள் ஊக்கம் உற்சாகம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஒரு முறை கூட இரட்டை அயல்நாட்டு குழந்தைகள் இல்லாத குழுவே கிடையாது. எனவே பாப்தாதா இரட்டை அபல் நாட்டு குழந்தைகளுக்கும் இரட்டை முயற்சியாளர் என்று பட்டம் தருகிறார். இப்போது செய்து காண்பியுங்கள். இரட்டை முயற்சியாளருக்கான ரிசல்ட்டை காண்பிக்க வேண்டும். பாப்ததாவிற்கு தெரியும் சேவை வளர்ந்து கொண்டே செல்கிறது. செய்திகளும் வந்த வண்ணம் இருக்கின்றது. சேவை நன்றாக நடைபெறுகிறது. இப்போது இன்றைய விசயம் சொன்னதை கவனத்தில் வைத்து கொண்டு முயற்சிக்கு முன்னால் தீவிரமான என்ற வார்த்தையை இணைத்துக் கொள்ளுங்கள். தீவிர முயற்சி செய்யும் குழந்தைகளை எப்போதுமே பாப்தாதா தன் மனதில் வைத்திருக்கின்றார். ஒவ்வொரு குழந்தைகளையுமே பாப்தாதா தனது உள்ளத்தில்தான் வைத்திருக்கின்றார். அனைவரின் உள்ளங்களிலும் பாப்தாதா இருக்கின்றார் அல்லவா? கை உயர்த்துங்கள். உள்ளத்தில் இருப்பவர் யார்? பாப்தாதா, பாப்தாதாவின் உள்ளத்தில் குழந்தைகள் நீங்கள் இருக்கின்றீர்கள். பாப்தாதா தனக்கு யாரெல்லாம் அன்பு நினைவுகளை அனுப்பினார்களோ அவர்களுக்கு குறிப்பாக அன்பு நினைவுகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஜெயந்தி குழந்தையும் மிகவும் உளப்பூர்வமான அன்பு நினைவுகளை அனுப்பி வைத்திருக்கின்றார். காயத்ரி குழந்தையும் அனுப்பி இருக்கின்றார். மேலும் சில குழந்தைகள் விசேஷமாக அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளார்கள். அவர்களுக்கு பாபாவும் விசேஷமாக அன்பு நினைவுகளை வழங்குகின்றார். யாருக்காவது ஏதேனும் ஆசை இருந்தால் அந்த ஆசையை பூர்த்தி செய்து கொண்டு முன்னேறிக் கொண்டே இருங்கள். ஆசைகள் இவர்களுக்கு தவறாக இருப்பதில்லை, நல்ல விருப்பங்களே உள்ளது. சேவைக்கான ஊக்கமும் நன்றாக

உள்ளது. குறிப்பாக யாரெல்லாம் நினைவுகளை அனுப்பியிருந்தார்களோ அவர்களுக்காக பாப்தாதா அன்பு நினைவுகளை பல மடங்கு அன்பு நினைவுகளை வழங்குகின்றார். நல்ல ஆல்ரவுண்டர் சேவாதாரி குழந்தைகள். மற்றவர்கள் யாரும் அன்பு நினைவுகளை அனுப்பவில்லை என்று நினைக்க வேண்டாம். எல்லோருமே அனுப்பியிருக்கின்றீர்கள். குறிப்பாக சிலருடைய பெயரை பாபா சொல்கின்றார். விந்தை இதுதான் எந்த ஜோனிலுமே அயல்நாட்டவர் தவறுவதே இல்லை. (வஜீகா சகோதரி மிகுந்த அன்புகளை, கடிதம் மூலமாக அனுப்பியிருக்கின்றார்) குழந்தை நன்றாக நினைவில் இருக்கிறது. பாதாதா பார்க்கின்றார் குழந்தையின் உடல் நலக் குறைவும் எத்தனை பேருக்கு நன்மை செய்தது. மருத்துவர்களும் இவர்களை பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள். இவர்களை பார்க்கும்பொழுது நோய் என்பதே தெரிவதில்லை. எவ்வளவு நோய் உள்ளது இருப்பினும் சந்தோஷமாக இருக்கின்றார். இதைத்தான் வியாதியையும் வெற்றிக் கொண்ட நிலை என்று சொல்லப்படும். வியாதி தன் வேலையை செய்து கொண்டிருக்கின்றது. குழந்தை தனது நினைவுக்கான வேலையில் பிஸியாக இருக்கின்றார். இதுவும் இரட்டை அயல்நாட்டு குழந்தைகளின் உதாரணம். எனவே இரட்டை அயல்நாட்டினர் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளை வழங்குகின்றார். விசேஷமான வாழ்த்துக்களும் வழங்குகின்றார். விசேஷமாக மதுபனை அலங்கரிக்க வந்தமைக்காக வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றார். நன்றாக இருக்கிறதா? உங்களுக்கு நீங்கள் வருவதை பார்த்து அனைத்து குழந்தைகளுக்குமே குஷி ஏற்படுகின்றது. அனைவரின் உள்ளங்களிலும் ஆஹா! ஆஹா! என்ற வார்த்தை எழுகிறது. இப்போது அதிசயம் செய்துள்ளீர்கள். ஆங்காங்கே பல இடங்களில் செய்தியைக் கொடுத்துள்ளீர்கள் ஆனால் இப்போது தரமான வாரிசு குழந்தைகளை தயார் செய்யுங்கள். அயல்நாட்டிலிருந்து வாரிசு குழந்தைகளை உருவாக்கி கொண்டு வாருங்கள். செய்ய முடியும் ஏனென்றால் எல்லாவற்றிலுமே முன்பாக செல்பவர்கள் நீங்கள்தான் எனவே இதையும் செய்ய முடியும் நல்லது.

டீச்சர்ஸ் சகோதரிகள் நிறைய பேர் வந்துள்ளார்கள். ஆசிரியர்களை பார்த்து பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகிறார். ஏனென்றால் நிமித்தமான டீச்சர் ஆகியுள்ளீர்கள். பாப்தாதாவையே பிரத்யட்சம்

செய்ததற்கான நிமித்தமாகியுள்ளீர்கள், எந்த டீச்சரைப் பார்த்தாலும் சந்தோஷம் அடைகிறார்கள் ஏனென்றால் டீச்சர் என்றாலே அவர்கள் முகத்தின் மூலமாக எதிர் காலம் நென்படுகிறது. உங்களுடைய எதிர்காலம் என்ன? எதிர்காலம் என்பது சதா மன மகிழ்ச்சியும், சதா அதிகாரி நிலையும் ஆகும். நீங்கள் அடிமைகள் அல்ல. எனவே ஆசிரியர்கள் முகத்தின் மூலமாக இதையே சாட்ஷாத்காரம் செய்கின்றீர்கள். ஒவ்வொரு ஆசிரியரும் சதா இதை புரிந்து கொள்ளுங்கள் சில இடங்களில் பேசலாம். பேசாமலிருக்கலாம் ஆனால் உங்கள் முகம் நிகழ்காலத்தின் பிராப்தியையும், வருங்காலத்தின் பிராப்தியையும் தென்படுத்துகிறது. சதா இதை சுவனத்தில் வையுங்கள். எனது முகம் இப்படி சாட்சாத்காரம் செய்வதாக உள்ளதா? டீச்சர் உங்களுக்கு முன்பாக யார் வந்தாலும் பார்ப்பவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும். மகிழ்ச்சி அவர்கள் வாழ்க்கையில் தென்பட வேண்டும். அப்படிபட்ட அதிர்ஷ்டமும் குஷியும் உடையவர் தானே. லட்சியம் நன்றாக இருக்கிறது செய்தே ஆக வேண்டும். ஆகியே தீர வேண்டும். அப்படி இருக்கிறது தானே லட்சியம் என்ன? உங்கள் லட்சிபம் இதுதானே இந்த லட்சியம் லட்சணத்தில் தென்படுகிறது இன்னும் அதிகமாக தென்பட வேண்டும். உங்கள் முன்பாக வருபவர்கள் யாராக இருந்தாலும் கண்டிப்பாக மகிழ்ச்சியை எடுத்து செல்ல வேண்டும். மகிழ்ச்சி என்பது ஒவ்வொரு மனிதர்களுக்கும் மிக அவசியமான ஒன்று, குஷியாக இருக்கத்தான் விரும்புகிறார்கள் ஆனால் இருக்க முடியவில்லை. ஆசிரியர்கள் என்றாலே முகத்தின் மூலமாகவே சேவை செய்பவர்கள். உங்களை பார்ப்பவர்களுக்கு இவர் எப்படி மாறியுள்ளார் என்று அனுபவம். ஆக வேண்டும். இனி போக போக உங்கள் முகமும், நடத்தையும் அதிகமான சேவை செய்ய வேண்டும். ஏனென்றால் நேரம் மிகவும் கடினமாகிக் கொண்டே செல்கிறது. அப்போது நேரம் குறைவாக இருக்கும். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும். ஏதாவது கிடைக்காதா, கிடைக்காதா என்று இருப்பார்கள். அதற்காக ஆசிரியர்கள் எவ்னெரடியாக தயாராக இருக்க வேண்டும். தன்னை நோக்கி வருபவர்கள் ஏதேனும் ஒன்றாவது கண்டிப்பாக எடுத்து செல்ல வேண்டும். உங்கள் முகம் மற்றும் நடத்தை மூலமாகவே ஏதேனும் ஒன்று எடுத்து செல்ல வேண்டும். நீங்கள் வள்ளலின் குழந்தைகள் அல்லவா? பாப்தாதாவிற்கு ஆசிரியர்களை பார்க்கும்பொழுது மிக மகிழ்ச்சி ஏற்படுகின்றது. மனதிற்குள்ளேயே ஆஹா! ஆசிரியர்களே

ஆஹா! என்று பாடல் பாடுகின்றார். ஏனென்றால் ஒவ்வொரு டீச்சருமே சேவை செய்து கொண்டுதானிருக்கின்றார்கள். தன்னை பற்றிய ரிசல்ட்டையும் இன்று என்ன சேவை செய்தோம் என்று இரவில் பார்ப்பீர்கள். தனது சார்ட்டையும் நீங்களே பார்ப்பீர்கள். இன்று செய்ய வேண்டிய சேவை செய்தோமா என்று கவனம் வைப்பீர்கள். அப்படி செய்யவில்லையென்றால் காரணத்தை கண்டுபிடித்து மறுநாள் இரட்டை சேவை செய்வீர்கள். விட்டு விடக்கூடாது. ஏனென்றால் டீச்சர் என்றால் நிமித்தமாக இருப்பவர்கள் வள்ளலின் குழந்தைகள் பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. சென்டர் சிறியதோ, பெரியதோ எதுவாயினும் தியாகம் செய்து சேவைக்காக வந்துள்ளீர்கள். இதுவும் தைரியம்தான். எனவே உங்களுடைய தைரியத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். இப்போது தனக்கு துணையாக பிறரையும் மாற்றுங்கள். இன்னும் அதிகமான ஆசிரியர்களை உருவாக்குங்கள் ஏனென்றால் சேவை அதிகரிக்க வேண்டும். இப்போது சிறிது கலவரம் ஏற்படும். அனைத்தையும் கடந்து நீங்கள் முன்னேறி செல்ல வேண்டும். சேவை விருத்தி அடையும் குறையாது. நல்லது இது ஒரு ஜோன் இன்னொரு ஜோனும் இருக்கின்றது. அதில் குறைவாகவே இருக்கின்றார்கள். (2000-டீச்சர்கள் வந்துள்ளார்கள்) ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்கள்.

கல்கத்தாவிலிருந்து வந்திருப்பவர்கள் நன்றாக. மலர் அலங்காரம் செய்துள்ளார்கள். கல்கத்தாவை சார்ந்தவர்கள் இந்த சேவையை மிகவும் விரும்பி ஏற்றுக் கொண்டார்கள். பாப்தாதா பர்க்கின்றார். எந்த அலங்காரமாக இருந்தாலும் மனம் உவந்து செய்கின்றார்கள். பாப்தாதா மனதை பார்க்கின்றார் அலங்காரத்தைப் பார்க்கவில்லை. போகப்போக அதுவும் தெரிந்து விடுகிறது ஆனால் மனம் உவந்து செய்கின்றார்கள் அதற்காக வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! நல்லது.

கல்கத்தா பிரம்மாபாபாவின் திவ்ய ஜென்ம பூமி நல்லது! உங்களது இன்சார்ஜ் தாதியும் மிகவும் அதிசயமாக தனது நடிப்பை செய்து கொண்டிருக்கின்றார்கள். இப்போது அனைத்து ஜோனுக்கும் பாப்தாதா சொல்கின்றார். சேவையில் வாரிசு தரமான குழந்தைகளை கொண்டு வாருங்கள். இப்போது இதில் நம்பர் எடுக்க வேண்டும் சேவை நிலையங்களை அதிகரித்தாலோ பாபாவின் குழந்தைகளை

அதிகரித்தாலும் வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள் ஆனால் இப்போது ஒவ்வொரு ஜோனிலும் வாரிசு தரமானவர்களை அதிகரிப்போம் என்று லட்சியம் வைக்க வேண்டும். பாப்தாதா எப்போதுமே சொல்கிறார். மைக்கும் இருக்க வேண்டும் வாரிசும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட தரமானவர்களை அதிகப்படுத்துங்கள். ஒருவர் சொன்னால் அநேகர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதைதான் தரமான குழந்தை என்று சொல்ல முடியும். நல்லது. நாலாபுறமுள்ள மிக சினேகமான, சகயோகியாக உள்ள சேவாதாரியாக உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பான இந்த நாளில் அன்பு நிறைந்த அன்பு நினைவுகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார். அது மட்டுமல்லாமல் பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுடனும் பேசிக் கொண்டிருக்கின்றார். இப்போது நீங்கள் ஒவ்வொருவரும் தீவிர முயற்சியில் நம்பர்-1 வருவதற்கான லட்சியம் வைத்து அப்படியே ஆக வேண்டும். நாடகம் உங்களை அப்படியே மாற்றி விடும். அனைத்து குழந்தைகளுக்கும் எங்கெல்லாம் அமர்ந்திருந்தாலும் அனைத்து குழந்தைகளையும் பாபா பார்க்கின்றார் எவ்வளவு ஊக்கம் உற்சாகமாக ஆங்காங்கே கேட்கின்றீர்கள் பார்க்கின்றீர்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் அன்பு நிறைந்த நினைவுகள் மற்றும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்.

தாதிமார்களுடன்: நல்லது பாருங்கள் நிமித்தமாக இருக்கின்ற அனைத்து தாதிமார்களும் மிகவும் அன்பானவர்கள் (தாதி குல்ஜார் மிகவும் நல்லவர்) நீங்கள் இல்லையென்றால் என்ன செய்வது. அனைத்து தாதிகளுமே அன்பானவர்கள் விலகியும் இருக்கின்றார்கள். (பாபாவின் ஆசீர்வாதங்கள் அதிகமாகவே உள்ளது)

**சகோதரி மோகினியுடன்:** இவர் பலசாலி உடல் நலமாகி விடும். பாப்தாதா நடத்திக் கொண்டிருக்கின்றார் அல்லவா? இவரும் நன்றாக நடந்துக் கொள்கிறார் பாப்தாதா நடத்திக் கொண்டிருக்கின்றார் அவ்வப்பொழுது சிறிது கணக்கு வழக்கு முடிவடைந்து கொண்டே செல்கிறது. வந்து விட்டீர்களா? மிக நல்லது. பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தையும் பிரியமானவர்கள்தான். தாதிமார்கள் முன்னால் வந்து அமர்ந்திருக்கலாம், நீங்கள் வராமலிருக்கலாம் ஆனால் பாபாவுக்கு ஒவ்வொரு குழந்தையும் பிரியமான

குழந்தைகள்தான். இப்படி நினைக்காதீர்கள் நாங்கள் தூரத்திலிருந்து பார்க்கின்றோம், நீங்கள்தான் உள்ளத்தில் இருக்கின்றீர்கள். நல்லது.

பரதாதியுடன்: உங்களுடைய ஜோனிலிருந்து வந்துள்ளார்கள். பார்த்தீர்களா? எவ்வளவு நல்ல நல்ல குழந்தைகள் வந்துள்ளார்கள். நல்லது.

**மூன்று முக்கிய சகோதரர்களும் பாப்தாதாவிற்கு பூச்செண்டு வழங்கினார்கள்:** உங்களுடைய திரிமூர்த்தியும் நன்றாக உள்ளது. (சகோதரர் ரமேஷ் காட்லி வுட் ஸ்டுடியோவின் போட்டோவை பாப்தாதாவிற்கு காண்பித்து 25-ஜனவரி அன்று நடைபெற இருக்கின்ற திறப்பு விழாவைப் பற்றி சொல்கின்றார்) மிக்க நல்லது, நன்றாக நடத்துங்கள். அனைவருமே இணைந்து நடத்தி செல்லுங்கள். புது புது விசயங்களை செய்யுங்கள். அப்படியே நடைபெறும். சேவை என்றாலே பலனை அடைவதாகும். சேவை செய்வதில்லை நீங்கள் பலனை அடைந்து கொண்டிருக்கின்றீர்கள். (சகோதரி உஷாவிற்கு சேவையில் அதிகமான உற்சாகம் இருந்தது) அவரது நல்ல பாவனை இப்போது வேலை செய்யும் அவரது மனதில் இருந்த சேவைக்கான நல்ல பாவனை சேவை நடக்க வேண்டும். சேவை நடக்க வேண்டும் என்ற எண்ணம் வேலை செய்யும். சேவைக்கான ஊக்கம் இருந்தது எனவேதான் பரிவாரத்திற்கும் பிரியமானவராக பாபாவிற்கும் பிரியமானவராக இருந்தார். ரமேஷ் அவர்களுடன் உங்களுடைய உடல் நலமாக இருக்கிறதா நல்லவிதமாக நடத்தி செல்லுங்கள்.

**பூபால் சகோதரருடன்:** இப்போது ஆபீஸர் நன்றாகி விட்டாரா? இப்போது ஏதாவது செய்து கொண்டே இருக்கிறார். அவரை யோகத்தால் சரி செய்யுங்கள். அங்கு சென்று சிறிது சேவை செய்யுங்கள். அதன் மூலமாக அவேர் இவர்களுக்கு எவ்வளவு சுப சிந்தனை உள்ளது என்பது புரிந்து கொள்வர். இதை கண்டிப்பாக அனுபவம் செய்ய வேண்டும். பிறகு எல்லாம் சரியாகி விடும். நல்லது!

**சகோதரர் கோலக் உடன்:** (மிகவும் உழைக்கின்றார்) உழைப்பிற்கான பலன் இவருக்கு உள்ளூரக் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. செய்யும் முயற்சி வீண் போவதில்லை. முயற்சிக்கான பலன் அனைவரது

அன்பும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. ஏதோ விசயம் நடந்தது அது வேறு ஆனால் உள்ளப்பூர்வமான அன்பு உள்ளது. நல்லது!

<u>தாதா நாராயணன் மற்றும் மனோஜ் அவர்களுடன்:</u> இருவரும் வந்துள்ளார்கள் மிக நல்லது நல்லது வந்து விட்டீர்கள். ஒவ்வொரு முறையும் நீங்கள் வர வேண்டும். முதலில் வந்திருந்தோம். இப்போது அவ்வப்போது வருகின்றீர்கள். இது பாபாவுக்கு நன்றாக இல்லை. ஒவ்வொரு முறையும் வர வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு ஆத்மாவும் முன்னேறி செல்ல வேண்டும் என்பது பாபாவின் விருப்பம். வந்து சந்தித்து சென்றால் குஷி இருக்கும். முகம் மலர்ச்சி அடையும். மேலும் எண்ணம் நீங்கி விடும். இல்லையென்றால் எண்ணம் வரும் அல்லவா? அவர்களும் குஷி அடைவார்கள் ஏனென்றால் ஞானம் கிடைத்தது அல்லவா? இவர்களும் குஷியாக இருப்பார்கள். நீங்கள் இருவரும் உங்களை பார்த்து பிறர் இவர்களுக்கு எங்கிருந்து இந்த குஷி கிடைக்கின்றது என்று கேட்க வேண்டும். அப்படியாக வேண்டும் நல்லது குஷியாக இருப்பீர்கள் அல்லவா? பிரச்சனைகள் எல்லாம் முடிந்து விடும். உத்திரவாதம். சிந்திக்கிறீர்கள் அல்லவா? குஷியாக இருங்கள் எந்தளவு குஷியோ அந்தளவு உடல் நலமாக இருக்கும். பார்ப்பவர்களும் மகிழ்ச்சி அடைவார்கள். பரிவாரத்துடன் சம்பந்தம் உள்ளது அல்லவா? எவ்வளவு உறவினர்கள் இருக்கின்றார்கள். எங்கு வேண்டுமானாலும் இருங்கள் ஆனால் முகத்தின் மூலமாக சேவை செய்யுங்கள். பார்ப்பவர்கள் எல்லாம் யார் இவர் எங்கிருந்து வந்துள்ளார். என்று நினைக்க வேண்டும். இங்கிருந்து பாலனை அடைந்துள்ளர்கள் அல்லவா?

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## **02.02.2012 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

# தற்போது ஸ்மிருதி சொரூப அனுபவத்தின் அதாரிட்டி ஆகுங்கள். ஜுவாலாமுகி யோகத்தின் மூலம் அனைவருக்கும் ஒளி மற்றும் சக்தியின் கிரணங்களின் சகயோகம் அளியுங்கள்!

இன்று பாப்தாதா தனது எதிரில் மற்றும் நாலாபுறங்களிலும் உள்ள தனது சிறிய (குடும்பத்தை) உலகைப் பார்த்து புன் சிரிக்கின்றார். ஏனென்றால் இந்த உலகம் சிறியதாக இருக்கின்றது ஆனால் மிகவும் அன்பானதாக உள்ளது. ஏனெனில், இந்த உலகின் ஒவ்வொரு ஆத்மாவும் மிக சிரேஷ்ட ஆத்மாவாகும். கோடியில் ஏதோ ஒரு ஆத்மாக்கள். பாபாவின் ஆஸ்திக்கு அதிகார உரிமையுள்ள ஆத்மாக்கள்! பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து குஷி அடைகின்றார். ஒவ்வொரு குழந்தையும் ராஜா குழந்தையாகும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் சுயராஜ்ய அதிகாரி மற்றும் விஷ்வ ராஜ்ய அதிகாரியாக ஆக்கியுள்ளார். இந்த சமயத்தில் அனைவரும் சுயராஜ்ய அதிகாரிகள் அதாவது மனம், புத்தி, சம்ஸ்காரம் மற்றும் கர்மேந்திரியங்களின் ராஜாவாக இருக்கிறீர்கள். கர்மேந்திரியங்களின் வசம் ஆக இல்லை. மனதிற்கும் எஜமானர் ஆவீர்கள். அவ்வாறே நீங்கள் ஒவ்வொரு குழந்தையும் தன்னை மனதின் எஜமானர்கள், சம்ஸ்காரங்களில் கூட எஜமானராக அறிகிறீர்களா? சில சமயம் மனதின் எஜமானர்களாக இருக்கிறீர்கள், சில சமயம் மனம் உங்களின் எஜமானராக இருக்கிறது. ஏனெனில் நீங்கள் சொல்வதே என்னுடைய மனம் நான் மனம் என்று சொல்வதில்லை ஆக எனது என்பதின் நீங்கள் எஜமானர்கள் சில சமயம் மனம் எஜமானர் ஆகவில்லையே என்று சோதனை செய்யுங்கள். இந்த சமயத்தில் ஒவ்வொருவரையும் சுயராஜ்ய அதிகாரி என்னும் இருக்கையில் அமர்த்தியுள்ளார்.

இப்பொழுது சுயராஜ்ய அதிகாரிகள், மேலும் எதிர்கால ராஜ்யம் உங்களுடையது. இரட்டை ராஜ்ய அதிகாரிகள். பாப்தாதா பார்க்கின்றார். ஒவ்வொரு சுய ராஜ்ய அதிகாரியின் கூடவே சுய சுவமான் (மரியாதை) அதிகாரியாகவும் இருக்கிறீர்கள். ஆக, நான் சுவமான்தாரி ஆத்மா, இந்த உணர்வில் அமருங்கள். அப்பொழுது பாருங்கள் எவ்வளவு சுவமானங்களின் பட்டியல் உங்கள் முன் வருகிறது. அநேக சுவமான்களின் மாலை எதிரில் வந்து விடுகிறது அல்லவா?

பாப்தாதா குழந்தைகளின் சுவமான்களின் மாலையை ஒவ்வொரு குழந்தைக்கும் அணிவித்துள்ளார். சுவமான் என்று கேட்டவுடனேயே உங்களின் எதிரிலேயே உங்களின் சுவமான் நினைவில் வந்து விடுகிறது. நினைத்துப் பாருங்கள், அனாதி சொரூபத்தில் உங்களின் சுவமானம் எவ்வளவு பெரியது. அனாதி சொரூபத்தில் போய் விட்டீர்களா? ஒவ்வொருவரின் சுவமானம் ஒன்று பாப்தாதாவின் கூடவே பிரகாசிக்கின்ற ஆத்மா, பாபாவின் துணையின் காரணத்தால் விசேஷமாக பிரகாசமாக தென்படுகின்றது. பார்க்கிறீர்களா? எப்படி ஆகாயத்தில் கூட சில சில நட்சத்திரங்கள் விசேஷமாக பிரகாசிக்கின்றன. அப்படி பாபாவின் கூடவே இருப்பதன் காரணமாக பிரகாசிக்கின்ற ஆத்மா ஆவீர்கள். நினைவிற்கு வந்ததா? உங்களின் அனாதி சொரூபம்? ஒரு வினாடியில் தனது அனாதி சொரூபத்தின் ஸ்திதியில் ஸ்திரமாக (நிலையாகி விட) முடியுமா? இப்பொழுது ஒரு வினாடியில் அந்த அனாதி சொரூபத்தில் ஒரு வினாடிக்காக ஸ்திரமாகி விடுங்கள்! எவ்வளவு போதை ஏறுகிறது. இன்னும் சற்று முன்னே செல்லுங்கள். சிருஷ்டி சக்கரத்தின் ஆத்மாக்கள் ஆரம்பத்தில் வந்து விட்டீர்கள். இப்பொழுது அந்த பயிற்சியை (டிரில்) செய்யுங்கள். சத்யுகத்தின் ஆரம்பத்தில் உங்களின் சொரூபத்தைப் பாருங்கள். எவ்வளவு சிரேஷ்ட சுக சொரூபமாக இருக்கிறது. எவ்வளவு அனைத்து பிராப்திகளின் சொரூபமாக இருக்கிறது. துக்கத்தின் பெயர் அடையாளமே கிடையாது. இயற்கை எவ்வளவு அழகாக சதோகுணம் நிறைந்ததாக இருந்தது. அனுபவம் செய்யுங்கள். தனது தேவதா சொரூபத்தினைப் பார்க்கிறீர்களா? எந்த ஒரு ராஜாவோ, மகாத்மாவோ, அரசியல்வாதியோ அனைத்து பிராப்திகளின் சொரூபமாக இருப்பதைப் பார்த்துள்ளீர்களா? ஒரு வினாடிக்காக தனது தேவதா சொரூபத்தில் ஸ்திரமாகி விடுங்கள். உங்களது சுவமானத்தில் (மரியாதை) மிகுந்த

ஆனந்தம் பிறக்கிறது அல்லவா? நாமே தேவதைகளாக இருந்தோம்.... பாப்தாதா இந்த பயிற்சியை (டிரில்) செய்வித்துக் கொண்டிருக்கிறார். சற்று கீழே வாருங்கள் எந்த யுகம் வந்தது. துவாபரயுகத்தில் கூட உங்களது சுவமானம் (பூஜ்ய சொரூபம்) அல்லவா? உங்களது பூஜ்ய சொரூபத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? எவ்வளவு தூரம் அனைவரும் பாவனையோடு விதிப்பூர்வமாக பூஜை செய்கிறார்கள். அதே போன்ற விதிப்பூர்வமான பூஜை வேறு எவருக்கும் நடப்பதில்லை. மதங்களின் தலைவர்களாக இருந்தாலும் சரி, குருவானாலும் சரி, அரசியல்வாதிகள், நடிகர்கள் ஆனாலும் சரி, ஆனால் இம்மாதிரி விதிக்கு உட்பட்டு பூஜை எவருக்கும் நடப்பதில்லை. ஆக, உங்களின் சுவமானத்தைப் பார்த்தீர்களா? அனுபவம் செய்தீர்களா? இப்பொழுது சங்கமயுகத்தில் சுற்றி வருகிறீர்களா? பின்னால் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். உங்களது சுவமானை (சுயமரியாதை) எண்ணிப் பாருங்கள். ஏனெனில் சுயராஜ்ய அதிகாரிகள் அல்லவா? ஆக, நீங்கள் சங்கம யுகத்தில் சுயம் பகவான் உங்களது வாழ்க்கையில் சுயம் எஜமான், குழந்தைகளாகிய உங்களுள் தூய்மையின் விசேஷத்தை நிரப்புகிறார். அந்த தூய்மை உங்களது அனைத்து அழிவற்ற சுகத்தின் சுரங்கமாகும். ஆக அவ்வாறு ஆக்கக் கூடியவர் யார்? சுயம் பகவான் இப்பொழுது கூட பிரத்யட்சமாக (வெளிப்படையாக) உங்களுக்கு தூய்மையின் சொத்தை பாபாவிடமிருந்து பிராப்தம் ஆகி விட்டது. இப்பொழுது சோதனை செய்து பாருங்கள். தூய்மை அனைத்து பிராப்திகளின் ஆதாரமாகும். தூய்மையின் மூலமே நீங்கள் அனைவரும் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி விட்டீர்கள். எனவே, சோதனை செய்து பாருங்கள். அனைத்து சக்திகளும் கிடைத்துள்ளதா? சில சில குழந்தைகள் கூறுகிறார்கள் தந்தையோ அனைத்து சக்திகளையும் தந்துள்ளார் ஆனால் சில சமயம் எந்த சக்தியினுடைய அவசியம் ஏற்படுகிறதோ அது சற்று நேரம் கழித்து வருகிறது. விசயமோ முடிந்து விட்டது அதன் பிறகு வருகிறது. இதன் காரணம் என்ன? வரதானமாக தந்தை கொடுத்துள்ளார். பிறகும் கூட சரியான சமயத்தில் வருவதில்லை என்ன காரணம்? தனது மாஸ்டர் சர்வ சக்திவானுடைய நினைவின் இருக்கையில் இருப்பதில்லை. யாருடைய கட்டளையாவது மதிக்கும்போது இருக்கையில் இருப்போரின் கட்டளையைத்தான் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆக நீங்கள் ஏதேனும் ஒரு சக்தியை கட்டளை இடும்போது முதலில் இதைப்

பாருங்கள். நினைவு என்னும் இருக்கையில் அமர்ந்துள்ளீர்களா? சுவமானத்தின் இருக்கையில் உள்ளேனா?

நினைவு என்னும் (ஸ்மிருதி) ஸ்திரமாகி விடுங்கள். அப்போது அனைத்து சக்திகளும் உங்களிடம் சரியான சமயத்தில் வருவதற்குக் கட்டுப்பட்டுள்ளன. ஏனென்றால் சர்வ சக்திவான் தந்தை உங்களை மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆக்கியுள்ளார், ஆக, இவ்வளவு சக்தி நிறைந்தவர்களாக சுவமான்தாரியாக ஆகுங்கள். அப்படி நடக்கிறீர்கள்தானே? உங்களது சுவமான்களைப் பாருங்கள் சங்கமயுகத்திற்கு பிறகு எங்கே செல்வீர்கள்? திரும்பும் பயணம் அல்லவா?

எனவே பாப்தாதா இதையே விரும்புகிறார் -ஒவ்வொருவரும் நாள் முழுவதிலும் இந்த பயிற்சியை செய்து கொண்டிருங்கள். அதற்கு சமயத்தை ஒதுக்குங்கள். அடிக்கடி இந்த சுவமானத்தின் மாலையை அணிவிப்பதின் மூலம் அனுபவம் செய்யும்போது பாப்தாதா எப்படி சுயராஜ்ய அதிகாரியாக ஆக்கியிருக்கும்போது, சுவமானும் உங்களது கட்டளைப்படி நடக்காமல் இருக்குமா? உங்களது இருக்கையில் மட்டும் அமர்ந்து விடுங்கள் அவ்வளவே! பாப்தாதா பார்த்தார், அனைவரும் கவனம் வைக்கிறீர்கள் ஆனால் விதிப்பிரகாரம் தனது தினசரி நடவடிக்கையை சரி செய்யுங்கள். அமைத்துக் கொள்ளுங்கள். இடை இடையே தனது சுவமான ஸ்மிருதியின் நினைவில் ஸ்திரமாகி விடுங்கள், அதாவது டிராபிக் கன்ட்ரோல் செய்கிறீர்கள். சுவமானத்தின் நினைவு ஆதி காலத்திலிருந்து திரும்பும் பயணம் வரை இடை இடையே நேரத்தை நிச்சயித்துக் கொள்ளுங்கள். இதனை போகும்போதும், வரும்போதும் கூட செய்ய முடியும். ஏனெனில் மனதை இருக்கையில் இருக்க வைக்க வேண்டும்.

பாப்தாதா பார்த்தார் ஏற்கனவே கூட கூறியுள்ளார் -யோகம் என்பதை எல்லோரும் செய்யத்தான் செய்கிறீர்கள் ஆனால் தற்போது எது மிக அவசியமாக இருக்கிறது? சமயத்தின் சூழ்நிலையைப் பார்த்து ஏற்கனவே கூட கூறினோம். இப்பொழுது ஜுவாலாமுகி (எரிமலை) யோகம் மிக அவசியம். அதன் மூலம் இரட்டை வேலையாகும். ஒன்று பழைய சம்ஸ்காரம் எரிந்து போய் விடும். இப்பொழுது

சம்ஸ்காரங்களைக் கொல்கிறீர்கள் ஆனால் எரிப்பதில்லை. எனவே இறந்த பிறகும் கூட சில சமயம் மீண்டும் எழுந்து விடுகிறது. எப்படி இராவணனைக் கொல்லவில்லை, ஆனால் எரித்து விடுகின்றனர். அதுபோலவே இடை இடையே உங்களுடைய தீவிர புருஷார்த்தத்தை குறைக்கக்கூடிய பழைய சம்ஸ்காரங்களைக் கொல்வதற்கு ஜுவாலாமுகி யோகத்தின் அவசியம் தேவை. ஒன்று தனக்காக. அடுத்து பிறருக்காகவும், ஜுவாலாமுகி யோகத்தின் மூலம் பிறருக்கும் ஒளி மற்றும் சக்தி ரூபத்தின் காரணமாக அவர்களுக்கும் கூட தங்களது கிரணங்களின் மூலம் உதவி அளிக்க முடியும். ஆக இப்பொழுது அனைவரும் யோகத்தை ஜுவாலாமுகி யோகமாக மாற்றி உள்ளீர்களா? சமயத்தின் பிரகாரம் தற்பொழுது ஆத்மாக்களுக்கு உங்களது உதவி கூட தேவைப்படுகிறது. இப்பொழுது பாப்தாதா அமிர்த வேளையில் ஒவ்வொரு குழந்தையின் சினேகத்தைப் பார்க்கிறார்.

பாப்தாதா பார்க்கின்றார். லட்சியம் மிக நன்றாகவே வைக்கிறீர்கள். தைரியமும் கூட வைக்கின்றீர்கள் ஆனால் கவனம் எப்படி அமிர்தவேளையில் இருக்கின்றதோ அது நாள் முழுவதிலும் குறைந்து போகிறது அதன் காரணம் என்ன? இந்த கர்மங்களில் ஈடுபடும்போது கர்மயோகி ஆகி கர்மங்களைச் செய்வதில் வித்தியாசம் ஏற்பட்டுவிடுகிறது. நீங்கள் வெறும் யோகத்தைச் செய்யக் கூடியவர்கள் அல்ல. யோக வாழ்க்கை உடையவர்கள். ஆக, வாழ்க்கை என்பது சதா நிரந்தரமாக இருப்பது. அவ்வப்போது இருப்பது அல்ல, ஆக பாப்தாதா என்ன விரும்புகிறார்? அன்பில் நீங்கள் அநேகமாக பாஸ் ஆகி விட்டீர்கள். அன்பு எனும் பாடத்தில் பாபா பார்க்கும்போது பெரும்பாலான குழந்தைகள் பாபாவின் கூடவே என்னுடைய பாபா! என்னுடைய பாபா என்று கூறி அன்பின் அனுபவத்தைச் செய்கிறார்கள் ஆனால் அன்பிலோ பெரும்பாலானோர் பாஸ்! இப்போது எதில் பாஸ் ஆக வேண்டும்? பாபாவிற்குச் சமமாக ஆவதில்! அனைவரும் என்ன விரும்புகிறீர்கள்? பாபாவுக்குச் சமமாக ஆக வேண்டும். பாபா பாபா என்றே இருப்பார். நீங்கள் குழந்தைகள், ஆக அவருக்குச் சமமாக ஆக வேண்டும் அல்லவா? அன்பு என்றால் என்ன? அன்பானவர்கள் எதைச் சொல்கிறார்களோ அதை செய்தே ஆக வேண்டும். ஆக அனைவரும் பாபாவிற்கு அன்பானவர்களா, பாபாவுடைய அன்பு உங்கள் மீது உள்ளது. இதில் கை உயர்த்துங்கள். அன்பு இருக்கிறதா? இப்பொழுது பாப்தாதா

இதையே விரும்புகிறார். பாபாவுக்குச் சமமமாக ஆகியே தீர வேண்டும் என்று நிச்சயம் கொள்ளுங்கள் இதில் கை உயர்த்துங்கள். மிக நன்றாகவே கை உயர்த்துகிறார்கள். பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

பாப்தாதா விரும்புகின்றார் ஒவ்வொரு குழந்தையும் அந்த மாதிரி குஷி நிறைந்த அதிர்ஷ்டசாலிகளாக முகத்தின் மூலமாக, நடத்தையின் மூலமாகத் தெரிய வேண்டும். ஏனெனில், சமயத்தின் பிரகாரம் இப்பொழுது உங்களது முகம் மிகவும் சேவை செய்யும், அதன் அவசியமும் அதிகமாகும். எனவே பாப்தாதா விரும்புகிறார் இப்பொழுதிலிருந்தே லட்சியம் வையுங்கள் எப்படி இப்பொழுது 75வது வருடம் காரணமாக அனைவருக்கும் சேவை செய்வதற்கான உற்சாகம் பிறந்துள்ளது. எப்படி உற்சாகமோ அப்படி முகத்தின் மூலமே சேவை செய்ய வேண்டும். ஏனென்றால் நாளுக்கு நாள் சமயம் மிக மோசமாக ஆகத்தான் வேண்டும். ஆக இந்த மாதிரி சமயத்தில் உங்களின் முகமானது ஆத்மாக்களுக்கு மகிழ்ச்சிகரமாக ஆக்கி விட வேண்டும்.

பாப்தாதா இன்று அமிர்தவேளையில் சுற்றி வந்தார். என்ன பார்த்தார்? எல்லோரும் அமருகிறார்கள் மிகவும் ஆர்வத்துடன்தான் ஆனால் அனைத்திலும் மேலானது அதாரிட்டி. அனுபவத்தின் அதாரிட்டி ஆகும். ஆக என்ன பார்த்தார்? அமருகிறார்கள் ஆனால் அனுபவத்தின் அதாரிட்டி மற்றும் ஸ்மிருதி சொரூபம் அனுபவம் ஆக வேண்டும். அனுபவத்தின் அதாரிட்டியின் ஆனந்தம் அது சிறிது நேரத்திற்கு ஏற்படுகிறது. நினைக்கிறார்கள் நான் பாப்தாதாவின் மன சிம்மாசனத்தில் இருப்பவன் ஆவேன் (நஷின்) ஆனால் நினைவு சொரூபத்தின் அனுபவி மூரத். இந்த அனுபவத்தில் மூழ்கி விட வேண்டும். அதை இன்னும் அதிகமாக அதிகரிக்க வேண்டும். ஏனென்றால் அனுபவத்தின் அதாரிட்டியே அனைத்திலும் சிறந்ததாகும். ஸ்மிருதி சொரூபத்தில் இருப்பது இதுவே அனுபவம் என்று அழைக்கப்படுகிறது. அனுபவத்தில், ஸ்மிருதி சொரூபத்தில் நிலைத்து இருப்பது, அதே சொரூபத்தில் அனுபவத்தில் மூழ்கி விடுவது, அதாவது சொரூபத்தின் ஸ்மிருதியை வைக்கிறார்கள். அந்த சொரூபத்தின் அனுபவத்தில் இருக்க வேண்டும். இதுவே இப்பொழுது மிக அவசியமாகும். ஏனெனில் அனுபலம் என்பது ஒருபோதும்

மறப்பதில்லை. எவருக்கேனும் நீங்கள் யார் மூலமாவது அனுபவம் சொல்வதற்கு முயற்சி செய்கிறீர்கள். ஏனெனில் அனுபவத்தின் மூலம் பிரபாவம் ஏற்படுகிறது. ஆக எந்த சொரூபத்தின் ஸ்மிருதியில் வைக்கிறீர்களோ அந்த சொரூபத்தின் அனுபவத்தில் மூழ்கி விட வேண்டும். அனுபவம் தனது புருஷார்த்தத்திலும் கூட மிகவும் உதவி செய்கிறது. ஆக பாப்தாதா பார்த்தார், அனுபவத்தின் அதாரிட்டியில் நம்பர்பிரகாரம் இருக்கின்றனர். ஆக இப்பொழுது இந்த அனுபவத்தின் அதாரிட்டியின் அப்பியாசத்தில் இன்னும் அதிகம் கவனம் தாருங்கள், அனுபவ சொரூபத்தின் ஸ்திதி எப்பொழுதும் பொருந்தியிருப்பதாகவே உள்ளது. அவர்களது முகம் மற்றும் நடத்தை சேவை செய்கிறது.

ஆக, இன்று பாப்தாதா குழந்தைகளின் ரிக்கார்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒன்று ஜுவாலாமுகி யோகத்தின் மீது மேலும் கவனம் வையுங்கள். அதன் மூலம் சுபாவ, சம்ஸ்கார மாற்றத்தில் உதவி கிடைக்கும். சம்ஸ்காரம் இப்பொழுது அதனை நீங்கள் எனது இயற்கை என்று சொல்கிறீர்கள் அது இப்பொழுது கூட இடை இடையே தனது வேலையைக் காண்பித்து விடுகிறது. மற்றபடி பாப்தாதா குஷியாய் இருக்கிறார் எந்த விசயத்தில் தெரியுமா? எந்த விசயத்தில் பாப்தாதா குஷியாக இருக்கிறார்? தற்போதைய முரளி கேட்கும்போது பாப்தாதா பார்த்தார் தனது தினசரி நடவடிக்கைகளில் கவனம் அதிகரித்துள்ளது. எனவே கவனம் அதிகரிக்கிறது என்றால் சம்ஸ்காரங்களின் டென்ஷன் குறைந்துக் கொண்டே போகும். பாப்தாதா ஏற்கனவே கூறியுள்ளார்.

எப்பொழுது எல்லாம் டென்ஷன் வருகின்றதோ, 'அ' என்பதை சேர்த்துக் கொள்ளுங்கள். 'அ' என்றால் அட்டென்ஷன். எல்லோரும் செல்லத்தான் வேண்டும். கூடவே செல்வோம் கூடவே ராஜ்யம் செலுத்துவோம். அனைவரும் குஷியாக இருக்கிறீர்களா? அல்லது அவ்வப்போதுதான் குஷியா?தான் சதா குஷியாக இருக்கின்றேன் என்று நினைப்பவர்கள் நன்றாக சிந்தித்து கை உயர்த்துங்கள். நல்லது. கையை கூட யோசித்து யோசித்து உயர்த்துகிறார்கள். குஷி தனது உடமையாகும். நமது உடமையை ஏன் விட வேண்டும்? ஆக இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்? மேலும் முன்னே செல்லத்தான் வேண்டும். மேற்கொண்டு என்ன செய்வீர்கள்?

ஒவ்வொரு சென்டரும் நிர்விக்னமாக (தடைகளற்ற) வியர்த்த சங்கல்பங்கள் இல்லாதிருக்க வேண்டும் இது நடக்கக் கூடுமா? அல்லது இன்னும் சமயம் வேண்டுமா? இதுவரை பாப்தாதாவிடம் எமது சென்டர் சதா நிர்விக்னமாக உள்ளது என்று எந்த சென்டரும் ரிப்போர்ட் தரவில்லை, கூட இருப்பவர்களும்!தான் மட்டும் அல்ல, கூட இருப்பவர்களும் தடை போடுபவர்களா இருக்கக் கூடாது. அந்த நேரம் கூட வரும். ஏனெனில் குழந்தைகள் தானே ஆக வேண்டும். மேலும் வேறு யாராவது முன் உதாரணமாக வந்தார்கள் என்றால் பின்னால் தீவிர புருஷார்த்தி ஆகி முன்னேறிச் செல்வார்கள். பெரும்பாலும் நீங்கள்தான் முன்னால் செல்ல வேண்டும். பாப்தாதா பார்த்தார் அனைவருக்கும் முரளியின் மீது அன்பு உள்ளது ஆனால் எப்படி ஜெகதம்பா தனது நடைமுறை வாழ்க்கையில் செய்து காண்பித்தார், பாப்தாதா என்ன சொன்னாரோ அதை அப்படியே செய்ய வேண்டும் என்ற லட்சியம் வைத்திருந்தார். அதே சமயம் புருஷார்த்தத்திலும் கவனம் செலுத்தினார். தற்போது அட்வான்ஸ் பார்ட்டியில் உள்ள உங்களது தீதி, தாதிமார்கள் அவர்களும் கூட கவனம் வைத்தனர். இப்பொழுது உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இறுதி நேரத்தின் கதவை எப்போது திறப்பார் பாபா என்று அட்வான்ஸ் பார்ட்டியாளர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர். ஓரிருவர் சேர்ந்து திறக்க மாட்டார்கள் அல்லவா? எனவே இப்பொழுது வாசலைத் திறக்கும் சமயத்தை அருகாமையில் கொண்டு வருவதற்கான புருஷார்த்தம் செய்யுங்கள். சம்பன்னம் ஆவது என்றால் அருகாமையில் கொண்டு வருவது.

நல்லது. நாலாபுறத்திலுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா உள்ளத்தின் சிநேகத்தை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். கூடவே பாப்தாதா இரண்டு மாதத்திற்கான காரியம் எதைத் தந்துள்ளாரோ அதனை ஞாபகமூட்டுகிறார் ஏன்? அநேகமாக வீணான எண்ணங்கள் புருஷார்த்தத்தை தீவிரத்திற்குப் பதிலாக சாதாரணமாக ஆக்கி விடுகிறது. எனவே நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா அன்பு நினைவின் கூடவே இந்த நினைவையும் ஊட்டுகிறார். இப்பொழுது இந்த சங்கமயுகத்தில் எவ்வளவு சிரேஷ்டமான சமயமாக

உள்ளதோ அவ்வளவு அனைத்து கஜானாக்களும் பாபாவிடமிருந்து கிடைக்கின்றன. இது சங்கமயுகத்தின் மகான் தன்மையாகும்.

எனவே சங்கமயுகத்தின் சமயத்தின் முக்கியத்துவத்தை சதா உங்களது புத்தியில் வையுங்கள். சங்கமயுகத்தின் ஒரு வினாடி கூட எவ்வளவு பிராப்தியை செய்விக்கிறது. எவரேனும் உங்களிடம் கேட்டால் உங்களுக்கு என்ன கிடைக்கிறது? என்ன பதில் சொல்வீர்கள்? எந்த பொருளும் எங்களுக்கு கிடைக்காமலில்லை. பிராமணர்களாகிய எங்களுக்கு கிடைக்க வேண்டியது எதுவோ அது கிடைத்து விட்டது. அதனை காரியத்தில் ஈடுபடுத்தி தீவிர புருஷார்த்தி ஆகி சமயத்தை அருகாமையில் கொண்டு வாருங்கள். நல்லது. பாப்தாதா பார்க்கின்றார் அனைவருக்கும் உற்சாகம் வருகிறது. இந்த உற்சாகத்தை சதா அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். நல்லது.

சேவைக்கான வாய்ப்பு பஞ்சாப் மண்டலம்: பாதி ஹால் பஞ்சாப்பினரே உள்ளனர். நல்லது. பஞ்சாப் காரர்கள் பஞ்சாபில் சேவையினுடைய வாய்ப்பை எடுத்துக் கொண்டு சேவைக்கான இடம் மற்றும் ஈஸ்வரிய மாணவர்களையும் நன்றாகவே ஆக்கியுள்ளனர். பஞ்சாபில் ஒரு விசேஷம் உண்டு. அனைவருக்கும் செய்தியைக் கொடுப்பதில் நல்ல புருஷார்த்தம் செய்திருக்கின்றனர். மேலும் பஞ்சாபின் வி.ஐ.பிகள் அவர்களையும் தொடர்பு சம்மந்தத்தில் கொண்டு வந்துள்ளனர். எனவே பாப்தாதா பஞ்சாபின் சேவையின் சேவாதாரி குழந்தைகள் மீது மகிழ்ச்சியாக உள்ளார். இங்கே டீச்சர்கள் கூட மிக தைரியமாக உள்ளனர். டீச்சர்கள் எண்ணிக்கையும் மிக அதிகம். இப்பொழுது பஞ்சாப் வாரிசு தரமான குழந்தைகளைக் கொண்டு வருவார்கள். சரியா? முன் உதாரணமாக கொண்டு வர வேண்டும். இதில் முதல் நம்பரை நீங்கள் எடுங்கள். எவரேனும் சகயோகியை, அவரது பேச்சு அநேகருக்கு உற்சாகம் ஆர்வத்தைத் தர வேண்டும். அம்மாதிரி வாரிசு தரமான குழந்தைகளை தயார் செய்து பாபாவின் முன்னால் கொண்டு வர வேண்டும். கொண்டு வர முடியுமா? கஷ்டம் என்பது கிடையாது எளிதுதான். ஆக இப்போது என்ன செய்வீர்கள்? வாரிசுகளைக் கொண்டு வருவீர்கள் அல்லவா? நிமித்தமாக உள்ள டீச்சர்கள் நன்றாக உள்ளனர், அவர்களால் செய்ய முடியும். இப்பொழுது முதல் நம்பரில் வர வேண்டும். முதலில் பஞ்சாப் வாரிசுகளை கொண்டு வர வேண்டும்.

அப்பொழுது அனைவரும் பார்ப்பர். இன்னும் கூட சீசன் உள்ளது. அம்மாதிரியானவர்களை கொண்டு வாருங்கள் அவ்வாறு பஞ்சாப் நம்பர்-1 ஆக வேண்டும். இது ஒன்றும் பெரிய விசயமல்ல. வெறும் சங்கல்பம் செய்தால்போதும். மாணவர்கள் கூட நன்றாக இருக்கின்றனர். உற்சாகம் ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்று பாப்தாதாவும் பார்க்கிறார். எங்கு உற்சாகம் இருக்கிறதோ அங்கு வெற்றி நிச்சயம் உண்டு. பாப்தாதா பஞ்சாபின் சிங்கம் என்று கூறுகிறார்கள் அல்லவா? பஞ்சாபின் சிங்கமான குழந்தைகள் மீது மிகவும் குஷி. இப்பொழுது சென்று நம்பர்-1 வாரிசு குழந்தைகளை பஞ்சாப் குழந்கைள்தான் கொண்டு வர வேண்டும். இந்த வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துள்ளது. சக்தி கிடைக்கிறது. பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது. ஒரே மண்டலம் அனைத்து விதமான சேவைகளுக்கு நிமித்தமாகி உள்ளது. வாய்ப்பும் கிடைக்கிறது. மேலும் பாக்கியமும் ஏற்படுகிறது. இது வரை மண்டல் சேவை செய்து வருபவர்கள் (சேவைக்கான முறை) அநேகமாக திருப்தியாகியே செல்கிறார்கள் சரிதானே? ரிப்போர்ட் சரிதானே? நல்லது, பாப்தாதா குஷியடைகிறார். நான்கு துறைகளின் மீட்டிங் நடந்துள்ளது (ஸ்பார்க், மீடியா, விளையாட்டு, மத பிரிவு) இந்த நான்கு துறைகளுமே சேவைக்காக மிகவும் உதவிகரமாகவும் உள்ளன. மேலும் அதிகமாகவும் ஆக முடியும். ஏனெனில் இந்த நான்கு துறைகளும் அநேகரை தொடர்பில் கொண்டு வர முடியும். உதாரணமாக -இப்பொழுது ஒவ்வொரு வீட்டிலும் செய்தியை சேர்ப்பிப்பதற்கான திட்டத்தை மீடியா நன்றாகவே செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா குஷியடைகிறார். ஒன்று சகயோகியாகிறார்கள். நன்கு முன்னேறியுள்ளனர், முன்னேறிக் கொண்டும் இருக்கின்றனர். ஆக பாப்தாதா இப்பொழுது மீடியாவின் மூலம் இதையே விரும்புகிறார். இப்பொழுது சமயத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் தனது தந்தையிடமிருந்து ஆஸ்தி பெறுவதற்கான பிரேரணை கிடைக்க வேண்டும் என்கிற செய்தி ஒவ்வொருவருக்கும் கிடைக்கட்டும். கேட்கிறார்கள், ஆனால் எவ்வளவு வாரிசுகள் கிடைத்துள்ளனர்? மீடியா மூலம் இதுவரை எத்தனை வாரிசுகள் கிடைத்துள்ளனரோ அந்த பட்டியல் வர வேண்டும். பாப்தாதா இதனுடைய பிரபாவம் நன்றாக உள்ளது என்பதை பாபா கேள்விப்பட்டார். மேலும் ஈஸ்வரிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது ஆனால் அதன் பட்டியலை எடுங்கள். ஒவ்வொரு சென்டரிலும் ஒவ்வொரு மண்டலத்திலும் இந்த

மீடியா சேவையின் மூலம் எவ்வளவு பேர் வந்துள்ளனர்? இம்மாதிரியே என்னென்ன துறையாக இருந்தாலும் சரி, இப்பொழுது இந்த பட்டியலை தயார் செய்யுங்கள். அநேகர் இந்த பட்டியலைக் கொடுத்தும் உள்ளனர். தொடர்பில் வரக்கூடியவர்கள், வி.ஐ.பிக்கள் அந்த பட்டியல் கூட உள்ளது ஆனால் அவர்களை ஒன்றாக அழைத்து உற்சாகம் ஆர்வம் தந்து முன்னேறச் செய்யுங்கள். தொடர்பில் வரத்தான் செய்கிறார்கள் ஆனால் மேற்கொண்டு இம்மாதிரியான நிகழ்ச்சிகளைச் செய்யுங்கள். அதன் மூலம் அவர்களுக்கும் நாம் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று தெரியட்டும். கேட்டீர்களா, ஆனால் முன்னேற வேண்டும். அதைப் பற்றி கொஞ்சம் தெளிவாகக் கூறுங்கள். இந்த துறையின் மூலம் எத்தனை பேர் புதிதாக சேர்ந்துள்ளனர் என்கின்ற இந்த லிஸ்ட்'ஐ எடுங்கள். இருக்கத்தான் செய்கிறார்கள் ஆனால் தெரிவதில்லை. மற்றபடி பாப்தாதா அனைத்து துறைகளுக்கும் வாழ்த்துக்களைக் கொடுக்கிறார். ஏனெனில் ஒவ்வொரு துறையும் சேவையில் விருத்தி செய்ய வேண்டும் இந்த முயற்சியை செய்து கொண்டுதான் இருக்கிறது. மேலும் சேவையை அதிகரிப்பதற்கான திட்டங்களையும் நன்றாகத் தீட்டுகின்றனர். நான்கு துறைகளும் தங்களது சேவைகளை நன்றாகச் செய்கின்றனர். ஏனெனில் நாம்தான் பொறுப்பு என்பதை அந்த துறையினர் இப்பொழுது கூறுகின்றனர். முயற்சியும் நன்றாகச் செய்கின்றனர். எனவே பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். மேலும் இதே முறையில் எப்படி கவனம் தந்து துறைகளின் காரியத்தில் ஈடுபட்டுள்ளீர்களோ அதுபோல் மேலும் முன்னேறுங்கள் பாப்தாதா வாழ்த்துக்களை தெரிவிக்கிறார். வளர்கிறீர்கள் வளர்ந்துக் கொண்டே செல்லுங்கள். நான்கு துறைகளுக்கும் பாப்தாதா கூறுகிறார் -எந்த துறையும் பலகீனமாக இல்லை. தங்கள் கணக்குப்படி முன்னேறிக் கொண்டுதான் இருக்கின்றனர். மற்றபடி பாப்தாதா தந்துள்ள அந்த ஒரு வேலை கவனத்தில் இருக்கத்தான் செய்யும். ஒவ்வொரு துறையிலும் அம்மாதிரி மிகவும் புத்திசாலியான வி.ஐ.பிகளை தயார் செய்யுங்கள். அம்மாதிரி தைரியமான புத்திசாலியான ஒரு குரூப்பை தயார் செய்யுங்கள்.

இவ்வாறு பல துறைகளை சார்த்தவர்கள் ஒவ்வொரு விசயத்தையும் தெளிவாக்கட்டும். இந்த சேவையை கட்டாயம் செய்யுங்கள். இந்த

வேலையை முன்னால் அமர்ந்திருப்பவர்கள் செய் முடியும். தைரியம் ஊட்ட முடியும். இப்பொழுது நடைமுறையில் பிரம்மாகுமாரிகள் என்ன விரும்புகிறார்கள் என்று ஒலிக்கட்டும். இந்த 75-ஆண்டு கால சேவை பிரம்மாகுமாரிகளினுடைய மகத்துவத்தை தெளிவாக்கியுள்ளது. அவசியமானதுதான். செய்யக் கூடும் என்று. இதுவரை இந்த அளவு வரை வந்துள்ளனர். அனைத்து துறையினரின் சகயோகம் உள்ளது ஆனால் பரமாத்மா வந்துள்ளார் என்று தெரியவில்லை, பிரம்மாகுமாரிகள் வரை வந்துள்ளனர். பரமாத்மா வந்துள்ளார் என்பது இப்பொழுது தெரிய வருகிறது எந்த சமயம் கேட்கின்றனரோ அந்த சமயத்தில் போதை ஏறுகிறது ஆனால் மைதானத்தில் வருவது அந்த தைரியம் இப்பொழுது மெது மெதுவாக வந்து கொண்டிருக்கிறது. விரைவில் வரும் வரத்தான் வேண்டும். இப்பொழுது வருவதற்கு தைரியம் வந்துள்ளது. எந்த நிகழ்ச்சியைப் பார்த்தாலும் டல்லாக இருப்பதில்லை. வெற்றிகரமாக நடக்கிறது. முன்காலத்தில் எல்லாம் பெயர் கேட்ட உடனேயே ஓடுவர் இல்லையா? இப்பொழுது பிரம்மாகுமாரிகளுடைய செயல்கள் எல்லாம் நன்றாக உள்ளது. மேலும் விதிப்பூர்வமாக செய்கின்றனர் என்று சொல்கின்ற அளவுக்கு கவனம் தருகின்றனர். பாப்தாதா நான்கு துறைகளின் பெயர்களைப் பார்த்தார். தொடர்பில் இருப்பவர்களை எதிரில் கொண்டு வாருங்கள். அவர்களுக்கு தனி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுங்கள். அவர்கள் தாம் என்ன செய்ய முடியும் என்ற திட்டத்தைத் தாருங்கள்.

ஆக, செய்வதற்கான களம் தயாராகியுள்ளது. இப்பொழுது பலன் வெளிப்பட வேண்டும். எனவே பாப்தாதா மகிழ்ச்சியாக உள்ளார். செய்கின்ற முயற்சியில் அவர் பிஸியாக இருக்கின்றார். ஆக நான்கு துறையினருக்கும் வாழ்த்துக்கள். நல்ல புருஷார்த்தம் செய்துக் கொண்டிருக்கிறீர்கள். நல்லது வாழ்த்துக்கள் வெளிநாடுகளின் முக்கியமானவர்கள் வந்துள்ளனர் -மதுபனுடைய அலங்காரமே வெளிநாட்டினர் என்ற பட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. மதுபனின் அழகுக்கு அழகு சேர்ப்பவர்கள். மேலும் நன்கு மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளனர். பாப்தாதா புருஷார்த்தம், மாற்றம் இரண்டையும் பார்த்து குஷி அடைகிறார். முன்பு எல்லாம் ஏன் ஏன் என்று சொல்லிக் கொண்டிருந்தனர். இப்பொழுது ஆஹா! ஆஹா என்கின்றனர். நல்ல மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளனர். இப்பொழுது எந்த விசயத்திலும்

கஷ்டமே தோன்ற வில்லை. பாபாவின் முரளியில் என்னென்ன டைரக்ஷன் செல்கின்றதோ அவைகளைச் செய்வதில் தயாராக உள்ளனர். நல்ல சகயோகமும் அளிக்கின்றனர். சிநேகியாகவும், நல்ல சகயோகி களாகவும் இருக்கின்றனர். பாப்தாதா ரிக்கார்ட்டைப் பார்க்கின்றார், மறைவாக உதவியும் அளித்து வருகிறார். நல்ல நல்ல மறைவான சகயோகியும் இருக்கிறார்கள். அவர்களுடைய மனமும் விசாலமாக இருக்கின்றது. குறுகிய உள்ளம் உள்ளவர்கள் அல்ல. பாப்தாதாவும் குஷியாகவும் இருக்கிறார். சேவையும் கூட நாலாபுறங்களிலும் மிக நன்றாக நடந்து கொண்டிருக் கின்றது. பாப்தாதாவிற்கு இரண்டு விசயங்கள் வேண்டும். ஒன்று சேவையில் வளர்ச்சி, அடுத்து தடையற்று இருக்க வேண்டும். நிர்விக்ன (தடையற்ற) நிலை. ஆக இந்த இரண்டு விசயங்களிலும் மிகுந்த மாற்றம் வந்து விட்டது. மேலும் இது பாப்தாதாவிற்கு மிகவும் நன்றாக உள்ளது. மதுபனில் நிமித்தமானவர்கள் அனைவரும் கூடியுள்ளனர். ஒன்று மதுபனின் அலங்காரமாகி விடுகின்றன. கொண்டு வந்திருக்கின்ற மாற்றத்தை எங்கிருந்தவர்கள் கொண்டு வந்திருக்கிறார்களோ அது தெரியவும் வருகிறது. அனுபவங்களைக் கேட்கவும் செய்கிறார்கள். அதன் மூலமும் பிரபாவம் ஏற்படுகிறது. எப்படியென்றால் வெளி நாட்டவர் செய்ய முடியும்பொழுது நாம் ஏன் செய்ய முடியாது என்கின்ற உற்சாகம் ஏற்படுகின்றது. இப்பொழுது பாப்தாதா ஜுவாலாமுகி யோகம் வேண்டும் என்று விரும்புகிறார். இதில் வெளி நாட்டுக்காரர்கள் நம்பர்-1 ஆகுங்கள். ஏனெனில் வெளிநாட்டினருடைய சம்ஸ்காரமே என்ன லட்சியம் வைக்கிறார்களோ அதை பூர்த்தி செய்வது, இரண்டு விசயங்களில் முன் வரிசையில் வாருங்கள். ஒன்று வீணானவைகளை விலக்குவது, மேலும் இரண்டாவது சேவையில் நிர்விக்ன நிலை. அன்பு என்பது முழு குடும்பத்தில் உள்ளதுதான். வெறும் பாப்தாதாவின் அன்பு மட்டும் அல்ல ஆனால் முழு குடும்பத்தினரின் அன்பும் இரட்டை வெளிநாட்டினர் மீது உள்ளது. இந்த இரண்டு விசயங்களில் வெளிநாட்டினர் நம்பர்-1 ஆக இருந்து காண்பிக்க வேண்டும். அது ஒன்றும் பெரிய விசயம் அல்ல. பாப்தாதா வெளிநாடுகளிலும் சுற்றி வருகிறார், அமிர்தவேளையிலும் சுற்றி வருகிறார். இதில் அனுபவ சொரூபமாகி அமர வேண்டும். இதில் மேலும் கவனம் தேவை. ஏனெனில் அனுபவத்தின் அதாரிட்டி மிக மேலானது. லட்சியத்தை நன்றாக மனதில் வைத்துக் கொண்டு அமர்கிறார்கள் ஆனால்

அதனுடைய பிரபாவம் அதிகாலையின் சக்தி கர்ம யோகத்திலும் படிய வேண்டும். சென்டரினுடைய சூழ்நிலையிலும் பட வேண்டும். இது கொஞ்சம் கூடுதலாகத் தேவை, மற்றபடி பாப்தாதா குஷியாக இருக்கிறார். தைரியத்தை விடுவதில்லை. தைரியமாக இருக்கிறார்கள். பிறருக்கும் தைரியத்தை கொடுத்து நடத்துகிறார்கள். மேலும் பாபாவும் உதவி செய்கிறார். ஆக வெளிநாட்டவர் அல்ல, ஆனால் தமது தேசம் பரந்தாமம், அதனுடைய நல்ல அனுபவத்தைச் செய்து சமயத்தை அருகாமையில் கொண்டு வர வேண்டும். இதில் நீங்கள் முதலில் உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். முதலில் நாம் செய்து காண்பிக்க வேண்டும். நிமித்தமாகி காண்பிக்க வேண்டும். நல்லது.

பாப்தாதா குஷியாகத்தான் இருக்கிறார். இல்லையென்றால் குஷி இல்லை. டிச்சர்களைப் பார்த்து குஷி அடைகிறார். தைரியம் வைத்து பிறருக்கும் தைரியத்தை வழங்கி முன்னேறச் செய்கிறார்கள். அனைத்து விசேஷ டீச்சர்களும் ஒன்றாகக் கூடுகின்றனர். இந்த காட்சி பாப்தாதாவை மிகவும் மகிழ வைக்கிறது. அனைத்து விசயங்களும் தெளிவாகின்றன. உற்சாகம் ஆர்வங்களை நிரப்பியும் செல்கின்றனர். மேலும் உங்களைப் பார்த்து இங்கே உற்சாகம் ஆர்வம் ஏற்படுகிறது. நல்லது. ஒவ்வொரு ரத்தினத்திற்கும் பாப்தாதா, உள்ளத்தின் அன்பு மற்றும் மனதின் உற்சாகம் ஆர்வத்தின் அலைகளையும் தந்து கொண்டிருக்கிறார். நல்லது. அனைவரும் தங்களுக்காக அன்பு நினைவுகளை பெற்றுள்ளனர். வெறும் துறையினர் அல்லது வெளிநாட்டினர் மட்டும் பெற்றுள்ளனர் என்பது அல்ல. அனைவரையும் பாப்தாதா பார்க்கின்றார். பார்வையை செலுத்துகிறார். தங்களின் மூலம் அன்பு நினைவுகளைத் தருகிறார். நல்லது.

இன்று முதல் முறையாக வந்துள்ளவர்கள் எழுந்திருங்கள். முதல் முறையாக வந்துள்ளீர்கள் என்றால் அற்புதங்களை நிகழ்த்துங்கள். என்ன அற்புதங்களைச் செய்வீர்கள்? முதல் நம்பர் புருஷார்த்தம் செய்யுங்கள். இறுதியில் வந்தாலும் வேகமாகச் சென்று முதலில் வந்து காண்பியுங்கள் நடக்கக் கூடுமா. அம்மாதிரி கூட ரத்தினங்கள் வெளிப்பட வேண்டும். எனவே நீங்களே செய்து காண்பியுங்கள். பாப்தாதாவின் உதவி அனைவருக்கும் உள்ளது. தீவிர புருஷார்த்தம் இங்கே வந்துள்ளதால் சாதாரண புருஷார்த்தம் அல்ல, தீவிர

புருஷார்த்தம் செய்யுங்கள். செய்தே ஆக வேண்டும். ஆகியே தீர வேண்டும். முன்னேறிச் செல்ல வேண்டும். இந்த திட சங்கல்பத்தை வையுங்கள். அம்மாதிரி ஏதேனும் முன் மாதிரி வெளிப்பட வேண்டும். பாப்தாதாவிற்கு குஷியாக உள்ளது. இறுதி சமயத்திற்கு முன்பாகவே வந்து விட்டனர். ஆஸ்திக்கு அதிகாரிகளாக ஆகி விட்டனர். நல்லது.

பாப்தாதா குஷியாக இருக்கிறார். வந்துள்ளீர்கள் மிக்க நன்று. உங்களுடைய சீசன் ஆனால் நன்கு முன்னேறிச் சென்று காண்பியுங்கள். நாம் பின்னால் வந்திருக்கிறோமே என்று எண்ணாதீர்கள். மிகவும் முன்னேறிச் செல்ல முடியும். பாப்தாதாவின் நாடகத்தின் உதவி கிடைக்கும். நல்லது. பாருங்கள், எவ்வளவு பேர் வந்துள்ளார்கள். முதல் முறையாக வந்திருப்பவர்களே பாதி ஹால் நிறைந்து விட்டன. பாபாவை அறிந்துள்ளீர்கள் என்ற மகிழ்ச்சி பாப்தாதாவிற்கு உள்ளது. ஆஸ்திக்கு அதிகாரிகளாக ஆகி விட்டீர்கள். நல்லது. அனைவருக்கும் பாப்தாதா மற்றும் அனைத்து குடும்பத்தினரின் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

மோகினி சகோதரியிடம் ஒற்றுமையாக இருக்கும்போது அதில் கொஞ்சம் உற்சாகம் எழுகிறது. உற்சாகம் வரும்போது கொஞ்சம் சற்று வேகமாகவும் செய்து விடுகிறீர்கள். உங்களை நீங்களே சமாளித்துக் கொள்ளுங்கள். மற்றபடி உதவியோ உள்ளது. அந்த மாதிரி வேறு விசயம் ஏதும் கிடையாது. எல்லாம் சரியாகி விடும். உங்களது உடல் நலத்தைப் பார்த்து அடியெடுத்து வையுங்கள். கவலையற்று இருங்கள்.

தாதி ஜானகிஜியுடன் அனைவருக்கும் மிக நன்றாக புத்துணர்ச்சி ஊட்டுகிறீர்கள். செய்யத்தான் வேண்டும். (செய்விப்பவர் செய்வித்து கொண்டிருக்கிறார்) அவர் இருக்கத்தான் செய்கிறார். ஆனாலும் நீங்களும் செய்கிறீர்கள் இதை செய்யத்தான் வேண்டும். சரி. மிக நல்ல ஒரு பாகத்தை செய்து கொண்டிருக்கின்றீர்கள் (ஹன்சா சகோதரி தாதியின் உதவியாளர்) இவரும் நன்றாக தன் பாகத்தைச் செய்கிறார். அனைவரும் மகிழ்வடைகிறார்கள்.

பரதாதியுடன் நீங்களும் ஒரு நல்ல உதாரணம் உங்களைப் பார்த்து அனைவருக்கும் பிரம்மாபாபாவின் நினைவு தானாகவே வருகிறது.

இதில் கஷ்டம் ஏதும் இல்லையே அவ்வாறே முன்னேறிச் செல்கிறீர்கள். சரி அனைத்தும் சரியாகும்.

ரமேஷ் சகோதரருடன் நல்லது ஆனால் கூடவே உங்களுடைய ஆரோக்கியத்தையும் சரியாக வையுங்கள் கூடுதலாக காரியங்களில் செல்லாதீர்கள். ஏனெனில் இன்னும் நிறைய காரியங்கள் செய்ய வேண்டி உள்ளது. வெறும் ஸ்டுடியோ காரியம் மட்டுமல்ல. இன்னும் நிறைய காரியம் செய்ய வேண்டும். எனவே உடல்நிலை மீதும் கவனம் வையுங்கள். (சோலார் சக்தி காரியம் நடந்து கொண்டிருக்கிறது) சோலார் திட்டத்திற்காக எப்படி நீங்கள் பத்திரிக்கைகளுக்காக (விளம்பர உதவியாளர்கள்) எடுக்கிறீர்களோ அவ்வாறு இதற்கும் எடுக்க முடியாதா? பெரிய பெரிய கம்பெனிகளிடம் எப்படி விளம்பரத்திற்காகப் பெறுகிறீர்களோ அவ்வாறே இதற்கும் அம்மாதிரி தொடர்பில் உள்ள ஒருவரிடம் சென்று பெற முடியும். ஏனெனில் இந்த சேவையில் உணவு சம்பந்தப்பட்ட விசயம் ஏதுமில்லை. நாம் உண்பதற்காகவும் உடுப்பதற்காகவும் இவ்வாறு வாங்குவதில்லை. இது சேவை பாவனை குறித்ததாகும். யார் அறிமுகமானவர்களோ அவர்களிடம் இதனை செய்து பாருங்கள்.

நிர்வயர் சகோதரர் கூறுகிறார் மிகப் பெரிய சமையல் கூடம் தயாராகிக் கொண்டிருக்கிறது, தயாராகி விடும்.

மூன்று சகோதரர்களிடமும் பொறுப்பாக உணர்ந்து உங்களிடையே ஆலோசனை செய்து எவரது ஆலோசனையிலும் ஏதேனும் சிறிது வித்யாசம் இருந்தாலும் ஒருவர் பிறருக்கு தெளிவு படுத்திக் கொண்டு ஒற்றுமையாக ஒரே வழியில் தாதிகளின் முன்னர் வையுங்கள். இதனை உங்கள் பொறுப்பாக உணருங்கள்.

மீட்டிங்கில் சேவைக்காக என்ன லட்சியத்தை வைப்பது சேவைக்காக இந்த மாற்றத்தைக் கொண்டு வாருங்கள். பிறர் உங்களை அழைக்கட்டும். அநேகருக்கு நீங்கள் சேவை செய்துள்ளீர்கள் அவர்கள் உங்களை அழைக்கலாம் அல்லவா? அவர்கள் உங்களுக்கு மேடை தரட்டும் நீங்கள் போய் சேவை செய்யுங்கள். உங்களது மேடையில் நிறைய செய்து விட்டீர்கள். நல்ல முடிவும் நடந்தேறியுள்ளது. இதில்

கொஞ்சம் மாற்றம் செய்து பாருங்கள். (ஒவ்வொரு வீடு தோறும் செய்தியை சென்று சேர்ப்பதற்கான சாதனம் மீடியா தானா) அது மீடியாதான் ஆனால் கொஞ்சம் விதிப்பூர்வமாக இருக்கட்டும். இவ்வளவு இந்த டிவியை எடுத்துள்ளீர்கள். அதில் இவ்வளவு செய்கிறீர்கள். அதனுடைய விளைவு என்ன? பாதிக்கும் மேற்பட்ட சகோதர, சகோதரிகள் (டி.வியை பார்த்து வந்தவர்களே) நல்லது. இது அனைவருக்கும் தெரிய வேண்டும். இல்லையென்றால் இங்கு என்ன நடக்கிறது தெரியவில்லையே என்று நினைக்கிறார்கள். எனவே அதன் செய்தியானது கொஞ்சம் வேண்டும். அதனுடைய விளைவு எல்லோருக்கும் (பிராமணர்) தெரியட்டும். அப்போது உற்சாகம் வரும் அல்லவா? தெரியவே இல்லை நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

பிரிஜ் மோகன் சகோதரர் (கீதையின் பகவான் பற்றி கேட்கிறார்) கொடுக்கப்பட்டது வேலை அல்லவா? முதலில் நான்கு ஐந்து முக்கியமானவர்கள் அவர்களின் அது உங்களுக்கு பெயர் தெரிய வேண்டும். அவர்களை ஒன்று கூட்டுங்கள். அவர்களை தயார் செய்து அவர்கள் மூலம் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று மீட்டிங் செய்யுங்கள். நாம் என்ன விரும்புகிறோமோ அது எப்படி நடக்கும். அவர்களையே அதற்கு நிமித்தமாக்குங்கள். நான்கு ஐந்து பேர் இப்போது கூட உள்ளனர். உடல் ஆரோக்கியத்தை கவனத்தில் கொள்ளுங்கள்.

வெளிநாட்டு மூத்த சகோதரிகளுடன் ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு உற்சாகம் கிடைக்கிறது. அவர்களுக்காக விசேஷ கவனம் செலுத்தினால் சரியாகி விடுகிறது. சுற்றி வாருங்கள். பிறரையும் சுற்ற வையுங்கள். அப்போது அவர்களுக்கு உற்சாகம் வரும். இன்னும் மேலே முன்னேறுவார்கள். மற்றபடி நிர்விக்ன நிலை என்கின்ற இந்த செய்தி மகிழ்ச்சிக்குரியது. இப்பொழுது கூட்டாகவும் இருப்பீர்கள். அவ்வாறு கூட்டாக இருக்கும்போதுதான் இம்மாதிரியான மகிழ்ச்சி கரமான செய்திகள் அனைவருக்கும் கூற முடியும். ஆக அவர்களுக்கு இதை கூறுங்கள். 8-சென்டர்கள் எங்கேயாவது இருக்கிறது என்றால் அவை அனைத்துமே நன்றாக நடக்கிறது என்றால் அது நல்ல செய்தி தானே! இந்த செய்தியை அனைவருக்கும் கூறுங்கள்.

காயத்ரி சகோதரி பூச்செண்டு அனுப்பியுள்ளார். முழு குடும்பமும் அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளது. இரண்டு நான்கு குடும்பங்கள் மிகவும் நன்றாக உள்ளன. எப்படி அந்த சகோதரி (வசீகா) நோய்வாய்ப்பட்டு இருக்கிறாரோ ஆனால் கடைசியில் வந்தாலும் வேகமாக முன்னேறி முதலில் சென்று கொண்டிருக்கிறார். அம்மாதிரி நல்லவர்கள் வெளி வரட்டும். இதில் அனைவரும் இந்தியர்களே. இவர்கள் அனைவரும் இந்தியாவினுடையவர்களே. தலைவர்கள் நீங்கள் தானே!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 05.03.2012 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தற்பொழுது நாலா பக்கமும் துக்கம், அசாந்தி அதிகமாக இருக்கின்றது; ஆகையால் தங்களுடைய விஷ்வ கல்யாண சொரூபத்தை பிரத்யட்சம் செய்யுங்கள், மனதின் மூலம் செய்யும் சேவையை அதிகப்படுத்துங்கள், பாபாவின் தொடர்பின் வர்ணத்தில் இருந்து இரட்டை புனிதமானவர் (ஹோலி) ஆகுங்கள்!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய பாக்கியத்தின் ரேகையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். நெற்றியில் ஜொலித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தின் ஜொலிப்பை, கண்களில் அன்பு மற்றும் சக்தியையும், உதடுகளில் புன்னகையினுடைய ரேகையையும். கால்களின் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கின் ரேகையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் எல்லோரும் கூட தன்னுடைய பாக்கியத்தின் ரேகையை பார்த்து புன்முறுவல் செய்கின்றீர்கள் அல்லவா? உள்ளத்தில் இதையே பாடுகிறீர்கள். ஆஹா என்னுடைய பாக்கியமே ஆஹா! ஒவ்வொருவருடைய நெற்றியிலும் அந்த தெய்வீக நட்சத்திரம் ஜொலிப்பதை பார்த்து பாப்தாதாவும் கூட மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார். மேலும் இதையே மனதில் கீதம் பாடுகின்றார். ஆஹா! குழந்தைகளே ஆஹா! குழந்தைகளினுடைய உள்ளத்திலிருந்து என்ன பாடல் கேட்டுக் கொண்டிருக்கின்றார். ஆஹா பாபா ஆஹா குழந்தைகளும் கூட ஆஹா! தந்தையும் கூட ஆஹா இந்த முழு சபையில் என்னவாக ஆகி விட்டது. ஆஹா! ஆஹா ஆஹா ஆகவே தன்னுடைய பாக்கியத்தைப் பார்த்து சபாஷ் அவ்வாறு

அப்படியே மகிழ்ச்சியோடு இருங்கள். எவ்வாறு இப்பொழுது அனைவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறீர்கள். இந்த பாக்கியம் சங்கமயுகத்தில் மட்டுமே கிடைக்கின்றது. சங்கமயுகத்தின் ஒவ்வொரு நொடியும் மிகவும் மதிப்பு வாய்ந்தது. சங்கமயுகத்தின் ஒரு வினாடியும் அழிவற்றதாக ஆகிறது. ஏனென்றால் சங்கமயுகத்தின் ஒரு நொடி 21-ஜென்மத்துடன் சம்பந்தம் இருக்கிறது. உங்களுடைய ஒரு வினாடியின் சம்பந்தம் 21-பிறவிகளின் கூடவே இருக்கிறது. ஆகவே சோதனை செய்து பாருங்கள். ஒரு வினாடி வீணாகச்சென்றது என்றால், இது ஒரு ஜென்மத் திற்கான விஷயம் அல்ல. 21-ஜென்மத்திற்கான சம்பந்தத்தின் விஷயம் ஆகும். ஆகவே பாப்தாதா குழந்தைகளிடம் அவ்வப்போது கவனத்தைச் செலுத்த வைக்கிறார். அதாவது சங்கமயுகத்தில் ஒரு நொடியையும், சங்கல்பத்தையும் கூட வீணாக்காதீர்கள். ஏனென்றால் ஒரு பிறவியை வீண்டிக்கவில்லை. 21-பிறவிகளை வீண்ணடித்து விடுகிறீர்கள். சங்கம யுகத்தின் மகத்துவத்தை ஒவ்வொரு சமயமும் நினைவில் வைத்திருங்கள்.

பாப்தாதா வீணான நேரம். வீணான எண்ணம் செல்லாது இருக்க வீட்டுப் பாடம் தந்திருக்கின்றார். அனைவரும் அந்த வீட்டுப் பாடத்தை செய்தீர்களா? யார் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்; நம்முடைய கவனத்தை பாபா அதிகமாக வெற்றி அடைவதற்கான லட்சியத்தோடு லட்சணத்தை கொண்டு வருவதற்கான முடிவு (ரிஸல்ட்) வந்துள்ளது என்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது பாண்டவர்கள் கை உயர்த்துகிறீர்கள், கையை உயரமாக உயர்த்துங்கள். அழிவற்ற பாபா மூலமாக இந்த காரியம் கிடைத்திருக்கின்றது. சங்கமயுகம் என்ற மகத்துவத்தை சதா புத்தியில் நினைவில் வைத்திருங்கள். உங்களுடைய சேவைக்காக இந்த காரியம் கிடைத்திருக்கின்றது. ஒவ்வொரு வினாடியும் அழிவற்ற வினாடியாக ஆக்க வேண்டும். ஏனெனில் அழிவற்ற பாபா இந்த வரதானத்தைக் கொடுத்திருக்கின்றார். இது சகஜமாக ஆகி விடும். பாபா கூறியிருக்கின்றார்: ஒவ்வொரு பிராமண குழந்தையின் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு பாக்கியம் இருக்கின்றது. பல மடங்கைப் பெறுகிறீர்கள் என்றால் யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு கிடைக்கிறது என்றால் சங்கமயுகத்தில் பல மடங்கு அடைவதற்கான பொன்னான வாய்ப்பு, ஒவ்வொருவரும் தன்னுடைய பாக்கியத்தை நினைவில்

வைத்திருங்கள். பல குழந்தைகள் யோசிக்கிறார்கள் அதாவது பாப்தாதா என்ன விரும்புகின்றார் என பாப்தாதா இதனைத்தான் விரும்புகின்றார்; அதாவது ஒவ்வொரு குழந்தையும் டபுள் ராஜ்ய அதிகாரியாக ஆக வேண்டும் என்று. இப்பொழுது சுய ராஜ்ய அதிகாரி எதிர்காலத்தில் விஷ்வ ராஜ்ய அதிகாரி. எந்த ஒரு குழந்தையும் டபுள் ராஜ்ய அதிகாரியாக ஆவதில் குறை இருக்கக்கூடாது. டபுள் ராஜ்ய அதிகாரிகள் தானே? தலையை அசைத்துக் காட்டுங்கள். ஆம் அல்லவா? பாபாவுக்கு எவ்வளவு குஷி ஏற்படுகின்றது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளினுடைய சார்ட்டை தினமும் பார்க்கின்றார். என்ன பார்க்கின்றார்? ஒவ்வொருவரும் தனது உள்ளத்தில் புரிந்து கொண்டீர்கள். இராஜ்ய அதிகாரியாக ஆகியிருக்கிறீர்கள்; ஆனால் இப்பொழுது சுய ராஜ்ய அதிகாரி சுய ராஜ்ய அதிகாரி என்றால் மனம், புத்தி, சம்ஸ்காரத்தை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள். எப்பொழுது விரும்புகிறீர்களோ எப்படி விரும்புகிறீர்களோ அப்படி அதிகாரியாக இருக்க வேண்டும். எவ்வாறு உங்களுடைய தினசரி செயல்பாட்டில் எப்படி உங்களது கைகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறீர்கள்; அப்படி உங்கள் மனம், புத்தி சம்ஸ்காரத்தை எப்பொழுது வேண்டுமோ அப்படி ரூலிங்க பவர் மற்றும் கன்ட்ரோலிங் பவர் மூலமாக இருக்க வேண்டும். இப்பொழுது பார்க்கும் பொழுது நம்பர் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். இதுவும் கூட என்னுடையதுதான் ஆனால் என்னுடையது என்பது மனதில் இல்லை சம்ஸ்காரம் என்னுடையது. புத்தி என்னுடையது, என்னும் பொழுது கன்ட்ரோலிங் பவர், ரூவிங் பவர் வரிசைக்கிரமமாக இருக் கின்றது. பாப்தாதா சமயத்தைப் பற்றிய அறிகுறியை அடிக்கடி நினைவு படுத்திக் கொண்டே இருக்கின்றார். அந்த சமயத்தின் கணக்குப்படி உங்கள் ஒவ்வொருவருக்கும் விஷ்வ கல்யாணகரி என்ற சுவமான் இருக்கின்றது. இப்பொழுது சமயத்தின் பிரகாரம் ஒவ்வொரு குழந்தைகளும் விஷ்வ கல்யாணி என்ற ரூபத்தில் பிரத்யட்சம் ஆக வேண்டிய நேரம். நாலாபக்கமும் துக்கம், அசாந்தி அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது; உங்களுடைய சகோதர, சகோதரிகள் குடும்பம் துக்கம் அடைந்து கொண்டு இருக்கின்றார்கள். இப்பொழுது உங்களுக்கு உங்களுடைய குடும்பத்திள் மீது இரக்கம் வரவில்லையா என்ன? இப்பொழுது பாப்தாதா, சைகை செய்கின்றார். உலக சேவையை வாணி மூலமாக மிக நன்றாக விமர்சையாக செய்து

கொண்டிருக்கின்றீர்கள். பாப்தாதாவுக்கு மகிழ்ச்சிதான். இந்த 75-ஆண்டு பவளவிழா ஆண்டில் எல்லோருடைய மனதிலும் பெரும்பாலும் சேவையில் ஆர்வம் உண்டாக்கியிருக்கின்றது. பாப்தாதா பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார் ஆனால் இப்பொழுது மனதின் சேவையும் அவசியமாக இருக்கின்றது. ஏனென்றால் அனைத்து பக்கத்திற்காகவும் விஷ்வ கல்யாணகாரி ஆக வேண்டும். அதாவது, மனம், வார்த்தை செயல் நடத்தையிலும், முகத்தோற்றத்திலும் இந்த மூன்றும் இப்பொழுது அவசியமாக இருக்கின்றது. தினமும் சோதனை செய்து பாருங்கள். தினசரி சேவையில் எத்தனை சதவிகிதம் சேவை செய்கின்றேன். வார்த்தைகளால் செய்யப்படும் சேவைக்கு பாப்தாதா சான்றிதழ் கொடுத்திருக்கின்றார் ஆனால் மனதின் சூட்சும அதிர்வலைகள் மூலமாக ஆத்மாவின் துக்கம், அசாந்தியில் உதவி செய்பவர்களாக ஆக வேண்டும். உதவி செய்வதற்கு கருணை வரவில்லையா என்ன? பாப்தாதா குழந்தைகள் எப்படியிருந்தாலும் தன்னுடைய குழந்தைகள்தான் அல்லவா? ஆதலால் இரக்கம் வருகின்றது. ஒவ்வொரு குழந்தையும் வீட்டிற்கான நன்மையாளர், அல்ல அல்லது மண்டலத்திற்கான நன்மையாளர் அல்ல விஷ்வ கல்யாணகாரி ஆக வேண்டும். ஆகவே பாப்தாதா இப்பொழுது பாப்தாதா கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கின்றார்; தன்னுடைய பக்தர்களுக்கு நன்மை செய்யக்கூடியவர் ஆகுங்கள். ஏனென்றால், இந்த சங்கமயுகத்திற்கு மிக அதிக மகத்துவம் இருக்கின்றது. இப்பொழுது சங்கமயுகத்தில் என்ன விரும்புகிறீர்களோ எவ்வளவு விரும்புகின்றீர்களோ அந்தளவு பாபாவிடமிருந்து சுகயோகம் கிடைக்க முடியும். இப்பொழுது கேட்டீர்களா? மனதின் சேவையை அதிகரிக்க வேண்டும். தன்னுடைய காரியத்தின் பிரகாரம் எப்படி டிராபிக் கண்ட்ரோல் நேரம் குறித்திருக்கின்றீர்களோ அதுபோன்று மன சேவைக்கான நேரத்தையும் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். இனிமேல் துக்கம் அதிகமாகும். அந்த சமயத்தில் எல்லோரும் குழப்பத்தில் இருப்பார்கள் ஆனால் இப்போது மனசா சேவைக்கான நேரம் இது. எனவே ஒவ்வொரு குழந்தையும் தனது விஷ்வ கல்யாணியின் சொரூபத்தை எழுச்சியுறச் செய்ய வேண்டும். உலக நன்மையில் தனது நன்மையும் தானாகவே எளிதாக ஆகி விடும். ஏனெனில் மனம் காலியாக இருக்கும்பொழுது வீணான எண்ணங்கள் வருகின்றன ஆனால் மனம் சுறுசுறுப்பாக இருக்கும்பொழுது

வீணானதற்கு எளிதாக முடிந்து விடும். ஆக பாப்தாதாவுக்கு நாலா புறங்களிலும் உள்ள உள்நாடு மற்றும் வெளி நாடுகளில் உள்ள அஞ்ஞானி குழந்தைகளைப் பார்த்து இரக்கம் ஏற்படுகின்றது. எனவே நீங்கள் அனைவரும் கூட இப்பொழுது துக்கத்தை நீக்கி சுகம் அளிப்பவர்களாக ஆகுங்கள்.

இன்று ஹோலி கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள். உலகினரின் ஹோலி மற்றும் உங்களின் ஹோலியில் எவ்வளவு வித்தியாசம் உள்ளது ஆனால் பாப்தாதா ஏற்கனவே கூறினார், உங்களது பக்தர்கள் நீங்கள் செய்துள்ள காரியங்களைப் பின்பற்றுவதில் மிகவும் புத்திசாலியாக உள்ளனர். ஏனெனில் இந்த அனைத்து விதிகளையும் துவாபரயுகத்தில் வரக்கூடிய ஆத்மாக்கள் தயார் செய்துள்ளனர். ஆக ஆரம்ப பிறவியில் வருவதால் அவர்களது புத்தி கூட எப்படி நியமமோ அதாவது முதலில் சதோபிரதானம், பிறகு ரஜோ, தமோவில் வரு கின்றனர். அந்த சமயத்தில் அவர்களது புத்தியானது சதோபிரதானமாக இருந்தது. எனவே உங்களது ஒவ்வொரு விசேஷத்தையும் நீங்கள் எப்படி உற்சாகமாக குஷியோடு இருந்தீர்களோ அதனை உற்சவமாக கொண்டாட ஆரம்பித்து விட்டனர். எப்படி சிவராத்திரியும் கூட கொண்டாடினார்கள் அல்லவா? உங்களை காப்பி செய்வதில் மிகவும் உஷாராக இருக்கின்றனர் அவ்வாறு இப்பொழுது கூட நீங்கள் சதா சங்கமயுகத்தில் உற்சாகத்தில் இருக்கிறீர்கள். உங்களின் உற்காகம் அவர்களது உதாரண ரூபத்தில் நினைவுச்சின்னமாக ஆக்கி உள்ளனர். ஆக ஹோலியில் என்ன செய்கிறார்கள்? நீங்கள் கூட உங்கள் வாழ்க்கையை வண்ணத்தால் (நற் பண்புகள்) நிரப்பி உள்ளீர்கள். உங்களது வண்ணமானது பாபாவினுடைய தொடர்பின் வண்ணமாகும். பாபாவினுடைய வண்ணத்திலேயே சதா இருக்கிறீர்கள் இல்லையா? ஆக அவர்களும் கூட வண்ணத்தை ஏற்படுத்தியுள்ளனர் ஆனால் அது தேக அபிமானத்தின் அடிப்படையானது. ஆகவே ஸ்தூலமான வண்ணங்களை ஊற்றுகிறார்கள். நீங்கள் அனைவரும் சதர இந்த கல்யாணகாரி சங்கமயுகத்தில் தொடர்பின் வண்ணத்தில் இருக்கிறீர்கள் இல்லையா? தொடர்பின் கலர் ஏற்பட்டுள்ளது அல்லவா? ஹோலி என்பது ஆங்கிலத்தில் தூய்மைக்காகக் கூறப்படுகிறது. ஆக தொடர்பு என்பதின் வண்ணத்தில் நீங்கள் ஹோலி அதாவது தூய்மையாக ஆகிறீர்கள். பவித்திரமாக துய்மையாக ஆகின்றீர்கள் அல்லவா?

தூய்மையின் விரதத்தை அனைவரும் மேற்கொண்டுள்ளீர்கள் அல்லவா? உறுதியாக! ஆனால் நம்டர்பிரகாம் ஏற்றுள்ளீர்கள். பிராமணர்கள் ஆவது என்றால் தூய்மையின் விரதத்தை மேற்கொள்வதாகும். ஏனெனில், பாபா சதா தூய்மையாக இருக்கின்றார். அவர் இருப்பதே தூய்மையின் சொரூபமாக! ஆக ஹோலியின் விசேஷத்தை அறிவீர்களா? தூய்மையாக நீங்கள் ஆகிறீர்கள்தான் ஆனால் நீங்கள் தொடர்பின் வண்ணத்தில் இரட்டை பவித்திரமாக ஆகிறீர்கள். பவித்திர தர்ம பிதாக்கள், மகான் ஆத்மாக்களாக ஆகிறார்கள் ஆனால் அவர்கள் வெறும் ஆத்மாவை மட்டும் பவித்திரமாக்குகிறார்கள் ஆனால் சரீரம் மற்றும் ஆத்மா இரண்டுமே தூய்மையாக எதிர்காலத்தில் நீங்கள் ஆகிறீர்கள். துவாபரயுகத்திலிருந்து பாருங்கள் யாரெல்லாம் வருகிறார்களோ அவர்கள் பவித்திரமாக ஆகியிருக்கின்றார்கள் ஆனால் எவருமே டபுள் பவித்திரமாக ஆவதில்லை. சரீரம் பவித்திரம் ஆத்மாவும் பவித்திரம்! நீங்கள் எதிர்காலத்தில் ராஜ்ய அதிகாரிகளாக ஆவீகள் ஆக ஆத்மா மற்றும் சரீரம் இரண்டுமே தூய்மையாகும். முழு சக்கரத்தை சுற்றி வாருங்கள். துவாபரயுகத்திலிருந்து இதுவரை பாருங்கள் ஏன் நீங்கள் டபுள் பவித்திரமாக இருக்கிறீர்கள். ஏனெனில் உங்களுக்கு எந்த வண்ணம் ஏற்பட்டுள்ளது. பாபாவின் தொடர்பு என்று சொல்லக் கூடிய வண்ணம், எப்படி பரமாத்மா தூய்மையாக இருக்கிறாரோ நீங்களும் 21-பிறவிக்கும் தூய்மையாக இருக்கிறீர்கள் இரட்டை பவித்திரமாக, தர்ம ஸ்தாபகர்கள் கூட டபுள் பவித்திரமாக கிடையாது ஆனால் உங்களது பாக்கியம்! ஏனென்றால், நீங்கள் பரமாத்மாவின் தொடர்பின் வண்ணத்தில் உள்ளீர்கள். தொடர்பின் வண்ணமானது அவ்வளவு உறுதியாக இருக்கின்றது. அதாவது நீங்கள் டபுள் பவித்திரமாகும் அளவு.

ஹோலியின் இன்னொரு அர்த்தம் ஹோ லி அதாவது நடந்து முடிந்து விட்டது. கடந்து போய் விட்டது. ஆக ஹோலியினுடைய அர்த்தம் தெரிகிறதா? கடந்தது கடந்து போனது. எனவே நீங்கள் இரட்டை ஹோலி கொண்டாடுகிறீர்கள். 21-பிறவிகளுக்காக எடுக்கிறீர்கள் ஒரு பிறவி மட்டுமல்ல. ஒரு பிறவியினுடைய தொடர்பு 21-பிறவிகளுக்கானது, இங்கே நீங்கள் ஒரு வினாடி அல்லது ஒரு நிமிடம் ஈடுபடுத்தினீர்கள் என்றால் 21-பிறவிகளுக்கு அது உங்களைத்

தொடர்ந்து வரும். நிச்சயமாக உத்தரவாதமாக அந்தமாதிரி ஹோலியை கொண்டாடி இருக்கிறீர்களா? அம்மாதிரி ஹோலி, (புனிதமாக) ஆவது வருகிறதா? எது நடந்ததோ அது நடந்து முடிந்து விட்டது. மேலும் மூன்றாவது என்ன செய்கிறார்கள் முதலில் எரிக்கிறார்கள்: பிறகு கொண்டாடுகிறார்கள் ஆக நீங்களும் என்ன செய்தீர்கள்? உங்களுடைய பலஹீனங்களை சம்ஸ்காரங்களை பல பிறவிகளினுடைய தலைகீழான சம்ஸ்காரம் அதனை யோசு அக்னியின் மூலம் எரித்து விட்டீர்கள் அல்லவா? அல்லது இன்னும் எரித்துக் கொண்டிருக்கின்றீர்களா? யோக அக்னியின் மூலம் உங்களது பழைய சம்ஸ்காரங்களை எரித்துள்ளீர்களா? அது எரிந்து விட்டதா? இன்னும் வந்து கொண்டிருக்கின்றதா?. கொஞ்சம் கொஞ்சம் வந்து கொண்டிருக்கிறதா? பாப்தாதாவிடம் தன்னுடைய சார்ட்டை அனுப்புகிறார்கள். அல்லவா? அதில் இப்படி கெட்டிக்காரத்தனமாக கூறுகிறார்கள். எரிப்பது என்றால் எரித்து விடுவது, எரித்த பிறகு அதன் பெயர் அடையாளமே இருப்பதில்லை. கொன்ற பிறகு சரீரத்தினுடைய நினைவுச்சின்னம் தென்படுகிறது ஆனால் எரித்த பிறகு அதுவும் முடிந்து போய் விடுகின்றது. இராவணனைப் பாருங்கள், கொன்றது மட்டும் அல்ல. எரிக்கவும் செய்கிறார்கள். அதனுடைய பெயர் அடையாளமே இல்லாது போய்விடுகின்றது. ஆக நீங்கள் அனைவரும் உங்களை சோதனைச் செய்துப்பாருங்கள். சம்ஸ்காரங்களைக் கொன்று விட்டீர்களா? அல்லது சாம்பலாக்கியும் விட்டீர்களா? பழைய சம்ஸ்காரத்தை முழுவதுமாக எரிக்கவில்லை. ஆகவேதான் இடை இடையே திரும்ப வந்து விடுகிறது ஆனால் பக்தர்கள் அனைத்தையும் பின்பற்றுகின்றனர். நீங்களும் எரிக்கிறீர்கள்; அவர்களும் எரிக்கிறார்கள்; பிறகு கொண்டாடுகின்றார்கள். கொளுத்தாமல் கொண்டாடுவது இல்லை. ஆக நீங்களோ சம்ஸ்காரங்களை எரித்து, ஹோலி ஆகி விட்டீர்கள் ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். சிலர் ஆகி விட்டுள்ளனர், ஆக நீங்கள் ஹோலி கொண்டாடியுள்ளீர்கள்? பாபாவின் தொடர்பு என்னும் வண்ணத்தில் இப்பொழுது தொடர்பில் (பாபாவின்) அமர்ந்துள்ளீர்கள் என்றால் அந்த தொடர்பின் வண்ணத்தின் ஹோலி கொண்டாடி விட்டீர்கள். கொண்டாடினீர்கள் தானே? கை உயர்த்துங்கள்.

ஹோலி கொண்டாடுவது என்றால் புனிதமாக ஆவது தூய்மையாக ஆவது எப்படி தந்தையோ அப்படியே குழந்தைகள்! ஒருவேளை

உங்களது சம்ஸ்காரம் இன்னும் எரியவில்லை என்று சொன்னால் மீண்டும் வந்து விடுகிறது. சங்கல்பம் வருகிறது அல்லவா? இப்பொழுது தீவிர புருஷார்த்தத்தின் மூலம் எரித்தே ஆக வேண்டும். வெறும் கொன்று விட்டால் மட்டும் போதாது; எரித்து விட வேண்டும். ஆக இன்று எரிக்க வேண்டுமா அல்லது கொல்வது மட்டுமே சரியா? எரித்து விடுவதற்கு சக்தி உள்ளதா? அதற்கு சங்கல்பம் செய்ய முடியுமா? அநேகர் கூறுகின்றனர், பாப்தாதாவிடம் உரையாடல் செய்கின்றார்கள் அல்லவா. மிகவும் இனிமையாக உரையாடுகின்றனர். அப்போது கூறுகின்றனர், பாபா நாங்கள் அதிகம் முயற்சி செய்தோம்; பிறகும் கூட வந்து விடுகின்றது. விரும்பவில்லை என்றாலும் வந்து விடுகிறது. காரணம் தெரியுமா? எரிக்கிறீர்கள், பாப்தாதா பார்க்கிறார். புருஷார்த்தம் நன்கு செய்கிறீர்கள் ஆனால் புருஷார்த்தத்தின் கூடவே திட சங்கல்பமும் (மன உறுதி) மிக அவசியம் ஆகும். திடத்தன்மையே வெற்றியின் சாவியாகும். திடத் தன்மையின் அர்த்தமே மீண்டும் திரும்பி வராது, பிறகு தெரியுமா? இவ்வாறெல்லாம் இனிமையாக உரையாடுகின்றனர். பிறகு வருகின்ற பொழுது என்ன சொல்கின்றனர்? இந்த மாதிரி உரையாடல் எல்லோரும் செய்கின்றனர். அப்போது கூறுகின்றனர். தாங்கள் விரும்பவில்லைதான்: ஆனாலும் வந்து விடுகின்றன. அப்படியென்றால் சக்தி குறைவாக உள்ளது இல்லையா? திடத்தன்மை குறைவாக இருக்கிறது. இல்லையா? திட சங்கல்ப்பதாரி ஆகுங்கள். செய்தே ஆக வேண்டும். மேலும் அதே திட சங்கல்பத்தை தினமும் சோதனை செய்யுங்கள். எந்த காரணத்தால் திடத்தன்மையில் பலஹீனம் ஏற்பட்டது? மேலும் அந்த சூழ்நிலையின் மீது விசேஷ கவனம் செலுத்திக் கொண்டிருங்கள். இது மீண்டும் வரக்கூடாது என்று. மாஸ்டர் சர்வ, சக்திவான் இருக்கையில் (சீட்) அமர்ந்து அந்த சங்கல்பத்தை, சம்ஸ்காரத்தை முடித்து விடுங்கள். அநேக குழந்தைகள் கூறுகின்றனர் -நாங்கள் அநேக முறை அனுபவம் செய்கிறோம்; எப்பொழுதாவது ஏதேனும் சக்தியை விரும்பினால் அந்த சமயத்தில் அந்த குறிப்பிட்ட சக்தி வருவதில்லை எள்கின்றனர். சக்தி என்னவோ இருக்கிறது ஆனால் வேண்டிய சமயத்தில் சக்தியை வெளிப்படுத்த விரும்பும்பொழுது அது வருவதில்லை ஆனால் இருப்பதோ மாஸ்டர் சர்வ சக்திவானாக? உங்களது பட்டம் என்ன? மாஸ்டர் சர்வ சக்திவான் ஆனால் நீங்கள் கூறுவது என்ன? சரியான சமயத்தில் சக்தி வருவதில்லை காரணம்? உங்களது மாஸ்டர் சர்வ சக்திவான்

இருக்கையில் நீங்கள் சரியாக நிலைத்திருப்பதில்லை. அலுவலகங்களில் சென்று கூட பாருங்கள். யாருக்கு அதிகாரம் இருக்கிறதோ அவர் கட்டளையிட்டால்தான் செய்கின்றனர்; வேறு யாராவது அவ்வாறு கூறினால் ஏற்றுக் கொள்வார்களா என்ன? ஆக உங்களது இருக்கை மாஸ்டர் சர்வ சக்திவான்! அந்த இருக்கையில் நிலைத்திருப்பதில்லை என்றால் நீங்கள் அழைத்தால் கூட வேண்டிய சமயத்தில் சக்திகள் வருவதில்லை. அதற்காக பாப்தாதா அடிக்கடி கூறியுள்ளார்: உங்களது மனதை சுறுசுறுப்பாக (பிஸி) வைத்திருங்கள். ஏதேனும் ஒரு சக்தியை நாள் முழுவதும் வெளியே கொண்டு வந்து செயல்படுத்துங்கள். சில சமயம் வேறொரு சக்தியை செயலில் கொண்டு வந்து பாருங்கள். அதனுடைய பலம் என்னவென்று பாருங்கள் இவ்வாறு அனுபவம் செய்து வந்தீர்கள் என்றால், உங்களது இருக்கையில் நிலைத்திருப்பீர்கள் என்றால் சக்திகள் உங்கள் முன்னால் சதா ஆஜராகியிருக்கும். உங்களது சக்தி இருக்கிறதல்லவா ஆக ஹோலி கொண்டாடினீர்களா நீங்களோ சதா ஹோலி கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். சதா பாபாவினுடைய தொடர்பின் கலரில் மூழ்கியிருக்கிறீர்கள். கலரோடு கலராக கலந்து விட்டீர்கள், நல்லது

பாப்தாதாவின் என்ன காரியம் (வீட்டு பாடம்) கிடைத்துள்ளதோ அந்த காரியத்தை இது வரையிலும் செய்துள்ளீர்களா? பாப்தாதா அதற்காக விசேஷமாக ஒரு வாரம் கூடுதலாக தருகிறார். ஒரு குறிப்பிட்ட நாள் வரை என்பதோ இருக்கிறதுதான்; ஆனால் ஒரு வாரம் கூடுதலாகத் தருகிறார். இந்த வீட்டு வேலையை செய்தே ஆக வேண்டும் முடியுமா? கை உயர்த்துங்கள். கை உயர்த்துங்கள்? செய்தே ஆக வேண்டும். கையை உயர்த்தினீர்கள். அந்த மாதிரி கையை உயர்த்துகிறீர்கள் பாப்தாதாவே குஷி அடைந்து விடுகிறார் ஆனால் செய்தே ஆக வேண்டும். ஏனெனில் தற்போது காலத்தின் கெடுபிடியை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவோ பல முறை திடீரென நடப்பது பற்றி எச்சரிக்கை கொடுத்துக் கொண்டே. வருகிறார் எனவே இப்பொழுது பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு சுவமான் (சுய மரியாதை) தருகிறார் -ஒவ்வொரு குழந்தையும் திட சங்கல்பதாரி ஆகி விசேஷ ஆத்மா ஆகுங்கள். சங்கல்பம் செய்தீர்கள், உடனே நடந்து விட வேண்டும் இதனையே திட சங்கல்பம் என்று சொல்லப்படுகிறது. கூறுகின்றனர். திட சங்கல்பம் செய்தோம் என்று கூறுகின்றனர் ஆனால்

திடத் தன்மை என்றாலே வெற்றி, வெற்றி இல்லையென்றால் திட சங்கல்பம் இல்லை ஆக இப்பொழுது திடதா பவ! இந்த விசேஷமான சுவமானை தினமும் அமிர்தவேளையின்போது நினைவில் கொண்டு வாருங்கள். மேலும் அந்த விதிப்பூர்வமாக முன்னேறிச் செல்ல வேண்டும். இன்னும் இரண்டு முறை (பாபாவின் சந்திப்பு) உள்ளது. இந்த இரண்டு முறையிலும் என்ன செய்யப் போகிறீர்கள்? கூறுங்கள் பார்க்கலாம். முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் கூறுங்கள். செய்தே ஆக வேண்டும். செய்வோம். செய்து விடுவோம் என்பதல்ல செய்தே ஆக வேண்டும்! பல காலம் முயற்சியானது பாப்சமான் ஆக வேண்டும். பல கால முயற்சியின் பிராப்தியாகும் அது. சங்கமயுகத்தின் காலம் மிகவும் அன்பானது. ஒரு வினாடியல்ல. ஒரு வினாடி ஒரு வருடத்தின் பிராப்திக்குச் சமமானது ஆகும். எனவே பாப்தாதா கூறிக் கொண்டே இருக்கிறார். ஒரு வினாடி கூட நேரம் வீணாகக் கூடாது. ஒரு சங்கல்பம் கூட வீணாகச் செல்லக்கூடாது! சக்திவாய்ந்தவர்கள் ஆகுங்கள்! பிறரையும் ஆக்குங்கள்! சரிதானே? டீச்சர்கள் சரியா? (டீச்சர்கள் தலையசைக்கிறார்கள்). பாப்தாதாவிற்கு டீச்சர்கள் மீது மிகுந்த அன்பு உண்டு. அனைத்து குழந்தைகள் மீதும் உண்டுதான் பிறகும் டீச்சர்கள் பொறுப்பாளர்கள் இல்லையா? பாப்தாதாவினுடைய உள்ளத்தை பூர்த்தி செய்யக் கூடியவர்கள் யார்? யார்? டீச்சர்களாகிய நாங்கள் என்று சொல்லுங்கள் கை உயர்த்துங்கள் ஆஹா! ஆஹா எவ்வளவு டீச்சர்கள் நல்லது ஹோலியும் கொண்டாடினீர்கள் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

**சேவையினுடைய முறை ராஜஸ்தானுடையது:** சிறியது அல்ல மிகப் பெரியது இராஜஸ்தான்! இராஜஸ்தான் என்றால் அபுவின் ஒரு அறை என்று சொல்லுங்கள். ஆக அபு மிகப் பெரியது தானே? அதன் அறையும் மிகப் பெரியதாகத்தானே இருக்கும். பாப்தாதாவிற்கு இராஜஸ்தான் மீது மிகுந்த சந்தோஷம்தான் ஏனெனில் இராஜஸ்தானத்தில் குழந்தைப் பருவத்திலிருந்தே வந்தவர்கள் இன்று வரை அமரர்களாய் (உயிரோடு) உள்ளனர். சேவையில் அமரர்கள்! சரீரத்தால் அல்ல சேவையில்! மேலும் இராஜஸ்தானில் ஆரம்ப காலத்தில் வாரிசு தரமானவர்கள் வந்தார்கள். பாப்தாதாவிற்கு அம்மாதிரி வாரிசு தரமான குழந்தைகளை உதாரணமாக சொல்வது மிகவும் எளிதாக இருந்தது. மேலும் எப்படி குஜராத் அருகாமையில் உள்ளதோ, அம்மாதிரி இராஜஸ்தான் மவுண்ட்

அபுவின் மிகப் பெரிய அறையாகும். எப்பொழுது கூப்பிட்டாலும் என்ன கூறுவார்கள்? உடனே சரி என்பார்கள். பாப்தாதா ஒவ்வொரு மண்டலத்தின் விசேஷத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலும் இந்த ஒரு சிஸ்டத்தை (வழிமுறை) கொண்டு வந்துள்ளது மிகவும் நல்லது. யார் கொண்டு வந்தது? முன்னியா? (தாதிஜி உருவாக்கினார்கள்) தாதி என்றாலே தாதிதான்; ஆனால் யாரெல்லாம் மகாரதிகள் சென்று விட்டனரோ அவர்களுடைய விசேஷம் என்னவென்றால், அமிர்தவேளையில் கூடி விடுகின்றனர். அமிர்தவேளையின் இந்த சந்திப்பு சிறியதல்ல. எப்படி இங்கு கூட அந்த நியமத்தைப் பின்பற்றி வந்தார்கள் வெறும் வாயால் மட்டும் கூறவில்லை, செய்து காண்பித்தார்கள். அவ்வாறே பிற அனைவரையும் கூட உற்சாகம் ஆர்வத்தில் கொண்டு வந்தார்கள். ஆக இந்த நடைமுறை கூட மிகவும் நல்லதே. உங்கள் அனைவருக்கும் கூட பிடித்தமானது தானே. வாய்ப்பு உள்ளது.

இப்பொழுது முதன் முறையாக இராஜஸ்தானிலிருந்து வருபவர்கள் கை உயர்த்துங்கள். உங்களுக்கு மிகவும் நல்ல வாய்ப்பு. ராஜஸ்தானி எண்ணிக்கை இவ்வளவா! பொதுவாக நீங்கள் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலின் பிரகாரம் வர வேண்டும் ஆனால் இப்பொழுதோ சற்று சுதந்திரம் உள்ளது. சேவாதாரிகளுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. எனவே பாப்தாதா தாதிக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறார். அல்லது உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தரட்டுமா? தாதி உருவாக்கினார்; நீங்கள் நடைமுறையில் வந்து கொண்டிருக்கிறீர்கள்; அதற்காக வாழ்த்துக்கள் நல்லது

இப்பொழுது இராஜஸ்தான் ஒரு அற்புதத்தை செய்ய வேண்டும். முதலில் வாரிசு தரமானவர்களை பாபாவின் முன் கொண்டு வர வேண்டும். அனைத்து துறையினரும் (விங்க்) தங்களது தொடர்பில் உள்ளவர்களின் பெருவாரியான பட்டியலை தந்துள்ளதை பாப்தாதா பார்த்தார். சகயோகிகளாக இருக்கின்றனர் மேற்கொண்டு என்ன செய்வீர்கள்? சக்யோகி ஆனவர்களை யக்ஞ சிநேகி ஆக்குங்கள். யக்ஞ சிநேகி ஆக்கும்பொழுது ஒவ்வொரு காரியத்திலும் சகயோகி ஆவார்கள். லிஸ்ட் என்னமோ நன்றாக எழுதி உள்ளீர்கள். பெரும்பாலும் அவ்வப்போது பட்டியலை கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

பெரும்பாலோரின் பட்டியல் (லிஸ்ட்) நன்றாகவே உள்ளது. இப்பொழுது கூட இரண்டு மூன்று துறையினரின் பட்டியல் வந்துள்ளது ஆனால் அவர்களை சிநேகி ஆக்குங்கள். அதாவது நாங்களும் யக்ஞத்தின் சிநேகிகளே என்று நினைக்கும்படி உறுதியான நிச்சயபுத்தி உடையவர்களாக ஆக்குங்கள். சகயோகிகளாக இருக்கின்றனர்; அதில் நாங்கள் சகயோகிகளாகத்தானே இருக்கிறோம் என்று சொல்வார்கள் ஆனால் சிநேகிகளாக இருப்பவர்கள் யக்ஞத்தினுடைய அடிப்படை நியம் காரியங்களில் சிநேகியாக ஆவார்கள். துறையினர் தங்களது காரியங்களை நன்றாகவே செய்துள்ளனர். பாப்தாதா வர்க்கத்தினருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார். இராஜஸ்தான் என்றாலே ராஜாவாக ஆகி, ராஜாவாக ஆக்கக் கூடியவர்கள். பிரஜைகளாக அல்ல. ராஜாவாக ஆக்கக் கூடியவர்கள். ராஜஸ்தான் அல்லவா, ஆக அற்புதத்தை செய்வீர்கள் அல்லவா?

<u>மருத்துவம் மற்றும் போக்குவரத்து துறையினர் வந்துள்ளனர்:</u> வாழ்த்துக்கள்! பாப்தாதா பார்த்தார். என்னென்ன துறைகள் உருவாகியுள்ளனவோ அவர்கள் தம் தம் களத்தில் காரியங் களை நன்றாகச் செய்து கொண்டிருக்கின்றனர். இரண்டு துறையினரும் தங்களது பட்டியலை அனுப்பியுள்ளனர். மிக நல்ல நல்லவர்கள் எல்லாம் தொடர்பில் வந்துள்ளனர் என்பதை பாப்தாதா பார்த்து வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறார் ஆனால் பாப்தாதா தற்காலத்தில் காலத்திற்கு ஏற்றார்போல் சக்யோகிகளாக இருக்கின்றனர்; அவர்களை சிநேகியாக்குங்கள் என்றும் கூறினார். வாரிசு தரமானவர்களாக ஆக்குங்கள். யாரெல்லாம் சகயோகிகளாக இருக்கின்றனரோ அவர்களை தங்களது மண்டலத்தில், பாப்தாதா இது பற்றி ஏற்கனவே கூறியுள்ளார், பட்டியல் வந்துள்ளது நல்லது ஆனால் ஒவ்வொரு மண்டலமும், ஒவ்வொரு வர்க்கத்தையும் தங்களது பல்வேறு இடங்களின் சகயோகி மற்றும் சிநேகி ஆத்மாக்களை ஒன்று சேருங்கள். மூன்று நாட்கள் உங்களுடன் இருக்கும் தொடர்பில் கொண்டு வாருங்கள், வரட்டும், மீட்டிங் செய்யட்டும். மேற்கொண்டு நிகழ்ச்சிகளையும் திட்டமிடட்டும் ஒவ்வொரு மண்டலத்திலும் மிகப் பெரிய ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு அனைவரையும் ஒன்றாக அழைத்து அவர்களது கூட்டத்திற்கு (மீட்டிங்) ஏற்பாடு செய்யுங்கள். அவர்கள் முன்னேறிச் செல்வதற்கு விசேஷமாக ஒரு பலத்தை

நிரப்புங்கள். இதுவரை என்னென்ன செய்துள்ளனரோ அதற்கு வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள். மேலும் முன்னேறி செல்வதற்கான திட்டத்தை அமைத்துக் கொடுங்கள். ஏனெனில் அவர்களுக்கும் முன்னேறி செல்வதற்கான விதியை கூறியே ஆக வேண்டும். எல்லா மண்டலங்களும் சேர்ந்து ஒவ்வொரு வர்க்கத்தினரையும் எங்கு ஒரு பெரிய இடம் உள்ளதோ (ரிட்ரீட் சென்டர்) அங்கு அனைவரையும் ஒன்றாகக் கூட்டுங்கள். பிறகு பார்க்கலாம் அந்த கூட்டத்தில் எத்தனை பேர்கள் வருகிறார்கள் என்று. இவ்வாறு அருகாமையில் கொண்டு வரும்பொழுது வாரிசு ஆகி விடுவார்கள். இப்பொழுது எதிரில் நின்று கொண்டிருக்கக்கூடிய இரண்டு வர்க்கத்தினரின் ரிசல்ட்டையும் பாப்தாதா பார்த்தார். நன்றாகவே உள்ளது எனவே பாப்தாதா இரண்டு வர்க்கத்தினருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார்.

பாப்தாதா ஏற்கனவே கூறியுள்ளார்: காலமானது மிகவும் கெடுபிடியாக உள்ளது. எனவே குறைந்தபட்சம் உங்கள் தொடர்பில் உள்ளவர்களை யக்ஞ சிநேகியாக ஆக்குங்கள். மருத்துவத் துறையினரின் செய்தியையும் பாபா கேட்டறிந்தார். நன்றாக செய்து கொண்டிருக்கின்றனர் ஆனால் இப்பொழுது மருத்துவர்கள் மேலும் தங்களது மருத்துவர்களின் எண்ணிக்கையை சிநேகிகளாகவும், சகயோகிகளாகவும் ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். திட்டத்தை மிக அற்புதமாகத் தீட்டியுள்ளதை பாப்தாதா தெரிந்து கொண்டார். அதன் மூலம் எண்ணிக்கை அதிகமாக முடியும். அடுத்த துறையினரும் கூட நாலாபக்கங்களிலும் நன்கு வி.ஐ.பிகளை கண்டெடுத்துள்ளனர். இதன் மூலம் பொது தொடர்பை நன்றாக வைத்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. தற்போது இவ்வாறு தொடர்பில் உள்ளவர்களை சம்பந்தத்தில் கொண்டு வாருங்கள். அவர்கள் விட்டுப்போய் விடக்கூடாது. நேரம் இறுதி காலமாக ஆகும் பொழுது சகயோகிகளின் சகயோகிகளாக ஆகட்டும். எனவே தற்போது அவர்களை சம்பந்தத்தில் கொண்டு வாருங்கள். எப்பொழுதிலிருந்து இந்த துறையினுடைய சேவைகள் ஆரம்பித்ததோ அப்பொழுதிலிருந்து சேவை நன்கு அதிகரித்துள்ளதை பாப்தாதா பார்த்துள்ளார். சாதனங்களை நன்றாகவே செய்கின்றனர் ஆனால் அனைத்து மண்டலங்களுக்கும் பாப்தாதா ஒன்றைக் கூறிக் கொள்கிறார். வாரிசு ஆக்கும் அந்த விதியை சற்று வேகமாக செய்யுங்கள். இல்லையென்றால் உங்கள் மீது புகார்கள்

வரும். நாங்கள் சகயோகிகளாகவே இருந்து விட்டோம். நீங்கள் கட்டாயம் திட்டங்களைத் தீட்டுங்கள். பிறகு யாருக்கு பாக்கியம் இருக்கிறதோ அவர்களுக்கு! மேலும் அதிகமானவர்களை உருவாக்க முடியும், பாப்தாதா பட்டியலை பார்த்தார். அனைவருமே தங்கள் தங்கள் சமயத்தில் லிஸ்ட்டை தருகிறார்கள்; அந்த லிஸ்ட் அனுசாரம் சுமீபமாய் இருக்கின்றனர். அவர்களிலிருந்து மேலும் உருவாக்க முடியும். அந்த லிஸ்ட் பிரகாரம் சமீபத்தில் உள்ளனர். இவர்களிலிருந்து (சிநேகிகள்) உருவாக முடியும். இதனை இப்பொழுது முயற்சி செய்து பாருங்கள், நல்லது!

(மருத்துவத் துறை வெள்ளி விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அதில் 8-குரூப் சேவைகளின் குருப்பாக ஆக்கியுள்ளனர்) நன்றாக செய்துள்ளீர்கள்; முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். நல்லது!

இரட்டை வெளிநாட்டினர் **1000**-பேர்,. **85**-நாடுகளில் இருந்து வந்துள்ளனர்: உங்கள் அனைவரையும் பார்த்து எல்லோரும் எவ்வளவு குஷி அடைந்துக் கொண்டிருக் கின்றார்கள். பாபா உங்களை எங்கெங்கெல்லாமோ இருந்து 65 நாடுகளிலிருந்து தேடிக் கண்டு பிடித்துள்ளனார். பாபாவே தேடிக் கண்டு பிடித்துள்ளார் என்று உங்கள் அனைவருக்கும் கூட குஷியும் போதையும் இருக்கின்றது அல்லவா? மேலும் பாப்தாதா பார்த்தார். இந்த முறை அனைவரும் சேர்ந்து யார் யார் நிமித்தம் ஆகியிருக்கின்றார்களோ அவர்கள் எல்லோரும் சேர்ந்து மிக மிக நன்றாக நிமித்தமாவதற்கான சேவை செய்துள்ளனர். ஒவ்வொருவரின் பெயரையும் பாபா குறிப்பிடவில்லை, ஆனால் யார் நிமித்தமாக ஆகியுள்ளனரோ, அவர்கள் சேவையில் அனைவரது உள்ளத்திலும் உற்சாகம் ஆர்வத்தை ஏற்படுத்தி சேவையில் வெற்றிக் கண்டுள்ளனர். தங்களது இடங்களுக்குச் சென்று தங்களது இடத்தைக்கூட அவ்வாறு புத்துணர்வு பெறச் செய்வார்கள். யார் சேவைக்கு நிமித்தமாக ஆனார்களோ அவர்களுக்கு பாப்தாதா மிக மிக நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார். இந்த வழிமுறை கூட மிக நன்றாக ஏற்படுத்தியுள்ளார். மேலும் ஜனக் குழந்தை (ஜானகி தாதி) உற்சாகம், ஆர்வத்தை அபரிதமாக ஒவ்வருவரிடமும் நிரப்பியுள்ளார். ஒவ்வொருவர் முகத்திலும் தென்படுகின்றது. என்னென்ன சக்தியை சேமித்துள்ளனரோ அவை முகத்தின் மூலம் தென்படுகின்றது

அனைவரது முகங்களும் மகிழ்ச்சியாகத் தென்படுகின்றது. மேலும் பாரதம் மற்றும் வெளிநாடுகள் சேர்ந்து சேவை செய்துள்ளனர். அதன் ரிசல்ட்டும் மிக நன்றாக உள்ளது. பாரதவாசிகள் வெளிநாட்டினருக்கு பிரேரணை தருவார்கள். மேலும் வெளிநாட்டினர் பாரதவாசிகளுக்கு பிரேரணை தருவர். சேர்ந்து செய்யும்போது தங்களிடமும் உற்சாகம் எழுகின்றது. கேட்பவர்களுக்கும் ஆர்வம் ஏற்படுகின்றது. வெளிநாட்டினர் இவ்வளவு செய்கிறார்கள் என்று நாம் பாரதத்தில் அவ்வளவு செய்யவில்லையே என்று உணர்கின்றனர். மேலும் பாரதவாசிகள் வெளிநாட்டில் செல்லும்போது அவர்களும் உணர்கின்றார்கள். நாம் இங்கிருந்தும் அம்மாதிரி சேவை செய்யவில்லை என்று. உற்சாகம் ஆர்வத்தில் முன்னேறிச் செல்கின்றனர். பாப்தாதாவுக்கு இப்போது கூறிய திட்டங்கள். மூன்று நான்கு நிகழ்ச்சிகள் சேர்ந்து செய்துள்ளீர்கள். பெரிய பெரிய நிகழ்ச்சிகள் செய்துள்ளீர்கள், பாப்தாதா பார்த்தார் சூழ்நிலை முற்றிலுமாக வேறு பட்டு தென்படுகிறது. ஏனெனில் அனைத்து விதமானவர்களும் வருகின்றார்கள் இல்லையா? கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் கூட வருகின்றார்கள். பிற பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களும் ஒன்றாகப் பார்க்கும் பொழுது உண்மையிலேயே உலகம் ஒன்றாக முடியும் என்று நினைக்கின்றனர். எனவே உங்களது இந்த பயிற்சி பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்துள்ளது. இவ்வாறு முயற்சி செய்வோருக்கு பாப்தாதா குறிப்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். தற்போது வெளிநாட்டினரும் வாரிசு தரமானவர்களைக் கொண்டு வர வேண்டும். ஏனெனில் சமயமானது திடீரென என்று இருக்கிறது. எவ்வளவு ஆத்மாக்களுக்கு மங்களம் செய்யவிக்க முடியுமோ, எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளது செய்து கொண்டே செல்லுங்கள். பிறகு நேரம் கிடைக்காது, இப்பொழுதாவது கொஞ்சம் சமயம் உள்ளது. குறைந்த பட்சம் பாபாவினுடைய வீட்டையாவது பார்க்கட்டும்! பாபாவின் அறிமுகத்தையாவது பெறட்டும்! இரக்கம் வருகிறது அல்லவா மிக நன்றாக செய்யவும் செய்கின்றார்கள் ஆனால் பாப்தாதாவிற்கு ஒரு விஷயம் நினைவிற்கு வருகின்றது. ஆரம்ப காலத்தில் பாரத தேசத்தில் எவரேனும் வி.ஐ.பி.யைக் கொண்டு வருவார்கள், அப்பொபமுது செய்தித் தாளிலும் வெளிவரும். மேலும் பத்திரிகையாளரும் ஆர்வத்தோடு வந்து சேர்வர், அந்த வி.ஐ.பிகளுக்கு அரசு பாதுகாப்பு கொடுக்கும்பொழுது அரசு துறையினனுருக்கும் (சேவையின்) பிரபாவம் ஏற்படுகின்றது.

தற்போது அதை செய்யவில்லை. நீங்கள் வந்துள்ளீர்கள் அதற்கு வாழ்த்துக்கள். நிகழ்ச்சிகளில் துணையாக இருக்கின்றீர்கள். இது பாப்தாதாவிற்கு நன்றாகப் பிடித்திருக்கின்றது. இப்பொழுது அப்படிப்பட்ட முக்கியஸ்தர்களையும் கொண்டு வாருங்கள் அப்பொழுது அரசினருக்கும் கொஞ்சம் காது திறக்கட்டும். எப்படி என்றால், இப்பொழுது பாருங்கள் இந்த 75-ஆண்டு பவளவிழா நிகழ்ச்சிகள் பாரதவாசிகளை நன்றாக எழுப்பிள்ளது. முன்பெல்லாம் இந்த பிரம்மா குமாரிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்று எண்ணுவார்கள். இப்பொழுது அவர்களது வாயிலிருந்து வெளி வருகிறது. பிரம்மா குமாரிகளின் இந்த பவளவிழா மிக அற்புதம் அடுத்த ஆச்சரியம் இங்கு சகோதரிகளே நிமித்தமாக இருந்து அனைத்தையும் செய்கிறார்கள். அவர்களுக்கு மிகவும் ஆச்சரியமாகத் தோன்றுகிறது. மேலும் இன்னும் சற்று அருகாமையில் வருவதற்கு ஆசைப்படுகின்றார்கள். சந்திப்பது. கேட்பது மற்றும் உங்களது முக்கியமான பாடங்களான நீங்கள் ஒரு ஆத்மா இந்த பவளவிழா கொண்டாடத்தின் காரணமாக அனைத்து தரப்பினரும் ஆத்மா என்று உணர்வதன் மூலம் அனைவரும் ஒன்றாக முடியும் என்று நினைக்கின்றனர். எப்படி இந்த பவள விழாவானது அற்புதத்தை செய்ததோ அதை போன்று மேலும் செய்து கொண்டே செல்லுங்கள். அனைவருக்கும் செய்தியை சென்று சேர்ப்பதில் ரேடியோ மற்றும் டி.வி. மிகுந்த உதவி செய்துள்ளது. அவைகளுக்கும் பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். வீட்டில் இருந்தபடியே அனைவரும் பார்க்கின்றனர். நாங்கள் விரும்புகின்றோம் ஆனால் எங்கு நேரம் இல்லை என்று சாக்கு போக்கு கூறுகின்றனர். இப்பொழுது வீட்டிலிருந்தபடியே பார்ப்பதால் கொஞ்சம் கொஞ்சமாக விழித்து வருகின்றார்கள். ஆக என்னென்ன செய்து வருகின்றீர்களோ அவை அனைத்தும் நன்றாகவே நிகழ்ந்து வருகின்றது. மேலும் நடந்து கொண்டேயிருக்கும் அதற்கும் வாழ்த்துக்கள்.

இப்பொழுது மனதில் தோன்றுகிறது. இங்கு அபுவிலேயே இருப்பதற்கு உள்ளம் வயிக்கிறது. நல்லது வெளிநாட்டினரைப் பார்த்து மொத்த குடும்பமும் குஷி அடைகிறது. மேலும் 65-நாடுகளிலிருந்து எதன் மூலம் வந்துள்ளீர்கள். அன்பு என்னும் விமானத்தின் மூலம் வந்துள்ளீர்கள்!

முதல் முறையாக பலபேர் வந்துள்ளனர். முதல் முறையாக வந்துள்ளவர்களுக்கு இரட்டை வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர். ஏன்? ஏன் டபுள் வாழ்த்துக்களை கொடுக்க கின்றார். ஏனெனில் காலத்தின் ஐயோ என்ற கூப்பாட்டிற்கு முன்பாகவே உங்களுடைய பாக்கியத்தை ஏற்படுத்தியுள்ளீர்கள். ஐயோ கடவுளே. ஐயோ கடவுளே என்று கூறுவதற்குப் பதிலாக என்னுடைய பாபா என்னுடைய பாபா என்று கூறினீர்கள். எனவே பாப்தாதா வருகின்றவர்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார். குழந்தைகள் வந்து விட்டனர். வந்து விட்டனர் இப்பொழுது கூட தீவிர புருஷார்த்தம் செய்தால், அதன் மூலம் வேகமாக முன்னேறிச் செல்ல முடியும். தீவிர புருஷார்த்தம் செய்வதுதான் இப்பொழுது பாக்கி. சாதாரண புருஷார்த்தம் செய்யும் காலம் கடந்து விட்டது. மேலும் பாப்தாதா வருகின்ற ஒவ்வொரு குழந்தையையும் சுற்றி வந்து பார்க்கின்றார், குழந்தைகள் முன்னேறிச் சென்றுக் கொண்டிருக்கின்றார்களோ அல்லது தாமதாமாகிச் செல்வதில் முன்னேறுகின்றார்களா? பாப்தாதா நாலாபுறமும் இவ்வாறு சுற்றி வந்து பார்க்கின்றார். நீங்கள் நாலாபுறமும் செல்ல முடியாது ஆனால் பாப்தாதா தினமும் சுற்றிக் கொண்டுதான் இருக்கின்றார். பாபாவுடன் கூடவே உங்களது அட்வான்ஸ் பார்ட்டியும் விசேஷமாக சென்றார்கள் இல்லையா? அவர்களும் பாப்தாதாவுடன் கூடவே சக்கரத்தில் வெளி வந்தனர். உங்கள் அனைவரையும் பார்த்தவுடன் குஷி அடைகின்றனர். எங்களுடைய சகோதரன், சகோதரிகள் வந்து விட்டனர். அதனால் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள் அனைத்து குடும்பத்திற்கும் எங்களுடைய வாழ்த்துக்கள். நல்லது.

இன்று மதுபன் நிவாசிகளுக்கு விசேஷமாக பாப்தாதா ஒரு விஷயத்தில் வாழ்த்துக்கள் கொடுக்கின்றார். அது எந்த ஒரு விசயம்? அனைவரும் இப்பொழுது வரைக்கும் மிகுந்த அன்புடன் சேவைகள் செய்து வருகின்றீர்கள். எவ்வளவு பெரிய பரிவாரம் வந்தாலும் சேவையில் நிமித்தமாக மதுபன்வாசிகள்தான் ஆகின்றீர்கள். ஒவ்வொரு மண்டலமும் சகயோகியாக ஆகின்றார்கள், இருப்பினும் யார் நிரந்தரமாக இருக்கின்றார்களோ அவர்களது சகயோகம் இல்லாமல் எதையும் செய்ய இயலாது. அதனால் ஒவ்வொரு மதுபன்வாசிகளும்

சாந்திவனைச் சார்ந்தவர்கள் மட்டும் அல்ல. மேலே உள்ளவர்களும் (ஞான் சரோவர், பாண்டவ பவன். ஹாஸ்பிட்டல் வாசிகளும்) யாரெல்லாம் சகயோகம் கொடுத்துள்ளனர். மேலும் களைப்பற்றவர்களாக மாறி சகயோகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். அதனால் ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய பெயரில் பாப்தாதாவின் அன்பு நினைவை ஏற்றுக் கொள்ளவும். நல்லது. யார் மதுபன்வாசிகளோ, யாரெல்லாம் இங்கு அமர்ந்திருக்கின்றீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். அவர்களுக்கு வாழ்த்துக்கள். நல்லது.

நாலாபுறமும் இருக்கக்கூடிய ஹோலியஸ்ட் குழந்தைகளுக்கு யார் ஒவ்வொரு அடியிலும் என்னுடைய பாபா, என்னுடைய பாபா என்று கூறி பறந்து கொண்டிருக்கின்றார்களோ, மேலும் எப்பொழுதும் தன்னுடைய தீவிர புருஷார்த்தத்தின் மூலமாக முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றார்களோ, மற்றும் மற்றவர்களையும் முன்னேற்றமடையச் செய்து கொண்டிருக்கின்றார்களோ அப்பேற்பட்ட பாப்தாதாவின் மனதின் கண்மணிகளுக்கு பாப்தாதா மிக மிக மிக மிக மனதினுடைய அன்புகளைக் கொடுக்கின்றார். கூடவே ஹோலியின் வாழ்த்துக்களையும் கொடுக்கின்றார். ஏனென்றால் உண்மையிலேயே நீங்கள்தான் ஹோலியாக (தூய்மையாக). இருக்கின்றீர்கள் மற்றும் மற்றவர்கள் யாரும் டபுள் ஹோலியாக ஆவதில்லை. நீங்கள்தான் டபுள் ஹோலியாக ஆகின்றீர்கள். அதனால் கோடி மடங்கு வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்

தாதி ஜானகியுடன்: பரிவாரத்தின் மீதுள்ள மனதின் அன்பு நன்றாக இருக்கின்றது. அனைவரும் குஷி அடைகின்றனர். யார் மனதோடு செய்கின்றார்களோ அவர்களுக்கு குஷி ஏற்படுகின்றது. களைப்பற்றவர்களாக ஆகிச்செய்து கொண்டிருக்கின்றீர்கள், பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் சக்தி கொடுக்கின்றார். ஒவ்வொரு குழந்தையையும் வழி நடத்திக் கொண்டிருக்கின்றார். மேலும் குழந்தைகளுக்கு பாப்தாதா எதை வழி நடத்திக் கொண்டிருக் கின்றாரோ குழந்தைகள் அதற்கு மரியாதையும் மிக நன்றாகக் கொடுக்கின்றார்கள்.

மோகினி சகோதரியுடன்: நன்றாக இருக்கின்றீர்களா? அவ்வாறு இருப்பதற்கு தெரிந்து கொண்டு விட்டீர்கள் இல்லையா? உடலில்

இப்பொழுது சக்தி இல்லை. மெது மெதுவாக எப்படி நீங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றீர்களோ அவ்வாறே நடத்திக் கொண்டிருங்கள். நடத்த முடியாது என்று அவ்வாறு புரிந்து கொள்ளாதீர்கள் ஆனால் உங்களுக்கு விதி தெரிந்து விட்டது. இந்த விஷயத்தில் பாப்தாதாவிற்கு திருட்தி. (சேவைக்குச் செல்ல முடியவில்லை). ஏனென்றால் ஆரம்பத்தில் போய் வந்திருந்தீர்கள். எந்த விதமான நிகழ்ச்சியையும் தராளமாக செய்யுங்கள் ஆனால் சிறிது நேரம் ஓய்வு எடுத்து கொண்டு பிறகு செய்யுங்கள், இப்பொழுது புரிந்து கொண்டீர்கள் அல்லவா? சேவர் செய்வீர்கள்? அப்படி எந்த விஷயமும் இல்லை, எப்பொழுது செல்ல வேண்டுமோ அதற்காக அதிலிருந்து 15-நாட்களுக்கு முன்பாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். செல்ல வேண்டும் ஆனால் தன்னை தயார் படுத்திக் கொள்ளுங்கள். கூடுதலாக எதையும் செய்யாதீர்கள். எப்படி வழிகாட்டுதலே (டைரக்ஷன்) அதன்படி நடக்கவும். சரியாகச் செய்வீர்கள்.

நீலு சகோதரியும் ஆஸ்பிட்டலுக்கு பயணம் செய்வார்கள். தைரியம் வைத்துள்ளீர்கள். சக்தியும் உள்ளது சக்தியும் உள்ளது தானே? பாப்தாதா கொடுத்திருக்கின்றார். மேலும் நீங்களும் சேமித்துள்ளீர்கள். அந்த சக்திகளை ஒப்பிடும்போது எதுவும் பெரிய விஷயம் அல்ல. இவ்வாறுதான் எந்த கஷ்டமும் இல்லை என்று உணர்வீர்கள். சேவையின் பலன் கிடைக்கும் அல்லவா? நல்லது.

பரதாதியிடம்: இவர் ஆஹா! ஆஹா என்று இருக்கின்றார். பாருங்கள் இவரை இப்போது போட்டோ எடுங்கள். நோய்வாய் பட்டவர் மாதிரி தெரிகிறதா என்ன? பிறந்த நாள் வாழ்த்துக்கள்! இவருடைய முகம் எப்பொழுதும் தனக்கு ஒன்றுமேயில்லை என்று இருக்கின்றது. தோற்றம் பொலிவுடன் இருக்கின்றது. நீங்கள் சொல்கின்றீர்கள் அல்லவா? இரண்டு பாபா ஆகையால் இரண்டு வரதானங்கள்.

**நிர்வயர் சகோதரருடன்:** (மூன்று சகோதரர்களுடன்) கட்டக் வாசிகளை ஞாபகப்படுத்தினர். அனைவருக்கும் அன்பு நினைவுகளை கொடுங்கள். அனைவருக்கும் ஊக்கம் இருக்கின்றது. நல்லது. செய்தி பரவுகின்றது அல்லவா? (பூரியின் மகராஜாவும் மதுபன் வருவதற்கு விரும்புகின்றார்) இப்பொழுது வருவார்கள் மேலும் நிறைபேர் வருவார்கள். நீங்கள்

மூவரும் சேர்ந்து திட்டம் தீட்டுகின்றீர்கள் அல்லவா! திட்டத்தை உருவாக்கி பிறகு தாதிகளுக்கும் சொல்லுங்கள், அதற்கு முன் உங்களுக்குள் திட்டம் தீட்டுங்கள். இதை நன்றாகச் செய்கின்றீர்கள். எவ்வாறு இன்று செய்தீர்கள் அல்லவா? அவ்வாறு திட்டங்களை வகுத்து இவர்களுக்கும் சொல்லுங்கள். நன்றாக செய்கின்றீர்கள்.

ரமேஷ் சகோதரருடன்: உடல் நிலை நன்றாக இருக்கிறது அல்லவா? உடல் நிலை மீது கவனம் வைக்கவும். அலட்சியமாக இருந்து விடாதீர்கள். மேலும் எப்பொழுதும் இவ்வாறே புரிந்து கொள்ளுங்கள், நான் பாபா கூடவே இருந்துக் கொண்டிருக்கின்றேன், பாபா கூடவே காரியம் செய்து கொண்டிருக்கின்றேன், தனியாகயில்லை, (அனிலா சகோதரியை பற்றி ஞாபகப்படுத்தினார். அவர் ஹாஸ்பிட்டலில் இருக்கின்றார்.) அவரது உடல் ஆரோக்கியம் இல்லை, சோனிபட் ஊரில் சேவை அதிகரிக்க வேண்டும்) அங்கே சேவையை ஆரம்பியுங்கள். செய்திருக்கக்கூடிய நிகழ்ச்சிகள் நன்றாக இருக்கின்றது. சேவையானது விரிவாக நடந்துக் கொண்டிருக்கின்றது.

பூபால் சகோதரருடன்: சாட்சியாக இருந்து அனைத்து யக்ஞத்தினுடைய காரியங்களையும் நிமித்தமாக இருந்து செய்து கொண்டிருங்கள். பாபாவின் துணை இருக்கின்றது. தனியாக யாரும் செய்ய முடியாது. பாபாவின் துணை இருக்கின்றது. நல்லது.

மோகினி சகோதரியின் சேவையில் எந்த சகோதரி இருக்கின்றாரோ அவர்களைப் பற்றி பாபா கூறினார். பாபாவிற்கு தெரியும் நீங்கள் எந்த சேவை செய்தாலும் அது பாபாவால் கொடுக்கப்பட்ட சேவையாகும். பாபாதான் கொடுத்திருக்கின்றார். எனவே முதலில் பாபா பிறகு சேவை. நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 20.03.2012 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## திருப்தியின் சக்தியை முகம் மற்றும் நடைத்தையில் தாரணை செய்து பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஆகுங்கள், சதா மகிழ்ச்சியாக இருங்கள் மற்றும் மகிழ்ச்சியை பிறருக்கு வழங்குங்கள்!

இன்று முன்னால் இருந்தாலும், தூரத்தில் இருந்தாலும் சந்துஷ்டமணி (திருப்தி) குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய திருப்தியின் சக்தியின் மூலமாக ஜொலிக்கின்ற புன்முறுவலுடன் கூடிய சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இந்த திருப்தியாக இருக்கக்கூடிய சக்தி மிகவும் மகான் தன்மையுடைய தாகும். எனவே இதில் எல்லா விதமான பிராப்திகளும் இருக்கின்றது. திருப்தியாக இருக்கக்கூடிய சக்தியை தாரணை செய்யக்கூடிய திருப்தியான மணிகள் தனக்கும் பிரியமானவர்கள், பாபாவுக்கும் பிரியமானவர்களாகி ஈஸ்வரிய குடும்பத்திற்கும் பிரியமானவர்களாகிறார்கள். ஏனெனில், எங்கு திருப்தி என்பது இருக்கின்றதோ அங்கு அனைத்து சக்திகளும் திருப்தி எனும் சக்தியில் அடங்கியுள்ளது. திருப்தியின் சக்தியினுடைய வாயுமண்டலமானது (வைப்ரேஷன்) நாலாபுறமும் பரவியுள்ளது. திருப்தியாக இருக்கக்கூடிய சந்துஷ்ட மணி ஆத்மாக்கள் ஒருபோதும் மாயாவிடம் தோல்வி அடைய மாட்டார்கள். மாயாதான் இவர்களிடம் தோல்வி அடையும். சந்துஷ்டமணி ஆத்மாக்கள் அனைவரது உள்ளத்தையும் தன்வசமாக்கிக் கொள்ள முடியும். திருப்தியாக இருக்கக்கூடிய ஆத்மாக்கள் மாயா என்றாலும். இயற்கையாக இருந்தாலும் சரி, விதவிதமான தொந்தரவுகளையும் இது ஒரு கார்ட்டூன் பார்க்கின்றோம் என்றே அனுபவம் செய்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு குழந்தையும் தன்னை திருப்தியின் சக்தியினால்

நிரம்பியிருப்பதாக உணர்கின்றீர்களா? உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். நான் திருப்தியின் மணியாக இருக்கின்றேனா? அனேக குழந்தைகள் கூறுகின்றனர் சில சமயங்களில்தான் அவ்வாறு இருக்கின்றோம். சதா இருப்பதில்லை ஆனால் அவ்வப்போது. ஆக, பாப்தாதாவிற்கு இந்த அவ்வப்போது என்ற வார்த்தை நன்றாகயில்லை. பாப்தாதா சதா ஒவ்வொரு குழந்தைக்கும் அன்பு நினைவுகளைக் கூறுகின்றார். குஷியை கொடுக்கின்றார். எனவே பாப்தாதாவிற்கு அல்வப்போது என்ற வார்த்தை நன்றக இருப்பதில்லை. நிரந்தரமாக மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதையே பாப்தாதா விரும்புகின்றார். இந்த அவ்வப்போதுதான் இருக்கின்றோம் என்கிற இந்த வார்த்தையை நீங்கள் மாற்ற முடியுமா? அவ்வப்போது என்ற வார்த்தை பிராமணர்களின் அகராதியிலேயே இருக்கக்கூடாது. சதா என்கிற வார்த்தைதான் இருக்க வேண்டும். ஆக இந்த அனைத்து குழந்தைகளும் பாபாவிற்கு மிக அன்பானவர்கள். மாயாவின் பிரபாவத்தில் இருந்து விலகியிருப்பவர்கள். ஆக இன்று இந்த அவ்வப்போது என்கிற வார்த்தையை முடித்து விட முடியுமா? ஏனெனில், பாப்தாதா பலகாலமாக கூறிக் கொண்டிருக்கின்றார்; எந்தவிதமான பாதகமான சூழ்நிலையும், திடீரென்று வரக்கூடும். அதற்காக தயாராக இருப்பதற்காக இப்போதிருந்தே அவ்வப்போது என்கிற சம்ஸ்காரம் இருந்தால் சதா காலத்தின் இராஜ்ய உரிமையாளராக ஆக முடியுமா? உள்ளத்தின் அன்பு கூடவே இருப்போம். கூடவே செல்வோம், கூடவே இருந்து அரசாட்சி செய்வோம் -இந்த உறுதி மொழி உறுதியாக உள்ளதா? தலையை அசைத்துக் காட்டுங்கள். உறுதியா? எவ்வளவு உறுதி? பிரம்மாபாபா இந்த அவ்வப்போது என்ற வார்த்தையைக் கூறினாரா? நீங்கள் அனைவரும் கூட சதா அமிர்தவேளையில் அன்பு நினைவுகளைக் கூறுகின்றீர்கள். மேலும் சதா பாபாவுடன் ஞானத்தின் விசயங்கள், சிநேகத்தின் விசயங்கள் மற்றும் உற்சாகம், ஆர்வத்தின் விசயங்களைப் பேசுகின்றீர்கள். ஆக பாப்தாதாவோடு அன்பு இருக்கின்றதா? என கை உயர்த்த சொல்லட்டுமா? அனைவரும் இரு கைகளை உயர்த்துவீர்கள். அப்படித்தானே? உறுதியாக? அன்பு இருக்கும் பொழுது அன்புக்குரியவர்களின் ஒவ்வொரு வார்த்தையின் மீதும் அன்பு ஏற்படுகின்றது. பிரம்மாபாபா ஒருபோதும் சிவபாபாவிடம் அவ்வப்போது என்ற வார்த்தையைக் கூறவில்லை. சதா பாபாவைப்

பின்பற்றினார். (ஃபாலோ பாதர்) மேலும் கூடவே உங்களையும் அவ்வாறு செய்வித்தார். ஏனெனில் பிரம்மாபாபாவிற்கு குழந்தைகள் மீது அந்த மாதிரி ஆழமான அன்பு இருந்தது. எனவே உங்களுடைய பெயரும் அவ்வாறே உள்ளது. என்னவாக இருக்கின்றது? பிரம்மா குமாரிகள் என்று தானே? சிவகுமாரிகள் என்கிற பெயர் கிடையாது. ஆக பிரம்மாபாபாவிடம் அன்பு அதாவது பிரம்மாபாபா கூறுவதை பிரம்மா குமார்கள் குமாரிகள் அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர். அன்பு என்றால் முழுமையான சமர்ப்பணம். யாரிடம் நீங்கள் சமர்ப்பணம் ஆகின்றீர்கள்? அவரது கட்டளைப்படி அவர் என்ன சொன்னாரோ அதைப் பின்பற்ற வேண்டும். தனியாக இல்லை. பாப்தாதா என்று தானே கூறுகின்றீர்கள். இருவரும் சேர்ந்து தானே இருக்கின்றார்கள்.

ஆக இன்று பாப்தாதா அவ்வப்போது என்ற இந்த வார்த்தையை ஒவ்வொரு குழந்தையும் நீக்கி விடவேண்டும் என்று விரும்புகின்றார். குழந்தைகள் அனைவரும் பாபாவிற்குத் துணையானவர்கள். அந்த அளவு அன்பு உள்ளது அல்லவா? அன்பிலே தங்களை சமர்ப்பணம் செய்கின்றனர். பொதுவாக அன்பின் காரணமாக தங்களையே சமர்ப்பணம் செய்கின்றனர் ஆனால் இங்கோ வெறும் வார்த்தையை மட்டும் தானே சமர்ப்பிக்க வேண்டியுள்ளது, ஏனெனில், பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் மாலையின் வெற்றி ரத்தினமாக ஆக வேண்டும் என்று விரும்புகின்றார். ஆக உங்களை மாலையின் மணியாக உணர்கின்றீர்களா? திருப்தியாக உணர்கின்றீர்களா? பிராமணர்களின் எண்ணிக்கையோ மிக அதிகம் ஆனால் மாலையின் மணியோ 108-தான். ஆக 108-பேர் தானே வருவார்கள் என்று சொல்கிறார்கள் ஆனால் பாப்தாதா நீங்கள் முழுமை அடைந்தால் (சம்பன்னம்), வெற்றி அடைந்தீர்கள் என்றால்... 108-மாலை என்று நினைக்காதீர்கள், பாப்தாதா மற்றுமொரு சிறிய மாலையைக் கூட உருவாக்குவார் ஆனால் நீங்கள் வெற்றி அடைய வேண்டும். அநேக குழந்தைகள் நினைக்கின்றனர் நமக்கு நம்பர் கிடைக்குமா? கிடைக்காதா? என்று. நீங்கள் முழுமை அடைந்தீர்கள் என்றால், பாபா நிச்சயமாக உங்களுக்கு நம்பர் கொடுத்தே விடுவார். ஏனெனில் பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தை மீதும் அன்பு உள்ளது. கடைசியான குழந்தையாக கூட இருக்கலாம், அவர்மீதும் பாபாவிற்கு மிகுந்த அன்பு உள்ளது. அந்த குழந்தைகூட சுபாவத்தின் வசமாகக் கூட இருக்கலாம்

ஆனால் பாபாபவைத் தெரிந்து என்னுடைய தந்தை என்று கூறியுள்ளவார் அல்லவா? உலகத்தில் மிகப் பெரிய பதவியில் உள்ளவர்கள், அவர்கள் கூட பாபாவைத் தெரிந்து கொள்ளவில்லை ஆனால் கடைசி குழந்தை என்னுடைய பாபா என்று புரிந்துள்ளார். ஏதேனும் பலகீனத்தின் வசமாகியிருக்கலாம் ஆனால் பாபாவைப் புரிந்துள்ளாரே என்னுடைய பாபா என்று அன்போடு கூறுகின்றாரே? எனவே, பாபா முன்பு கூட கூறியுள்ளார். கடைசி குழந்தை மீது கூட பாபாவிற்கு அன்பு உண்டு ஆனால் அவர் மீது குறிப்பாக மங்களமான. பார்வையும், மங்களமான விருத்தியும் உண்டு. இந்த கடைசி குழந்தையும் கூட எப்படியாவது முன்னேற வேண்டும் என்று, ஆக பாப்தாதா மிக தெளிவாக கூறிக் கொண்டிருக்கின்றார். நீங்கள் வேறு விஷயத்தைப் பற்றி நினைக்காதீர்கள் -இது நடக்குமா? அல்லது எப்படி நடக்கும்? நீங்கள் முதலில் உங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள். கர்மயோகி ஆத்மாக்களாக ஆக்கிக் கொள்ளுங்கள். மற்றபடி பாபா ஒவ்வொரு குழந்தையையும் இம்மாதிரி தகுதியுள்ள குழந்தையாக யார் ஆகின்றார்களோ அவர்களுக்கு அனைத்து விதமான பிராப்தியும், வரதானமும் வழங்கி முன்னேறச் செய்வார். பின்னால் வைக்க மாட்டார். ஆக பாப்தாதா இன்று அமிர்தவேளை நாலாபுறமும் உள்நாடு, வெளி நாடுகளில் சுற்றிப் பார்க்க சென்றார். பொதுவாக பாப்தாதா சுற்றி வரத்தான் செய்கின்றார். அனால் இன்று சுற்றி வந்தபோது உங்களின் முன்னோர்களான தாதிகளும் கூடவே சுற்றி வந்தனர். அப்படி சுற்றி வரும்போது என்ன பார்த்தார்? அதை நீங்களும் அறிவீர்கள். நல்ல நல்ல சங்கல்பங்கள் செய்கின்றீர்கள். செய்து காண்பிப்போம், ஆகிக் காண்பிப்போம், கையோடு கைகோர்த்து செல்வோம் அது எந்த கை? சிவபாபாவிற்கோ பரிஸ்தா ரூபம் கூட கிடையாது. அப்படி என்றால் எந்த கை அது? ஸ்ரீமத் என்னும் கை வெளிநாட்டில் இது பேஷன் - கைகோர்த்து செல்வது, ஆனால் இங்கோ ஸ்ரீமத் என்னும் கை ஆக அனைவரும் கையோடு கைகோர்த்து செல்லக்கூடியவர்கள் தானே? அந்த அளவு சக்தியிருக்கின்றதா? பிரம்மாபாபாவைப் பாருங்கள், ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத்படி நடந்து உங்களுக்குக் காண்பித்தார். என்ன செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? முன்னுதாரணமாக விளங்கினார். அதுவும் இந்த சாகார உலகில், நிராகார விசயத்தை விடுங்கள் ஆனால் பிரம்மாபாபா சாகாரத்தில் உங்கள் கூடவே இருந்தார். ஆக எப்படி பிரம்மாபாபா ஸ்ரீமத்

என்னும் கைமேல் கைகோர்த்து சென்று சென்று பரிஷ்தாவாக ஆகி விட்டார். அவ்வாறே தந்தையைப் பின்பற்ற வேண்டும். அல்லவா? நினைவு இருக்கிறது தானே? ஆக எதைப் பின்பற்ற வேண்டும்? எல்லா விஷங்களையும் தெளிவாக செய்து காண்பித்தார். பிரம்மாபாபாவின் முகம், நடத்தையும் உங்கள் அனைவருக்கும் தெரியும் தானே? பிரம்மாபாபாவை நீங்கள் வெளிப்படுத்த முடியும். அல்லவா? தினசரி நடவடிக்கையாக பிரம்மாபாபா மேற்கொண்டார். சாகார உடலில் இருந்தும் சாகார ரீதியில் அனைத்தையும் அனுபவம் செய்தார். பிரம்மாபாபாவின் வாழ்க்கை வரலாற்றை அளைவரும் அறிவீர்கள் தானே? ஆக தந்தையைப் பின்பற்றுங்கள். உங்களை உறுதிப்படுத்துவதற்காக (செம்மை) பிரம்மாபாபாவின் ஒவ்வொரு அடியையும் ரிவைஸ் கூட செய்துள்ளார். அவர் என்னென்ன செய்தார் என்று 8-அடிகளை படிக்கிறீர்கள் தானே? அவைகளைப் பின்பற்ற வேண்டும். அவ்வளவுதான் பின்பற்றுவது என்றால் பிரம்மாபாபாவிற்கு சமமாக ஆவது என்பதாகும். ஆக எண்ணிப்பாருங்கள். பாபாவுடன் அன்பு உள்ளதா? இரு தந்தையர்களிடம் அன்பு உள்ளது அல்லவா? அன்பு என்றால், ஏற்கனவே கூடவே கூறியுள்ளோம். அன்பின் நடைமுறை ரூபம் என்றால், பிரம்மாபாபாவின் செயல்-சொல்லுக்குச் சமமாக இருக்க வேண்டும். அவரைப்போன்றே செய்ய வேண்டும். இதுவே உண்மையான உள்ளத்து அன்பாகும். அனேக குழந்தைகள் என்ன செய்கின்றார்கள் என்றால் பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஆக வேண்டும் என்று நினைக்கின்றார்கள் ஆனால் முதலில் செய்து விட்டு பிரம்மாபாபாவைப் போன்று செய்யவில்லையே என்று பின்னால் யோசிக்கின்றார்கள் ஆனால் செய்திருக்கிறார்கள்தான், ஆனால் பின்பற்றும்போது முதலில் யோசியுங்கள். சங்கல்பம் செய்வதற்கு முன்னால் யோசியுங்கள். பிரம்மாபாபாவிற்கும் இம்மாதிரி சங்கல்பம் இருக்குமா? அவ்வாறு இருந்தால் நடைமுறைப்படுத்துங்கள். செய்து விட்டு பின்னால் யோசிக்காதீர்கள் ஆனால் முதலில் யோசித்து பிறகு பின்பற்றுங்கள். பிரம்மாபாபாவைப் பின்பற்றுவது என்றால், பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஆவது. தைரியம் இருக்கின்றதா? தந்தையைப் பின்பற்றுவதற்கு தைரியம் இருக்கின்றதா? கை உயர்த்துங்கள். செய்தே ஆக வேண்டும். முதலில் எண்ணிப்பார்க்க வேண்டும்; பிறகு செய்ய வேண்டும். செய்த பிறகு எண்ணிப்பார்க்கக் கூடாது.

ஆக இன்று பாப்தாதா விசேஷமாக திருப்தி என்னும் சக்தி ஒவ்வொரு குழந்தைகளிடமும் பிரம்மாபாபாவிற்குச் சமமாகப் பார்க்க விரும்புகின்றார். இந்த திருப்தியில் அனைத்து சக்திகளும் வந்விடுகின்றன. ஆக பாப்தாதாவின் விசேஷமான வரதானம்: சந்துஷ்ட சக்தி பவ என்ன ஆனாலும் சரி, தன்னுடைய திருப்தியாக இருக்கும் நிலையை இழந்து விடாதீர்கள். அனேக குழந்தைகள் கூறுகின்றனர். பாபாவிடம் பேசும்போது திருப்தியாக இருப்பது என்பது எளிதுதான் ஆனால், மற்றவர்களைத் திருப்தி படுத்துவதுதான் கஷ்டம்! நீங்கள் சுயம் யார் என்ன செய்தாலும் சரி. அவ்வாறு செய்யும்போது இது சரியில்லை என்று உங்களுக்குத் தெரிகின்றது. பிறகு அதை ஏன் மனதில் வைத்துக் கொள்கிறீர்கள்? இவர் இப்படிச் செய்கிறார். அவர் அப்படிச் செய்கிறார், இவருடைய சுபாவம் இப்படி இருக்கின்றது. அப்படி இருக்கின்றது. இவைகளை மனதில் வைக்காதீர்கள். ஏனெனில் நீங்கள் பாபாவை உங்கள் மனதில் வைத்துள்ளீர்கள். மனதில் வைத்துள்ளீர்கள் தானே? தலை அசையுங்கள். உறுதியாக வைத்துள்ளீர்களா? எடுத்து விடவும் செய்து பிறகு மனதில் வைக்கிறீர்களா? உண்மையிலேயே வைத்துள்ளீர்கள் என்றால் வேறு விசயங்களை மனதில் வைப்பீர்களா? அப்படியானால் பாபாவின் கூடவே மனதில் வேறு விசயங்களையும் வைப்பீர்களா? ஆக மனதில் அப்படி வைக்காதீர்கள். இந்த யுக்தியை பாப்தாதா ஏற்கனவே கூட கூறியுள்ளார். அம்மாதிரி ஆத்மாவின் பொருட்டு சுபபாவனை, சுப் ஆசைகளை வைத்து, தங்களது சுப் ஆசைகளை காரியத்தில் ஈடுபடுத்துங்கள். இவர் நல்லதே செய்வதில்லை, இது தீயதானது; இவ்வாறு எவரேனும் தீயதை, கெட்டதை உங்களுக்கு தருகிறார்கள் என்றால், நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? ஆக கெட்டது என்று தெரியும்போது புத்தியில் வைப்பது, அல்லது உள்ளத்தில் வைப்பது என்றால் அவ்வாறு கெட்டதை ஏன் ஏற்றுக் கொண்டீர்கள்? அவ்வாறு பாபாவை சதா உங்களது உள்ளத்தில் வைத்து பாபாவிற்குச் சமமாகி விடுவீர்கள். பாபாவிற்குச் சமமாக ஆக வேண்டும் என்பது உங்களது உறுதிமொழி அல்லவா? அம்மாதிரி உறுதியாக ஆக வேண்டும் தானே? ஆவோமா? ஆக மாட்டோமா? தெரியவில்லையே? இந்த மாதிரி யோசிக்கவில்லையே? பாபா மீது அன்பு என்றால், அவரைப் பின்பற்றுவதாகும். பாப்தாதா தற்போது

ஒவ்வொரு குழந்தையையும் சுப ஆசை, மற்றும் சுபபாவனை நிறைந்த ஆத்மாக்களாகப் பார்க்க விரும்புகின்றார்கள்.

டீச்சர்கள் அந்த மாதிரி ஆவீர்களா? டீச்சர்களிடம் பாப்தாதாவிற்கு விசேஷமான அன்பு எப்பொழுதும் இருக்கின்றது. ஏன் இந்த அன்பு? ஏனெனில், பாபாவின் கதியில் அமர்வதற்கு தைரியம் வைத்திருக்கின்றனர். டீச்சர்களுக்கு தைரியம் இருக்கிறது அல்லவா? ஒவ்வொரு டீச்சர்களிடம் இருந்து என்ன விரும்புகின்றார்? ஒவ்வொருவரும் உங்கள் முகம் (Feature) மூலம் எதிர்காலம் (Future) தென்பட வேண்டும். இதனை நிமித்தமான டீச்சர்களுக்கு பாப்தாதா கூறிக் கொண்டிருக்கின்றார்: ஆனால் நீங்களும் கூடவே இருக்கின்றீர்கள் தானே? பாப்தாதா 75-ஆண்டுகளுக்கு முன்பு சிறுசிறு குழந்தைகளுக்கு பள்ளி விடுதியில் இதையே கற்பித்தார். மகிழ்ச்சியோடு இருப்பது மற்றும் அதிர்ஷ்டசாலிகளாக இருப்பது, ஒவ்வொருவருடைய முகமும் இம்மாதிரி இருக்க வேண்டும். இப்பொழுது கூட பாப்தாதா இதையே விரும்புகின்றார். ஒவ்வொரு குழந்தையும் குஷியோடும் மற்றும் அதிர்ஷ்டத்தோடும் கூடிய ஆத்மாக்கள் என்பது அவரது முகத்தில் தெரிய வேண்டும். சொல்லின் மூலம் அதிகமான சேவை செய்துள்ளீர்கள். மேலும் அதுவும் மிக நன்றாக! அதற்கான சான்றிதழ் உண்டுதான் ஆனால் தற்போது உங்களது முகம், நடத்தையின் மூலம் சேவையில் முன்னேறிச் செல்லுங்கள். எழை ஒருவருக்கு லாட்டரி கிடைத்தால் அவரது முகம் மற்றும் நடத்தை பேசுகிறது அல்லவா? அவரது முகத்தை பார்த்து இன்று இவருக்கு ஏதோ கிடைத்துள்ளது என்று அனைவரும் தெரிந்து கொள்கின்றனர். அதேபோன்று உங்களது நடத்தை மற்றும் முகத்தைப் பார்த்து இவர்களுக்கு ஏதோ விசேஷமான பிராப்தி கிடைத்துள்ளது என்று ஒத்துக் கொள்ளட்டும்.

ஆக பாப்தாதா என்ன விரும்புகின்றார். பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஆகுங்கள். தந்தைடைப் பின்பற்றுங்கள். ஏனெனில் தற்போதைய காலச் சூழ்நிலையில் மிகுந்த தொந்தரவு வந்துக் கொண்டிருக்கின்றது மேலும் வரவும் இருக்கின்றது. எனவே பாப்தாதா இந்த அறிவுரை வழங்க விரும்புகின்றார் -சதா குஷியோடு இருங்கள், மற்றும் குஷியை வழங்குங்கள். எவ்வளவு குஷியை மற்றவர்களுக்கு நீங்கள்

தருவீர்களோ, அவ்வளவு அது அதிகரிக்கும். உங்களை குஷியுடன் பார்த்து பிறரும் கூட குறைந்தது 5-நிமிடத்திற்காவது குஷியடையட்டும் துக்கமான ஆத்மாக்கள் உங்களைப் பார்த்து 5-நிமிடமாவது குஷி அடைந்தார்கள் என்றால், அது அவர்களுக்கு மனதிற்குப் பிடித்தமான விசயமாகும். ஆக இன்று பாப்தாதா விசேஷமாக திருப்தியின் சக்தியை ஒவ்வொரு குழந்தையும் நடத்தை மற்றும் முகத்தின் தாரணை செய்து பிறருக்கும் செய்விப்பதற்காக விசேஷ கவனத்தைக் கொடுக்கின்றார். நல்லது.

இன்று முதல் முறையாக வந்திருப்பவர்கள் எழுந்திருங்கள். அனைவருக்கும் தெரிகிறது அல்லவா? பாதி ஹாலுக்கு மேல் முதல் முறையாக வந்திருப்பவர்கள்தான். கை உயர்த்துங்கள். இவர்களது கையையும் பாருங்கள். உங்களது புதுப்புது சகோதரர்கள், சகோதரிகள் உங்கள் கூடவே எவ்வளவு பேர் வந்துள்ளார்கள். வாழ்த்துகள், மிக மிக வாழ்த்துக்கள். இங்கு வரை வந்து சேர்ந்துள்ளீர்கள். பாப்தாதாவை சந்திப்பது வரை வந்துள்ளீர்கள். மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும்? பிரம்மாபாபாவைப் பின்பற்ற வேண்டும் பாப்தாதாவிற்கு உங்களைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஆஹா குழந்தைகள் வந்து விட்டனர். முழு ஈஸ்வரிய குடும்பத்திற்கும் குஷி ஏற்படுகின்றது. நமது சகோதர சகோதரிகள் வந்து விட்டனர் என்று. இப்பொழுது பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள். என்ன நடந்தாலும் சரி. ஏதேனும் சந்தேகம் இருந்தாலும், அல்லது ஏதேனும் பிரச்சனைகள் இருந்தாலும், பிரச்சனை என்பது உலகத்திற்குதான், அவைகளை உடனே உங்களது டீச்சர் மூலம் தீர்வு காணுங்கள். இரண்டு நாட்கள் ஆகி விட்டது இது எப்படி என்று ஒத்திப்போட வேண்டாம். ஏனெனில், மிகவும் பின்னால் வந்துள்ளீர்கள் இல்லையா? மேலும் முன்னால் முன்னேறிச் செல்ல விரும்புகிறீர்கள் இல்லையா அல்லது பின்னால் தங்கி விட விரும்புகிறீர்களா? இல்லையல்லவா? முன்னால் செல்ல விரும்புகிறீர்கள் என்றால், அவ்வாறு செல்வதற்கு இதுதான் ஒரே விசயம். அதாவது மனதில் எந்தவிதமான வீணான விசயங்களையும் வைத்துக்கொள்ளக்கூடாது. அதற்கு அமிர்தவேளை பாபாவோடு சந்தித்த பிறகு, ஒன்று அமிர்தவேளை கட்டாயம் செய்ய வேண்டும். அதன் பிறகு உங்களது நாள் முழுவதுமான தினசரி நடவடிக்கையில் எதில் மனம் பிஸியாக இருக்குமோ அம்மாதிரி ஏதேனும் பயிற்சியை

(டிரில்) கூடவே செய்து வர வேண்டும். அதற்கு பாப்தாதா பல பயிற்சிகளை ஏற்கனவே கூறியுள்ளார். பாப்தாதா அனைவருக்குமாக கூறுகிறார். இடையிடையே நேரத்தை ஒதுக்கி பழையவர்களானாலும் சரி, புதியவர்களானாலும் சரி முற்றிலும் அசரீரி அவதற்கான பயிற்சியை அவசியம் செய்ய வேண்டும். ஏனெனில் வரவிருக்கும் காலங்களில் ஒரு வினாடியில் அசரீரி ஆகியே தீர வேண்டிய சூழ்நிலை வரும். ஆக இந்த பயிற்சியை செய்பவர்களுக்கு சமயம் கிட்டவில்லை என்று யாரும் சொல்லக்கூடாது. எவ்வளவுதான் ஒருவர் பிஸியாக இருந்தாலும் சரி. தாகம் எடுக்கிறது என்றால் நீர் அருந்துவதற்கு செல்ல மாட்டீர்களா? அவசியம் என்று கருதி குடிப்பீர்கள் அல்லவா? ஆக இவ்வாறு ஒரு நிமிடமாவது அசரீரியாகும் இந்த பயிற்சியை கட்டாயம் செய்யுங்கள். அந்த (கடைசி) நேரத்தில் பயிற்சி செய்ய முடியாது. சமயம் வரும்போது செய்து விடுவோம் என்று அநேகர் நினைக்கின்றனர் இல்லையா? ஆனால் அப்படி அல்ல. இந்த பல பிறவிகளின் தேக உணர்வின் பயிற்சி அந்த சமயத்தில் அசரீரி ஆவதற்கு விடாது. எனவே இப்பொழுதிருந்தே ஏதேனும் சமயத்தை ஒதுக்கி நாள் முழுவதிலும் அவ்வப்போது ஏதேனும் நேரத்தை நிச்சயத்து ஒரு வினாடியாவது நான் அசரீரி ஆத்மா என்கிற ஆத்மா சொரூபத்தில் ஸ்திரமாக ஆகி விடவேண்டும். தேகத்தின் உணர்வு அதன் பக்கம் உங்களை ஈர்க்கக் கூடாது. இந்த பயிற்சியை அனைவரும் செய்ய வேண்டும். பழையவர்களாக இருந்தாலும் சரி. புதியவர்களாக இருந்தாலும் சரி. ஏனெனில் பாப்தாதா சில காலமாக கூறிக் கொண்டு வருகின்றார் ஆனால் கட்டாயம் செய்தே ஆக வேண்டும். இல்லையென்றால் ஸ்ரீமத் என்னும் கையோடு கை கோர்த்து செல்ல முடியாது. உங்களுடைய வாய்தா (உறுதிமொழி) கூடவே செல்வோம்; கூடவே ராஜ்யத்தில் வருவோம் என்பதாகும். ஆக. இந்த பயிற்சியையும் அனைவரும் செய்ய வேண்டும். மற்றபடி புதியதாக யாரெல்லாம் வந்துள்ளீர்களோ அனைவரும் குஷியாக இருங்கள். வளமாக இருங்கள், முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். நல்லது.

மகாராஷ்டிரா, ஆந்திரா மற்றும் மும்பை ஆகியோருக்கு சேவையின் முறை: நல்லது. இந்த மண்டலத்தின் எண்ணிக்கை மிக அதிகம். பெயரே மகாராஷ்டிரா, ஆக மகாவாக இருப்பீர்கள் அல்லவா? எப்படி பெயரோ அப்படியே எண்ணிக்கையும் மகான், அதிகமாகும். மும்பை

மற்றும் டில்வி இரண்டு பக்கமும் பாப்தாதாவிற்கு ஒரு விசயத்தில் விசேஷ உற்சாகம் ஆர்வம் உண்டு. சேவையோ அதிகம் செய்கின்றனர். அதை சொல்ல வேண்டாம். மிக நன்றாக செய்து வருகின்றனர். மேற்கொண்டும் செய்வர் ஆனால் பாப்தாதா டில்லி மற்றும் மும்பை வாசிகளிடம் இதை விரும்புகின்றார் உங்களிடம் சம்மந்தம் தொடர்பில் வந்துள்ள விசேஷ ஆத்மாக்கள், அவர்கள் மைக்காக ஆக முடியும். மேலும் வாரிசாக ஆகக் கூடும். அம்மாதிரி ஒரு குரூப்பை உருவாக்குங்கள். ஏனெனில், அனைவருமே அனைத்து வர்க்கங்களின் (விங்ஸ்) லிஸ்டை பாப்தாதாவிற்கு அனுப்பியுள்ளனர். பாபாவும் பார்த்துள்ளார். அந்த அட்டவணையில் பாபாவின் பெயரை விளங்க வைக்கக்கூடிய நல்லவர்கள் உள்ளனர். இப்பொழுது அவர்களை வெளியே கொண்டு வாருங்கள். உங்களுக்குப் பதிலாக அவர்கள் சொற்பொழிவாற்றட்டும். தங்களது அனுபவத்தைக் கூறட்டும். உங்களது ஞானம் என்ன? அவர்களது வாழ்க்கையில் என்ன வித்தியாசத்தைக் கண்டுள்ளனர். அதனை வர்ணிக்கட்டும். நிகழ்ச்சிகள், விழாக்கள் நடைபெறும்போது இப்பொழுது கூட அநேக தங்களது அனுபவங்களை மிக நன்றாகக் கூறுகின்றனர் ஆனால் அதுவோ நிகழ்ச்சிகளில் கூறுகின்றார்கள் ஆனால் தொடர்ந்து அவர்களது வாழ்க்கையிலும் அனுபவம் செய்ய வேண்டும். இந்த கவனத்தை அவர்கள் மீது நீங்கள் செலுத்தினால், அவர்கள் வெளிப்படுவார்கள். பாப்தாதா எந்த அட்டவணையைப் பார்த்தாரோ அதில் அனைவரது தகுதியையும் கூட பார்த்தார். கொஞ்சம் முயற்சி செய்து அவர்களை முன்னேறச் செய்யுங்கள். ஒவ்வொரு வர்க்கமும் உண்மையில் இந்த அட்டவணையில் வெளிப்படையாக ஈஸ்வரிய குடும்பம் மற்றும் பாபாவிற்கு முன்னால் கொண்டு வர வேண்டும். காரியத்தை செய்தவர்கள் வார்க்கத்தினர். செயலை செய்துள்ளதை பாப்தாதா பார்த்தார். பலகாலமாக செய்து கொண்டிருக்கின்றீர்கள் ஆனால் தற்போது அதில் ஏதேனும் புதுமையை கொண்டு வாருங்கள். புதுமை என்றால் அவர்களை வாரிசு ஆக்குவதாகும். குறைந்த பட்சம் உங்கள் தொடர்பில் உள்ளவர்களை அருகாமையில் கொண்டு வந்து சேவையிலும் ஈடுபடுமாறு செய்யுங்கள். இங்கே வந்து போகும் சம்மந்தம் மட்டும் அல்ல, அவர்கள் பாபா மற்றும் குடும்பத்திற்குத் துணையாக நிற்கட்டும். இதுவும் நடைபெற வேண்டும். பிராமணர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஏதேனும் ஒரு சங்கல்பத்தை

செய்வார்கள் என்றால், அதன் வெற்றி நிச்சயம் உண்டு என்பதை பாப்தாதா பார்க்கின்றார் ஆனால் அனைவரது சங்கல்பமும் ஒன்றாக இருக்க வேண்டும். ஏனெனில் தற்போது வாயுமண்டலமே மாறிவிட்டுள்ளது. எப்போதிருந்து நீங்கள் இந்த 75-ஆண்டு பவளவிழா கொண்டாடி வருகிறீர்களோ, அப்போதிருந்து இவர்கள் ஏதோ செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பது அவர்களுக்கு புரிய வந்துள்ளது. இவ்வாறு கூறும்போது நல்லதாகவே கூறுகிறார்கள். இந்த அளவிற்கு மாற்றம் என்பது வந்துள்ளது. எனவே நீங்களும் கூட மாற்றத்தைக் கண்டு சற்று முயற்சி செய்வீர்களாயின், உங்களது குடும்பம் எவ்வளவு அதிகரிக்கும்! ஆக பாப்தாதா இப்படிப்பட்டவர்களை எங்காவது ஒன்று சேர்வதைக் காண விரும்புகின்றார். மதுபனில் சந்திக்க வருகிறார்கள். அது வேறு விசயம் ஆனால் குடும்பத்தினுடையவர்களாகி வர வேண்டும். ஏனெனில், சேவையில் ஏதேனும் புதுமை என்பது வேண்டும் அல்லவா? நல்லது. பாப்தாதா குஷி அடைகின்றார். ஏனெனில் இவர்கள் எழுந்துள்ளனர், இல்லையா? ஆக, பாப்தாதா பார்த்து குஷி அடைகிறார். இன்னும் ஒரு பாப்தாதாவின் ஆசை பாக்கியுள்ளது. ஒவ்வொரு மண்டலத்தினரின் பொருட்டும் அது உள்ளது. ஒவ்வொரு சென்டரும் எங்களது சென்டர் எந்தவிதமான தடைகளும் இல்லாமல் உள்ளது (நிர்விக்ன) என்ற நல்ல செய்தியை அனுப்ப வேண்டும். பிறரோடு ஒன்றிணைந்து செல்கின்றோம். அனைத்து பாபா குழந்தைகளும் மிகச்சரியாக உள்ளனர். என்னென்ன நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி உள்ளதோ அதில் பிஸியாக இருக்கின்றனர். தடையேதும் இல்லை. இவ்வாறு எந்த மண்டலத்தில் இருந்தும் செய்தி வரவில்லை. மகாராஷ்டிரம் என்றால் மகான் காரியத்தை செய்வீர்கள் தானே! எந்த மண்டலமும் இச்செய்தியை அனுப்பவில்லை. ஆகியே தீர வேண்டும். நீங்கள்தான் ஆக வேண்டும். வேறு யார் அப்படி ஆவார்கள். உங்களது தபஸியா ஒன்றும் குறைந்ததல்ல, டீச்சர்களாக இருந்தாலும் சரி. இறை மாணவர்களாக இருந்தாலும் சரி, ஒவ்வொருவருமே மகான் ஆத்மாக்கள்தான் இந்த தடைகளற்ற நிலையை சற்றே கொண்டு வாருங்கள் அப்பொழுது எப்படி உங்களது. ஜடசித்திரரங்களை (கோவில் விக்கரங்களை) சுபபாவனையோடு பார்க்கின்றார்களோ அப்படி உங்களை சைத்தன்ய ரூபத்தில், தேவிகளின் ரூபத்தில் தேவதாக்களின் ரூபத்தில் காண்டர். மற்றபடி சேவை அனவைருமே நன்றாக

செய்துள்ளீர்கள். அதற்காக பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார்.

நிஷார் சகோதரர் எழுந்திருங்கள்: பாப்தாதா செய்தியை கேட்டறிந்தார். உங்களது நடைமுறையில் உள்ள அந்த சேவை (Future of Power) நன்றாகவே உள்ளது. மேலும் நன்றாக ஆகிக் கொண்டே செல்லும். முன்னேறிச் செல்லுங்கள். பாப்தாதா இந்த செய்தியைக் கேட்டறிந்துள்ளார்.

ஐ.டி குரூப்: (தகவல் தொடர்பு): படங்கள் மற்றும் போர்டுகளை மிக நன்றாகச் வடிவமைக் கின்றனர். ஏற்கனவே கூட பாப்தாதா கூறியுள்ளார். ஒவ்வொரு வர்க்கத்தினரும் ஏதேனும் புதுமையை செய்து கொண்டிருக்கின்றனர். தற்போது ஒவ்வொரு வர்க்கத்தின் விசயமும் வெளியேயும் பரவி வருகின்றது. உதாரணமாக மருத்துவர்களின் சேவையில் இதய சிகிச்சை யானது மிகவும் பிரபலமாகியுள்ளது. அதிகாரப் பூர்வமாக புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளதையும் பாப்தாதா பார்த்தார். ஆக அது விளம்பரத்திற்கு மிக நல்லதாகும். அவ்வாறே மேலும் மண்டலத்தைச் சார்ந்தவர்கள் நல்ல நல்ல நிமித்தமாகி உள்ளவர்கள் செய்தியை பரவச் செய்ய முடியும், அப்படிப்பட்டவர்களோடு தொடர்பு வைத்துள்ளனர். அதனுடைய பலனும் நன்றாக உள்ளது. ஆக பாப்தாதா ஒவ்வொரு வர்க்கத்தினருக்கும் இதையே கூறுகின்றார். எப்படி தற்போது முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்களோ அதே போன்று மென்மேலும் முன்னேறிக் கொண்டு செல்லுங்கள். அப்பொழுது அனைவரது பார்வையும் உங்கள் மீது விழும். கொஞ்சம் கொஞ்சமாக உலகம் முழுவதும் பிரபலமாகிக் கொண்டே செல்வீர்கள். எனவே பாப்தாதா இந்த தகவல் தொடர்பு வர்க்கத்தினருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். அனைவருமே நன்றாக முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். மேலும் முயற்சியின் கூடவே பாப்தாதாவும் உங்கள் அனைவருக்கும் துணையாக இருக்கின்றார்.

இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகளுடன்: இரட்டை வெளிநாட்டினர் இரட்டையிலிருந்து பன்மடங்காக ஆகிக் கொண்டிருக்கின்றனர். தங்கள் மீதும், தங்களது சுவமானத்தின் மீதும்,

தங்களது விருத்தியின் மீதும் நன்றாக கவனம் செலுத்தி வருகின்றனர். மற்றும் பிறரையும் கவனம் கொள்ளச் செய்கின்றனர் என்பதை பாப்தாதா பார்த்து வருகின்றார். யக்ஞ சிநேகியின் பாசுத்தையும், யக்ஞ சகயோகி பாகத்தையும் மிக நன்றாகச் செய்து வருகின்றனர். எனவே பாப்தாதா இரட்டை வெளிநாட்டினருக்கு பன்மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். பாப்தாதா உங்களது கதைகளைக் கேட்டு வருகின்றார். வெறும் சிநேகிகள் மட்டும் அல்ல; சிநேகிகளுடன் கூடவே சகயோகியாகவும் ஒவ்வொரு காரியத்திலும் ஈடுபடுகிறார்கள். மேலும் தங்களது எதிர்காலத்தை சேமிப்பதிலும் புத்திசாலியாக உள்ளனர். எனவே இப்போது கூட பாருங்கள் எத்தனை நாடுகளில் இருந்து வந்திருக்கின்றார்கள். இந்த ஒரு குழுவை சிநேகி, சகயோகிகளாக ஒவ்வொரு காரியத்திலும் ஒத்துழைக்கக்கூடிய குழுவினரைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகின்றார். உங்களுக்கும் குஷி, பாபாவிற்கும் குஷி மேலும் பரிவாரத்தற்கும் குஷி. மதுபன்வாசிகள் எப்பொழுதுமே கூறிக் கொண்டிருக்கின்றார்கள். இரட்டை வெளிநாட்டினர் மதுபனின் அலங்காரமாவார்கள். மேலும் பாபாவின் விஷ்வ கல்யாணகாரி என்னும் பெயரை நிரூபித்துள்ளனர். எனவே அனைவரும் தீவிர புருஷார்த்திகாளக ஆக வேண்டும். வெறும் புருஷார்த்திகளாக மட்டும் அல்ல; தீவிர புருஷார்த்திகள் ஏனெனில், தற்போதைய காலம் அப்படி அனைவருமே தீவிர புருஷார்த்தம் செய்யும் காலம். புருஷார்த்தம் செய்யும் காலம் கடந்து போய் விட்டது. தற்போது தீவிர புருஷார்த்தம் செய்ய வேண்டிய நேரம். எனவே ஒருபோதும் சதாதாரண புருஷார்த்தி ஆக வேண்டாம். சதா சோதனை செய்து வாருங்கள். தவிர தன்மையுள்ளதா? சதாரணமாக ஆகி விடவில்லையே? தற்போது சமயமும் கூட அறிவிப்பை தந்துக் கொண்டிருக்கின்றது தீவிர புருஷாத்திகளாக ஆவதற்கு. ஆக பாப்தாதாவிற்கு குஷி; ஈஸ்வரிய குடும்பத்தினருக்கும் குஷி; ஆக அனைவருக்குமே வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். தந்தைக்கும் குஷியே, எவ்வளவு நாடுகளில் இருந்து இங்கே வந்து சேர்ந்துள்ளனர்.

நாலாபுறங்களிலும் உள்ள தூரத்தில் அமர்ந்தபடியே உள்ளத்தில் பாபாவை அமரச்செய்யும் குழந்தைகளைப் பாப்தாதாவும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அனைவருடைய அன்பின் நறுமணம் மதுபன் வந்தடைகிறது. ஆக தற்போது அனைவருமே மிக வேகத்துடன் செல்ல

வேண்டும். தீவிர புருஷார்த்தம் செய்ய வேண்டும். தீவிர தன்மையானது உலகினரிடம் சுகத்தைக் கொண்டு வர வேண்டும். துக்கமானவர்களை சுகமானவர்களாக ஆக்க வேண்டும். இவ்வாறு சுகம் அடையச் செய்யும் செய்தியைத் தந்து அனைவரையும் சுகமானவர்களாக ஆக்க வேண்டும். இந்த சேவையில் தீவிரம் உள்ளது. மேலும் தீவிரத்தைக் கொண்டு வர வேண்டும். நல்லது. அனைவருக்கும் மிகமிக அன்பு நினைவுகளை பெற்றுக் கொள்வீர்களாக?

மோகினி சகோதரியுடன்: இம்மாதிரி எமர்ஜென்சியில் தீவிர புருஷார்த்தம் செய்ய வேண்டும். அம்மாதிரி புருஷார்த்தம் செய்யுங்கள். அனைவரும் ஆச்சரியப்பட வேண்டும். இவர் அற்புதத்தை செய்துள்ளார் என்று, முதலிலிருந்தே சோதனை செய்யுங்கள். விட்டுவிடுகிறீர்கள் இல்லையா? சோதனையை இடையிடையே செய்து வாருங்கள். அதனால் என்ன ஆகும் என்றால். நடப்பதற்கு முன்பாகவே மருந்தாக அமைந்து விடும். ஒவ்வொரு 15-நாட்கள் அல்லது ஒரு மாதத்தில் சோதனை செய்து வர வேண்டும். பிறகு சரியாகி விடும். மிகவும் நல்லது.

நீலு சகோதரியுடன்: யாத்திரை எளிதாக இருந்தது தானே! கஷ்டம் ஏதும் இல்லையே? அருகிலேயே இருக்க வேண்டும். (குல்ஸார் தாதி மோகினி சகோதரி, நீலு சகோதாரி இருவருக்குமே மிக நன்றாக சகாஷ் தந்துள்ளார்) அனைவரும் கூட தந்தார்கள். மதுபனை யாரும் மறக்க முடியுமா? மதுபன் அனைவரது நரம்பிலும் ஊறிப்போய் உள்ளது.

ஜானகி தாதியுடன்: லண்டன் செல்கிறீர்கள் அல்லவா? செல்வதற்கு உடல்நிலை சரியாக இருந்தால் செல்லலாம். இல்லையென்றால் செல்ல வேண்டாம். (அமெரிக்காவில் மிகுந்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்) என்ன ஏற்பாடுகள் செய்தாலும் சரி, உங்களால் நடத்த முடியும். என்றால் செல்லுங்கள். உங்களுடைய உடல் ஆரோக்கியத்தைப் பார்த்து, நடக்க முடியும் என்றால் செல்லுங்கள்.

மூன்று முக்கிய சகோதரர்களுடன்: உங்களது மீட்டிங் செய்தியை பாப்தாதா கேட்டறிந்தார். என்ன நினைத்துள்ளீர்களோ அதை நன்றாகவே நினைத்துள்ளீர்கள். தற்போது அதன் படியே செல்லுங்கள்.

உதவியும் கிடைக்கும். கொஞ்சம் விரிவாக்கும்போது உதவி செய்பவர்கள் கூட வந்து விடுகின்றார்கள். மற்றபடி என்ன நினைத்தீர்களோ அது சரியே. (பல்கலைக்கழக சேவை பற்றி ரமேஷ் சகோதரர் கேட்டார்): பாப்தாதா என்ன நினைக்கிறார்கள் என்றால், முதலில் பல்வேறு பல்கலைக் கழகங்களில் சேவை செய்யுங்கள்; எப்படி தற்போது ஒரு பல்கலைக்கழகத்தோடு தொடர்பு வைத்துள்ளீர்கள் இல்லையா? (அண்ணாமலை பல்கலைக்கழகம்) அவ்வாறே மேலும் பல பல்கலைக்கழகங்களில் முதலில் சேவை செய்யுங்கள். அவர்களது சேவை செய்து உங்களின் துணையாக்குங்கள். இன்னும் எவ்வளவோ பல்கலைக்கழகங்கள் பாக்கியுள்ளன. முதலில் அவைகளுக்கு சேவை செய்யுங்கள். பிறகு அவர்களே உங்களை சேர்த்துக் கொள்ள முன்வருவார்கள். நீங்கள் இவ்வளவு செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறுவார்கள். எப்படி ஒரு பல்கலைக்கழகத்தில் செய்துள்ளதால், அதன் மூலம் பிரசித்தமாகியுள்ளதல்லவா? அம்மாதிரி 10-12 பெரிய பல்கலைக்கழகங்களை உங்களுடையவர்களாக ஆக்கிப் பாருங்கள். அவர்களே உங்களுக்கு பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தித் தருவார்கள். நீங்கள் செலவு செய்ய வேண்டிய அவசியமே இராது. இம்மாதிரி சந்தித்துக் கொண்டேயிருங்கள். மேலும் முடிவு செய்யுங்கள். பாப்தாதா குஷியாக உள்ளார். (சண்டிகாரில் பவளவிழா நிகழ்ச்சி மிகவும் நன்றாக அமைந்தது; பூரியில் நடக்க உள்ளது) எல்லா இடங்களிலும் தங்கள் தங்கள் விதிபிரமாணம் குஷியோடு, திறந்த மனதோடு செய்துள்ளனர். எல்லா பக்கத்திலிருந்தும் நல்ல ரிசல்டே வந்து கொண்டிருக்கின்றது.

**சகோதரர் இராம் நாராயண் மீனா, (இராஜஸ்தான் சட்டபேரவையின் உப தலைவர்):** இப்பொழுது இந்த பிராமண குலத்தில் விசேஷமான பாகத்தைச் செய்யுங்கள். (உங்களது குழந்தை நான் என்று கூறுகிறார்) அனைவரிலும் நல்ல குழந்தை பாலகனிலிருந்து எஜமான் ஆகும் குழந்தை பாலகன் என்றும் எஜமானராக இருப்பார். அமிர்தவேளை எழுந்து, எத்தனை மணிக்கு முடிந்தாலும் எழுந்து பாபாவை நினைவு செய்யும்போது தினமும், பாபாவிடமிருந்து ஆசீர்வாதம் கிடைக்கும். அதன் மூலம் குஷியாகவும் இருப்பிர்கள். தடைகளற்றும் இருப்பீர்கள். அனைத்தும் சரியாகி விடும். உங்களிடம் சக்தி சேமிப்பாகும். அப்போது

அவர்களிடமும் (சட்டசபை உறுப்பினர்கள்) சக்தி நிறையும். கொஞ்சம் முயற்சி செய்து அதிகாலை எழுந்து பாபாவை நினைவு செய்யுங்கள். சக்தியை அடைந்துக் கொண்டே செல்லுங்கள். என்னுடைய பாபா என்று சொல்லவும்! சக்தியாலியாக ஆகவும்! மதுபனை சுற்றிப்பார்த்தீர்களா? குடும்பத்தைப் பார்த்தீர்களா? நன்றாக இருக்கிறதா? இப்பொழுது இந்த பரிவாரத்தின் கூடவே எவ்வளவு அருகாமையில் வருவீர்களோ அவ்வளவு லாபம் உங்களுக்குக் கிடைக்கும்.

சுரேஷ் ஒபராய்: சேவையை எப்படி முன்வந்து எடுத்துள்ளீர்களோ அவ்வாறு செய்து கொண்டு முன்னேறுங்கள்.

சிவானி சகோதரியிடம்: வரதானி நீங்கள்! பாபாவிடமிருந்து நன்கு வரதானம் கிடைத்துள்ளது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 03.04.2012 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எனது என்பதை உனது என்பதாக மாற்றி கவலையில்லாத ராஜாவாக வீணானவைகள் வருவதற்கு வழியில்லாதவாறு, அந்த அளவு பாபாவின் அன்பு மற்றும் சேவையில் மனதை முழுவதுமாக ஈடுபடுத்துங்கள்!

இன்று பாப்தாதா நாலா பக்கங்களிலுள்ள தனது கவலையில்லாத இராஜாக்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தையும் அதிகாலையில் இருந்தே எழுந்து கவலையில்லாத ஸ்திதியில் ஸ்திரமாகி கர்மங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். இந்த கவலையில்லாத இராஜாவின் வாழ்க்கை இராஜாங்கமும், அதே சமயத்தில் கவலையில்லாத நிலையும் எவ்வளவு அன்பான நிலையைத் தருகிறது என்று ஒவ்வொரு குழந்தைக்கும் அனுபவம் உள்ளது. ஏனெனில் நீங்கள் அனைவரும் பாபாவிற்கு உங்களது கவலைகளைத் தந்து விட்டு மகிழ்ச்சியை எடுத்துக் கொண்டு விட்டீர்கள். அந்த மகிழ்ச்சியையும் கூட அழிவற்றதாக எடுத்துக் கொண்டுள்ளீர்கள். இந்த கவலையில்லாத வாழ்க்கை எவ்வளவு அன்பாக உள்ளது என்று ஒவ்வொருவரும் அனுபவம் செய்கின்றீர்கள். இரவும் பகலும் எவ்வித விஷயத்தின் கவலையும் கிடையாது? ஆனால் மகிழ்ச்சியே நிறைந்துள்ளது. இந்த கவலையில்லாது இருக்கும் வாழ்க்கையை பாபா இந்த ஒரு பிறவிக்காக மட்டும் அல்ல ஆனால் அநேக பிறவிகளுக்காக கவலை யில்லாத இராஜாக்களாக ஆக்கியுள்ளார் என்பதை அறிவீர்களா? கவலையில்லாத வாழ்க்கை இருக்குமானால், சதா நெற்றியில் திவ்ய ஜோதியானது ஒளி விட்டுக் கொண்டிருக்கும் அனுபவத்தை இப்பொழுது செய்வீர்கள். ஒருவேளை

கவலையிருந்தால் தலையிலுள்ள கூடையில் அநேக விதமான துக்கங்கள் நிறைந்திருக்கும். இந்த கவலையில்லாத வாழ்க்கை விதியானது மிகவும் எளிதானது. என்னென்ன எல்லைக்குட்பட்ட எனது எனது என்பவை உள்ளதோ அவைகளை உனது என்று ஆக்கியுள்ளீர்கள். எனது மற்றும் உனது என்பதில் ஒரு மாத்திரை அளவுக்கூட வித்தியாசம் இல்லை. எனது மற்றும் உனது ஆனால் எனது என்பதை உளது என்று மாற்றுவதன் மூலம் வாழ்க்கையானது எவ்வளவு மகிழ்ச்சி நிறைந்ததாக ஆகிறது, அவ்வாறு ஆகி விட்டீர்கள் அல்லவா? தலையை அசையுங்கள். ஆகி விட்டீர்கள் கவலையில்லாத வாழ்க்கை வந்து விட்டது.

கவலை நிறைந்த வாழ்க்கையின் ஆதாரம் வீணான எண்ணங்கள். ஆக, ஒவ்வொரு குழந்தையின் உள்ளேயும் வீணான சங்கல்பங்களின் அடையாளமே இருக்கக்கூடாது. ஏனெனில், எனது என்பதை உனது என்று மாற்றி விட்ட பிறகு நீங்கள் என்னவாக ஆகி விட்டீர்கள்? நீங்கள் கவலையில்லாத ராஜாவாகி விட்டீர்கள். மேலும் இந்த கவலையில்லாத ராஜாவின் வாழ்க்கை எவ்வளவு அன்பு நிறைந்ததாக உள்ளது. தற்போது பாப்தாதா இதையே ஒவ்வொரு குழந்தையிடமும் விரும்புகின்றார்.

ஒவ்வொரு கர்மத்தையும் செய்து கொண்டே கவலையில்லாத ராஜா! எந்த வித கவலையும் கிடையாது ஏன், என்ன, எப்படி, எதுவரை.. இம்மாதிரியான அனைத்து கேள்விகளும் முடிந்து போயின. பாப்தாதா இன்று இந்த வாழ்க்கையின் கடைசி தினத்தில் இதையே விரும்புகிறார்- ஒவ்வொரு குழந்தையும் வீணானவைகளை எனது என்பதற்குப் பதிலாக உனது என்று ஆக்கி விடட்டும்! பாபா தானாகவே அனைத்தையும் பஸ்பமாக்கி விடுவார். நீங்கள் ஒரு சிறிய அளவு மாற்றத்தை மட்டும் செய்யுங்கள். சம்மதமா? இது முடியுமா? முடியும் என்றால் கை உயர்த்துங்கள்! மிகவும் நல்லது ஏனெனில் இந்த 5-6 மாதங்கள் உங்கள் அனைவருக்கும் உலகத்தின் முன்னால் துக்கமான ஆத்மாக்களுக்கு சக்தி வாய்ந்த எண்ணத்தின் மூலமாக சுகம் மற்றும் சாந்தியின் கிரணங்களை அளிக்க வேண்டும். இதிலேயே உங்கள் மனதை ஈடுபடுத்தியிருக்க வேண்டும். வீணான எண்ணங்கள் கூட எதில் வருகிறது? மனதில்தானே வருகிறது ஆக ஒவ்வொரு குழந்தையும்

கவலையில்லாத ராஜா குழந்தையாக தங்களுடைய மனதை அதாவது எண்ணங்களை வீணானவைகள் வராத அளவு மிகவும் சுறுசுறுப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதையே பாப்தாதா விரும்புகிறார். அதிகம் கஷ்டப்பட்டு முயற்சி செய்தல் கூடாது ஆனால் பாபாவின் அன்பிலேயே அந்த அளவு பிஸியாக இருங்கள், அதிகம் செய்யும் சேவையில் அந்தளவு மனதை பிஸியாக வைத்திருங்கள். யுத்தம் செய்யாத அளவு அப்படி வையுங்கள். நாங்கள் விரும்புவதில்லை, ஆனால் வந்து விடுகிறது என்று அநேக குழந்தைகள் கூறுகின்றனர். இதனை என்னவென்று சொல்வது? அதாவது மனதை பாபாவினுடைய அன்பு மற்றும் சேவையில் பிஸியாக வைத்திருக்கவில்லை. உங்களது அன்பு பாபாவோடு எந்தளவு உள்ளது என்று அனைவரிடமும் கேட்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள்? மிகவும் எல்லையற்றது ஆக யாரிடம் அன்பு உள்ளதோ அவர் சொல்வதை ஏற்றுக் கொள்வதில் எந்தவித கஷ்டமும் இருப்பதில்லை. ஆக உங்கள் அனைவருக்கும் பாபாவோடு உறுதியான துண்டிக்கப்படாத அன்பு இருக்கிறது தானே! அல்லது அவ்வப்போதுதான் உள்ளதா? நிரந்தரமாக உள்ளதா அல்லது அவ்வப்போதா? சதா அன்பு உள்ளது என்று கூறுபவர்கள் கை உயர்த்துங்கள், சதா அன்பு இருக்கிறதா, எண்ணிப்பாருங்கள், சதா அன்பு உள்ளது என்றால் பாபா கூறுவதை குழந்தைகள் செய்ய வேண்டும். இதை அறிவீர்கள் தானே!

இந்த சீசனில் பாப்தாதா குழந்தைகளுக்கு இந்த திடமான ஒரு சங்கல்பத்தை செய்விக்க விரும்புகிறார். தயார்தானா? தலையை அசையுங்கள். திட சங்கல்ப்பம் வைப்பதற்காக தயார். தானே? பின்னால் இருப்பவர்கள் தயாரா? தாய்மார்கள் தயாரா? தாய்மார்களும் தயார் பாண்டவர் களும் தயார் நல்லது கை உயர்த்துங்கள். இதில் இரண்டு கைகளையும் தூக்குங்கள். கை உயர்த்தும்போது பாப்தாதாவை குஷிப்படுத்திவிடுகிறீர்கள். இப்பொழுது இந்த கை தூக்கியமாதிரி அப்படி மனதின் கையை உயர்த்துங்கள். ஒருபொழுதும் வீணான சங்கல்பங்களை வர விட வேண்டாம். அதனுடைய வேலை வருவது. உங்களுடைய வேலை என்ன? முடித்து விட வேண்டியது. இந்த சீசனில் பாப்தாதா ஏற்கனவே கூட கூறியுள்ளார். இரண்டு விஷயங்களின் கவனத்தை வைக்க வேண்டும். ஒன்று சங்கல்பம் மற்றொன்று சமயம் அறிவீர்களா நீங்கள் இந்த சங்கமயுகத்தின் காலத்தின் ஒவ்வொரு

நிமிடத்தின் தொடர்பும் 21-பிறவிகளின் கூடவே உள்ளது. மேலும் இந்த சமயத்தின் பாப்தாதாவிற்கு குழந்தைகளின் அன்பு பாபாவிடம் உள்ளது. ஆக சங்கமயுகத்தின் ஒவ்வொரு வினாடியும் வினாடி ஆகாது. ஏனெனில் 21-பிறவிகளின் தொடர்பு உள்ளது. இப்பொழுது நேரத்தை சேமிக்கவில்லையென்றால் 21-பிறவிகள் பாபாவோடு இருக்கும் அன்பு மற்றும் பாபாவிடம் கூடவே இப்போதும் இருக்க வேண்டும். கூடவே செல்ல வேண்டும் என்று ஒவ்வொரு குழந்தையும் விரும்புகின்றனர். நமது வீடு திரும்ப வேண்டும் அல்லவா! இப்பொழுது வீட்டிற்கும் கூடவே செல்ல வேண்டும். மேலும் பிறகு இராஜ்யத்திலும் பாப்தாதாவிடம் கூடவே அதுவும் விசேஷமாக பிரம்மாபாபாவுடன் இராஜாங்கத்தின் அருகாமையில் உடன் வர வேண்டும். எனவே பிரம்மபாபாவோ ஃபரிஸ்தா ரூபத்தில் உள்ளார் மேலும் நீங்கள் கூடவே செல்ல வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்? ஃபரிஸ்தா ஆக வேண்டும். ஃபரிஸ்தா ஆவீர்கள்... ஆகியே தீர வேண்டும் அல்லவா!

பாபா பிரம்மாவின் கூடவே கையை கொடுத்து உடன் செல்ல வேண்டும். அந்த கை என்பது என்ன ஃபரிஸ்தாக்களுக்கு ஸ்தூல கை ஒன்றும் கிடையாது. பிரம்மாபாபாவுடைய கை எது? ஸ்ரீமத் ஆக பாப்தாதாவின் ஸ்ரீமத் இதுவே ஆகும் தற்போது எல்லையில்லாத ராஜாக்கள் ஆகி சதா எப்படி உங்களது ஜெகதம்பா புருஷார்த்தம் செய்தாரோ, பாபா சொல்வார் ஜெகதம்பா உடன் செய்வார் அம்மாதிரி ஜெகதம்பாவைப் பின்பற்றுங்கள். சமயம் மற்றும் சங்கல்பத்தை முழுமையாக ஈடுபடுத்தியே ஆக வேண்டும். வீணாகி விடக் கூடாது. ஒவ்வொரு சங்கல்பமும் 21-பிறவிகளுடன் தொடர்பு உள்ளது என்பதை கூறினார் அல்லவா! ஆக பாப்தாதா இதையே விரும்புகிறார் -சதா மனதை பிஸியாக வைத்திருங்கள். அது முரளியை சிந்திப்பதனாலும் சரி, சேவையில் ஆனாலும் சரி, ஒவ்வொரு நேரமும் பிஸியாக இருங்கள். உங்களது சார்ட்டை (புருஷார்த்த அட்டவணை) வையுங்கள். ஒவ்வொரு சமயத்திலும் இடை இடையே பாப்தாதா என்ன ஒரு பயிற்சி (டிரில்) விதவிதமாக கூறினாரோ, அது அசரீரி ஆவதற்கான பயிற்சி என்பதை அறிவீர்கள்தானே உங்களது மூன்று சொரூபத்தின் நினைவின் பயிற்சி! அறிவீர்கள்தானே? எப்படி பாபாவின் மூன்று ரூபங்கள் உள்ளனவோ அப்படியே உங்களது மூன்று ரூபங்கள் உள்ளன. பிராமணர், ஃபரிஸ்தா மற்றும் தேவதை, இந்த மூன்று ரூபத்தில் டிரில்

செய்வதின் மூலம் தனது மனதை பிஸியாக வையுங்கள். இதற்கான மகா மந்திரம் எது? மன்மனாபவ!

மற்றபடி பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தையுடனும் மிக மிக அன்பு உள்ளது. எனவே பாப்தாதா இதனையே விரும்புகிறார் -ஒவ்வொரு குழந்தையும் வெற்றி அடைய வேண்டும். வரதானி ஆக வேண்டும். அநேக குழந்தைகள் நாங்கள் வெற்றி அடைந்துள்ளோம் ஆனால் மாலையில் மணியோ 108-னுடையதுதான். ஆக வெற்றி அடைந்து மாலையில் மணியாக வர முடியாது ஆனால் பாப்தாதாவின் அந்தளவு அன்பு உள்ளது. நீங்கள் வெற்றி அடைந்தீர்கள் என்றால் பாப்தாதா மாலையில் மேலும் ஒரு வரிசையை சேர்த்து விடுவார். நீங்கள் வெற்றி மட்டும் அடையுங்கள். ஆக என்ன நினைக்கிறீர்கள்? வெற்றியுடைவர்களாக ஆக வேண்டும் தானே அல்லது 108-பேர் மட்டும்தான் வெற்றி அடைபவர்களா? அப்படியில்லை. பாப்தாதாவின் ஒவ்வொரு குழந்தையும் வெற்றியாளரே பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் எதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். வெற்றியின் திலகம். ஏனென்றால் சாதாரண ரூபத்தில் பாபாவைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா கடைசி குழந்தையானாலும் சரி. புருஷார்த்தத்தில் தொய்வாக இருந்தாலும் சரி, அவரிலும் கூட சாதாரண ரூபத்தில் வந்துள்ள பாபாவை உணர்ந்துகொண்டு எனது பாபா என்று கூறும் விசேஷம் உள்ளது அல்லவா! எனவே ஒவ்வொரு குழந்தையும் தைரியத்துடன் வெற்றியை அடைந்தே தீர வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும். எந்தவிதமான முயற்சி சம்பந்தப்பட்ட விஷயம் இதுவல்ல ஆனால் அன்பு சம்மந்தப்பட்ட விசயம்! பாப்தாதாவோடு அன்பு உள்ளது. ஈஸ்வரிய குடும்பத்தோடு அன்பு உள்ளது. ஆக அன்புடன் இருப்பவர்களோடு விலகி இருக்க முடியாது. ஆக பிரம்மாபாபாவுடன் எவ்வளவு அன்பு உள்ளது. பிரம்மாபாபாவோடு சிவபாபாவோடு எனது உறுதியான அன்பு உள்ளது என்று கூறுவோர் கை உயர்த்துங்கள். உறுதியான அன்டாக இருக்க வேண்டும் மிக நல்லது ஆக அடுத்த சீசனில் பாப்தாதா எதைப் பார்ப்பதற்கு விரும்புகிறார். உங்களுக்கு தெரியும்தான். 5-6 மாதங்கள் கிடைத்துள்ளது உங்களுக்கு. வீணானவைகளிலிருந்து சக்தி நிறைந்த சங்கல்டங்களாக ஆக்குவதற்கு!

ஆக சொல்லுங்கள், மதுபன் வாசிகள் எழுங்கள். கீழே உள்ளவர்களானாலும் சரி மேலே உள்ளவர்களானாலும் சரி அதிகம் உள்ளனர். மதுபன் வாசிகள் பாப்தாதாவிற்கு அன்பானவர்கள் அதற்காக மற்றவர்கள் அன்பில்லாதவர்கள் என்று ஆகி விடாது. அவர்களும் அன்பு நிறைந்தவர்களே ஆனால் மதுபன் வாசிகளோடு ஒரு விசயத்தில் சிறப்பானதொரு அன்பு உள்ளது. அது என்ன? மனதின் மூலமாக அனைவருமே அன்பு செலுத்துகிறார்கள்தான். யோகம் நிறைந்த ஆத்மாக்கள்தான் அனைவரும் அனைவருமே ஞானி ஆத்மாக்கள்தான்! ஆனால் மதுபன் வாசிகள் தங்களது எதில்காலத்தை உயர்வாக அமைத்து கொள்வதற்கு ஒரு லிட்ட் கிடைக்கிறது. அந்த லிப்ட் என்ன? மதுபன்னிற்கு யாரெல்லாம் வருகின்றனரோ அவர்களுக்கு சேவை செய்வதற்கு நிமித்தம் ஆகிறார்கள். உணவு செய்பவர்கள் மற்றும் பிற சேவைகளை செய்பவர்கள்! பெருக்கி கூட்டும் ஒரு சிலரும் கூட இருக்கிறார்கள். அவர்களும் கூட பாக்கியசாலிகள்தான் ஏன்? இங்கே வருபவர்கள் எல்லாம் இந்த தூய்மையான சூழ்நிலையைப் பார்த்து. உங்களது இதயத்திலிருக்கும் அன்பு சக்தியை பார்த்து, மகிழ்ச்சியில் ஆழ்ந்து போய்விடுகின்றனர். உணவு சமைப்பவர் ஆனாலும் சரி அல்லது பிற ஏதாவது ஒரு சேவையிலிருந்தாலும் சரி, மொத்தத்தில் மதுபன் வாசிகளுக்கு சிறப்பான ஒரு வாய்ப்பு உள்ளது. மதுபனின் அன்பு மற்றும் சக்தி நிறைந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கான அந்த ஒரு வாய்ப்பு! எனவேதான் பாப்தாதா மதுபன் வாசிகளுக்கு மிக மிக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார் -இந்த சீசன் முடிந்து விட்டது. மேலும் வர இருக்கின்ற ஆத்மாக் களுக்காக தன் மனதில் அவர்களைத் திருப்திப்படுத்துவது மற்றும் சக்திசாலி அனுபவங்களை செய்விப்பதில் நிமித்தமாக இருப்போம் என்று மனதில் நினைக்கின்றனர். எனவே அனைவரும் மதுபன்வாசிகளுக்காக கை தட்டுங்கள். நல்லது!

இன்று பாப்தாதாவிற்கு அமிர்தவேளையில் மதுபன் சேவாதாரிகள் எதிரில் வந்தனர். ஒவ்வொருவரோடும் பாப்தாதா வதனத்தில் சந்தித்தார். மேலும் குறிப்பாக உங்களுக்கும் ஏற்கனவே கூறியுள்ளார். நான்கு மணி, அந்த நேரத்தில் உங்கள் அட்வான்ஸ் குழுவில் சென்றிருக்கக்கூடிய விசேஷ தாதிகள் நிச்சயமாக வருகின்றனர். ஆக இன்று கூட விசேஷமாக தாதிகள் மற்றும் விசேஷ சகோதரர்கள்

வந்திருந்தனர். அவர்கள் குறிப்பாக மதுபன் வாசிகளை (தாங்கள் பார்ப்பதற்கு) முன்னே வெளிப்படுத்துமாறு கூறினர். குறிப்பாக தீதி மற்றும் தாதி இருவரும் மற்றும் விசேஷ சகோதரர்களும் மதுபன் வாசிகளை அன்புடன் நினைத்தனர். தாதி மிகக் குறிப்பாக தனது விசேஷ அன்பு நினைவை வழங்கினார். மேலும் கூடவே வதனத்தின் மாம்பழம், வதனத்தின் பழங்கள் எவ்வளவு நன்றாக இருக்கும் என்பதை அறிவீர்கள். கொக்கி போட்டு இழுக்க வேண்டியதில்லை. என்ன பழத்தை விரும்புகிறீர்களோ அதனை கை கொண்டே பறித்து விட முடியும். இன்று மதுபன் வாசிகளோடு பிக்னிக் செய்வோம் என்று தாதி கூறினார். பிற தாதிகளும் கூடவே இருந்தனர். மேலும் முக்கிய சகோதரர்களும் இருந்தனர். மதுபனை பொறுத்து உங்கள் மனதில் என்ன வருகிறது என்று அவர்களிடம் கேளுங்கள் என்று பாப்தாதா கூறினார். தாதி என்ன கூறினார்? தெரியுமா? அறின்களா? தாதியை உங்களுக்குத் தெரியும் தானே? ஒவ்வொரு மதுபன் வாசியும் ஏதேனும் புருஷார்த்தத்தில் குறைவு இருந்தால் அதற்காக புருஷார்த்தம் செய்ய வேண்டும் ஆனால் நான் மதுபன்வாசிகளிடம் ஒரு விசயத்தை விரும்புகின்றேன். எனது அந்த விருப்பம் என்ன? ஒவ்வொரு மதுடன் வாசியும் பாபாவிற்குச் சமமாக ஆகி விட வேண்டும். மற்றபடி அனைவருமே ஆக வேண்டும்தான் ஆனால் குறிப்பாக மதுபன் வாசிகள் கட்டாயம் ஆக வேண்டும். மதுபன் வாசிகளுக்கும் தாதியோடு மிக அன்பு உண்டு, அது எனக்கு தெரியும் என்று தாதியும் கூறினார். அந்த அன்பிற்குப் பதிலாக நான் அவர்களிடமிருந்து இதையே எதிர்பார்க்கிறேன். அதாவது மம்மா எப்படி லட்சியம் வைத்திருந்தாரோ பாபா என்ன சொன்னாரோ மம்மா அதை செய்து காண்பித்தார். இதனை மதுபன் வாசிகள் அனைவருமே அறிவர். இவ்வாறே அமிர்தவேளையிலிருந்து இரவு வரை ஒவ்வொரு மதுபன் வாசியும் பாபாவுடன் என்னிடம் உள்ளதை விட அதிகமான அன்பு உள்ளது. தாதிகளிடமும் அன்பு உள்ளது. எப்படி மம்மா பாபாவினுடைய ஒவ்வொரு வழிமுறையையும் தனது வாழ்க்கையில் கொண்டு வந்தார். அவ்வாறு நாங்களும் கூட கொண்டு வந்தோம். இவ்வாறு தாதி தன் மனதில் மதுபன் வாசிகள் மீதான எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

ஆக தாதிகளிடம் அன்பு உள்ளது என்றால் இதனை செய்து காண்பிக்க வேண்டும். காலையிலிருந்து இரவு வரை அம்மாதிரி எண்ணமோ.

சொல்லோ, செயலையோ கொண்டு வர வேண்டாம். தாதிகளுக்கோ பாபாவிற்கோ அல்லது வேறு எவருக்குமோ பிடிக்காத ஒன்றாக அது: இருக்கக்கூடாது. இந்த எமது செய்தியை குறிப்பாக மதுபன் வாசிகளுக்குத் தாருங்கள். ஆக நான் (குல்ஸார் தாதி) தாதியிடம் கூறினேன். தாதி நீங்கள் மதுபனில் எப்பொழுதாவது சுற்றி வருகிறீர்களா. இப்பொழுது நான் குல்ஸார்) வதனத்தின் செய்திகளை மதுபன் வாசிகளுக்கு கூறிக் கொண்டிருக்கிறேன். ஆக நான் (குல்ஸார் சகோதரி) அவருக்கு கூறினேன். தாதி, மதுபன் வாசிகளுக்கு நீங்கள் என்ன கூறுவீர்களோ அதனை அவர்கள் செய்வார்கள். ஆக நான் சரியாகத்தானே கூறினேன். செய்வீர்கள் அல்லவா? கை உயர்த்துங்கள். இரண்டு கையை உயர்த்துங்கள். செய்வீர்களா? மிகவும் நல்லது!

இன்று இந்த சீசனுடைய கடைசி தினம் அல்லவா? எனவே வதனத்தில் மிகவும் வண்ணமயமாக இருந்தது. இதில் மதுபன் வாசிகள் நீங்களும் கூட சேர்ந்து விட்டீர்கள் ஆனால் தாதிமார்கள் இரட்டை வெளிநாட்டினரையும் வெளிக் கொணர்ந்தார்கள். இரட்டை வெளிநாட்டினர் எழுந்திருங்கள். ஆக விசேஷமாக தாதிகளின் தரப்பிலிருந்து தாதி கூறினார். எனக்கு இரட்டை வெளிநாட்டினரின் இந்த ஒரு விசயம் எனக்கு மிகவும் பிடிக்கும். ஏனெனில் நான் அங்கிருந்தபோது இவர்கள் சீசன் ஆரம்பம் ஆன சமயம், மதுபன் வருவதற்கு டிக்கெட் எடுப்பதற்காக எவ்வளவு யுக்தியுடன் சேமிக்க வேண்டி இருந்ததைப் பார்த்தேன். இம்மாதிரியெல்லாம் பைசாவை சேமித்து வருகின்றனர் என்று நான் கேள்விப்பட்டபோது அவர்கள் மீது எனக்கு அன்பு ஏற்பட்டது. மேலும் இரட்டை வெளிநாட்டினரிடம் உற்சாகம் ஆர்வத்தை மிக நன்றாகவே பார்த்தேன். வந்தவுடனேயே எனது பாபா என்று கூறி அந்தளவு குஷி அடைந்தனர். இவ்வாறு அவர்கள் எனது என்று கூறும்போதே என்னுடையவர்களாக ஆகி விட்டனர். அவர்களது முகம், அவர்களது உற்சாகம், மிகவும் நன்றாகத் தென்பட்டது. எனவே இரட்டை வெளிநாட்டினருக்கு நான் மற்றும் பாப்தாதா கூறினர்.இரட்டை வெளிநாட்டினர் மதுபனின் அலங்காரம் ஆவார்கள். இப்பொழுது கூட இரட்டை வெளிநாட்டினர் மதுபனில் என்ன காரியம் செய்தாலும் மிகவும் ஆர்வத்துடன் செய்கின்றனர். எனவே அந்த வெளிநாட்டினருக்கு எமது மிக மிக அன்பு நினைவுகளைக் கூறவும். மேலும் கூறுங்கள் சதா பாபாவின் உள்ளத்தில் நீங்கள்

இருக்கிறீர்கள். உங்களது உள்ளத்தில் பாபா இருக்கிறார். இந்த வரதானத்தை எமது சார்பாக அவர்களுக்குத் தாருங்கள். ஆக இதுவே இன்றைய அமிர்த வேளையில் வதனத்தின் செய்தியாகும்.

மற்றபடி நாலாபுறங்களிலும் உள்ள தூரமாக அமர்ந்திருக்கக்கூடிய அல்லது எதிரில் அமர்ந்திருக்கக்கூடிய அனைவரையும் பாப்தாதா எப்படிப் பார்க்கின்றார்? ஒவ்வொருவருடைய நெற்றியிலும் பிரகாசிக்கின்ற ஜோதி பிரகாசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அனைவரது மனதிலும் நாம் இப்படி ஆக வேண்டும்? எப்படி தந்தையோ அப்படி நாம். இந்த உற்சாகம் ஆர்வம் அனைவரது உள்ளத்திலும் ஓடிக் கொண்டிருந்தது.

மற்றபடி இந்த சீசனில் பாப்தாதா டீச்சர்களை விசேஷமாக எழுவதற்கு விரும்புகின்றார். 'டீச்சர்ஸ் அனைவரும் எழுந்திரியுங்கள். பாருங்கள் எவ்வளவு டீச்சர்கள் வந்துள்ளனர் கால் பாகம் டீச்சர்களே நிறைந்துள்ளனர். டீச்சர்களைப் பார்த்து பாப்தாதாவும் கூட மிகுந்த குஷி அடைகிறார். ஏனெனில் பாபாவிற்குச் சமமான இருக்கையின் பாக்கியம் கிடைத்துள்ளது. பாபாவின் முரளியைக் கூறுவதற்கான சீட் கிடைத்துள்ளது. பாபா எப்போதுமே டீச்சர்களை துணையானவர்கள் என்றே கூறுகின்றார். டீச்சர்களை பொருத்து பாப்தாதா ஒரு விசயத்தைக் கூறுகின்றனர். என்னவென்று கூறட்டுமா? பாப்தாதா கூறுகின்றார். ஒவ்வொரு டீச்சரும் தனது மூகத்தின் மூலம் பிரம்மாபாபாவிற்குச் சமமாக அம்மாதிரி குஷி நிறைந்தவர்களாகத் தென்பட வேண்டும். உள்ளுக்குள் புருஷார்த்தம் செய்து கொண்டு இருக்கலாம் ஆனால் உங்களது முகத்தின் மூலம் பாபா வெளிப்பட வேண்டும். யார் உங்களைபார்த்தாலும் பாபாவின் பிரகாசம் தெரிய வேண்டும். இவ்வாறு முகத்தின் மூலம் சேவை செய்வோர் பாபாவை நிச்சயமாக வெளிப்படுத்தியே தீருவர். தற்போது காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பாபாவை தங்களது முகத்தின் மூலமாக வெளிப்படுத்துவதற்கான சமயம்! டீச்சர்களுக்கோ சதா எனது தந்தை என்பது தாமாகவே நினைவில் உள்ளது. இப்பொழுது பாபாவை முகத்தில் வெளிப்படுத்த வேண்டும். செய்ய முடியும் தானே செய்ய முடியும் என்றால் செய்து காண்பியுங்கள் இதுவரையிலான ரிசல்ட் அனைவரும் என்ன கூறுகின்றனர். பிரம்மாகுமாரிகள் மிக நன்றாக

சேவை செய்து கொண்டிருக்கின்றனர் ஆனால் பாபா தெளிவாக தென்படவில்லை. அவர் இன்னும் ரகசியமாகவே உள்ளார். இப்பொழுது நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. உங்கள் மூலம் நிமித்த டீச்சர்களாக இருக்கும் நீங்கள் அல்லது வேறு எந்த குழந்தைகள் ஆனாலும் சரி இப்பொழுது பாபாவை பிரத்யட்சம் செய்யுங்கள். பிரம்மாகுமாரிகள் நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது தெரிந்தாகி விட்டது. இதுவரை வந்து விட்டீர்கள், ஆனால் சுயம் இப்பொழுது பரமாத்மா பிரம்மாவின் உடலின் மூலம் வெளிப்படுகின்றார். பிரம்மாகுமாரிகளை இவ்வாறு தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை இப்பொழுது (பிரத்யட்சம்) வெளிப்படுத்துங்கள். இன்னும் ஒரே ஒரு கருத்து மட்டும் பாக்கி உள்ளது. என்னுடைய பாபா வந்து விட்டார் என்று பாட்டு பாடுகின்றனர். பகவான் சுயம் பிரத்யட்சம் ஆக வேண்டும். இந்த ஒரு காரியம் சகோதரிகள் மூலமாக அல்லது சகோதரர்கள் மூலமாக செய்து கொண்டிருக்கின்றார் என்பது இப்பொழுது பிற ஆத்மாக்களிடையே வெளிப்படுத்தப்பட வேண்டும். இந்த வெளிப்பாட்டை செய்ய வேண்டும்தானே! எப்பொழுது செய்யப் போகிறீர்கள்? இப்பொழுது! என்ன சொல்வீர்கள்? இப்பொழுதுதான் (இப்பொழுது ஆரம்பித்தால் அடுத்த சீசனுக்குள் முடிந்து விடும்) நீங்கள் அனைவரும் கூடவே இருக்கிறீர்கள். அடுத்த சீசனுக்குள் முடிந்து விடுமா? அப்படி நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். சிலரே கை உயர்த்துகிறார்கள். நீங்கள் செய்வீர்கள் யார் கை உயர்த்தவில்லையோ அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். டீச்சர்கள் சங்கல்பம் செய்துள்ளீர்கள்தானே! ஏனெனில் பாப்தாதாவோ கூறிக் கொண்டுதானிருக்கிறார். அனைத்துமே திடீர் என்று நடக்கும். இதையும் நீங்கள் பார்த்து கொண்டுதானிருக்கிறீர்கள். திடீரென, இந்த பாடமே ரொம்ப காலமாக நடந்து கொண்டிருக்கிறது என்று சில குழந்தைகள் நினைக்கின்றனர். இப்பொழுது நடந்தே ஆக வேண்டும் ஆனால் திடீரென என்பது எப்பொழுது நடக்குமென்றால் குழந்தைகள் பாபாவுக்குச் சமமாக ஆகும்பொழுது உங்களுடைய முகம் மற்றும் நடத்தை ஒவ்வொரு சொல்லும் பாபாவை வெளிப்படுத்தட்டும். பின்னால் ஆகி விடும் என்று இருக்கவே இருக்கிறது. நடந்தே தீர வேண்டும். அதற்கு நிமித்தமாக நீங்கள் ஆக வேண்டும் அவ்வளவே! அடுத்த சீசனில் என்ன செய்ய போகிறீர்கள்? ஒன்று தங்களை

பாபாவுக்குச் சமமாக ஆக்கிக் கொள்வீர்கள் தங்களை என்னென்ன குறைகள் இன்னும் உள்ளனவோ அதை முழுமை செய்வீர்கள். மேலும் பாப்தாதாவிற்கு மிகுந்த மகிழ்ச்சி எந்த விசயத்தில்? தற்போது நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை சிறு சிறு சென்டர்கள் கூட தங்களுடைய சொற்பொழிவின் மூலம் பிரசித்தம் ஆக்கியுள்ளனர் (பவள விழா) நிகழ்ச்சிகள் சூழ்நிலையையே மாற்றி விட்டன. இதற்கு பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். யாரெல்லாம் எங்கு எங்கு நிகழ்ச்சிகள் நடத்தினரோ நன்றாகவே நடத்தினர். பிரம்மாகுமாரிகள் உண்மையிலேயே மிக எளிமையாக தங்களது காரியத்தை 75-ஆண்டு கால காரிய சேவைகளை பூர்த்தி செய்துள்ளனர் என்பது அனைவரது கவனத்திற்கும் வந்துள்ளது. பிரம்மாகுமாரிகள் பகவான் பாபா தற்போது வந்துள்ளார் என்று இப்பொழுது சொல்ல வேண்டும். லட்சியம் உள்ளது அல்லவாரி அடுத்த சீசனுக்குள் இந்த காரியம் ஆரம்பம் ஆகி விட வேண்டும். இதற்கான வெளிப்படையான நிகழ்ச்சிகளை செய்கின்றீர்கள் தானே! மீட்டிங் போடுகிறீர்கள் தானே! இப்பொழுது அனைவருக்கும் ஆஸ்தியை வழங்கக் கூடிய பாபா வந்துள்ளார் என்பது அனைத்து குழந்தைகளுக்கும் தெரிய வேண்டும். அம்மாதிரி திட்டங்களை மீட்டிங்கில் தீட்டுங்கள். பாபாவிற்கு குழந்தைகளின் துக்கத்தைப் பார்த்து மிகுந்த இரக்கம் ஏற்படுகிறது. அவர்கள் துக்கத்தில் அலறும்போது பாபாவிற்கு கருணை ஏற்படுகிறது. தேவி தேவதைகளாகிய உங்களையும் அதிகம் அழைக்கின்றனர். அடுத்த சீசனில் வீணானவைகளின் பெயர் அடையாளமே இருக்கக்கூடாது. சம்மதமா? சம்மதம்! உள்ளத்தின் கைகளை உயர்த்துங்கள். வியர்த்தம் என்பது என்ன? இதை தெரிந்திருப்பதே மறைந்து போய் விட வேண்டும். சொர்க்கத்தில் இளவரசிகள் வருகின்றனர் இல்லையா? அவர்களுக்கு துக்கம் மற்றும் அசாந்தி என்னவென்று தெரியாது. அப்படியென்றால் என்னவென்று கேட்கின்றனர். இம்மாதிரியே இவ்வாறே பிராமண குடும்பத்திலேயும் வியர்த்தம் (வீண்) என்றால் தெரியக்கூடாது. அதற்கு தேவை சுய சிந்தனை மற்றும் சுப சிந்தனை. நல்லது!

சேவையினுடைய முறை: டில்லி மற்றும் ஆக்ரா: நல்லது அனைவரும் டிவியில் அழகான இந்த காட்சியைக் காணுங்கள் (என்னுடைய பாபா என்று எழுதப்பட்ட கொடிகளை எல்லோரும் அசைக்கின்றனர்) மிகவும்

நல்லது! கொடியை கீழே இறக்குங்கள். நல்லது டில்லிகாரர்கள் தங்களுடைய உள்ளத்தினை பெரிதாக்க வேண்டி வரும். ஏன்? பிராமணர்கள் யார் யாரோ அவர்கள் தேவதைகளாகி எங்கே வருவார்கள்? டில்விக்குதானே வருவார்கள். எனவே டில்லிகாரர்கள் மிகவும் பெரிய மனம் படைத்தவர்களாக வேண்டும். அதில் பாருங்கள். பிரம்மாபாபா கிருஷ்ணராகி வருவாரென்றால், எங்கே வருவார்? டில்லியில்தானே வருவார். எனவே டில்லிகாரர்கள் இப்பொழுது டில்லியினுடைய பிராமணர்களினுடைய எண்ணிக்கையை மனம் திறந்து அதிகரிக்க வேண்டும். எல்லா மண்டலத்தையும் விட அதிகம் எண்ணிக்கை டில்லியில்தானே இருக்க வேண்டும். இங்கு தானே கொடி ஏற்றப்பட்டுள்ளது. அம்மாதிரி ஒவ்வொரு துக்கமான ஆத்மாக்களினுடைய உள்ளத்தில் பாபாவினுடைய கொடியை ஏற்றுங்கள். ஆக இந்த கொடிகள் வீணாகி விடக்கூடாது, இந்த கொடியை சத்யமான ரூபத்தில் துக்கமானவர் களின் உள்ளத்தில் ஏற்றுங்கள். மற்றபடி சேவை என்பது நடந்து கொண்டுதானிருக்கிறது. சேவையை செய்கிறார்கள்தான் ஆனால் பாப்தாதாவும் பார்த்தார் இந்த வருடம் எந்த மண்டலமும் சேவையில் பின்னே செல்லவில்லை. எல்லோரும் பறந்த மனதாக்கிக் கொண்டு குஷி குஷியுடன் என்னென்ன நிகழ்ச்சிகள் நடத்தினாரோ மிக அழகான முறையில் மக்களிடம் தெளிவுபடுத்தியுள்ளனர். அதாவது நீங்கள் ஆத்மாக்கள் சரீரம் இல்லை என்பதை. இந்த விசயத்தை பெரும்பாலோர் ஒத்துக் கொண்டுள்ளனர். எப்படி ஆத்மாவை தெளிவுபடுத்தி யுள்ளீர்களோ அவ்வாறே பரமாத்மாவையும் வெளிப்படுத்தி உறுதி செய்யுங்கள். இதில் நம்பர்-1 யார் எடுப்பார் என்று பாபா பார்ப்பார்? ஆத்மாவின் பாடத்தை அநேகர் உறுதி செய்துள்ளனர். தற்போது பரமாத்மா ஆஸ்தியை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ஏதாவது கொஞ்சமாவது ஆஸ்தியை எடுக்கட்டுமே உங்களது குடும்பம் தானே? வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது. ஆக என்ன செய்ய வேண்டும். அதையும் கூறி விட்டார். மற்றபடி டில்லி அனைத்திற்கும் அஸ்திவாரம் ஆகும். இந்த மந்திரி சபையும் கூட எண்ணிப்பார்க்கும் இவர்கள் கூறுவதை ஒத்துத்தான் ஆக வேண்டும்- அந்த நாளும் விரைவில் வரும். இந்த அற்புதத்தை செய்து காண்பியுங்கள். நம்பர்-1 ஆக டில்லி செய்தாலும் சரி அல்லது வேறு யார் செய்தாலும் சரி அவர்களுக்கு பாபா இனாம் தருவார். இப்பொழுது என்னென்ன விசயங்கள் பாக்கி உள்ளனவோ அவைகளை முழுமை

செய்யுங்கள். உற்சாகம் இருக்கிறது அல்லவா டில்லிகாரர்களுக்கு கட்டாயம் இருக்கும். நல்லது!

**இரட்டை வெளிநாட்டினர்:** எப்படி உங்களுக்கு இரட்டை வெளிநாட்டினர் என்று பட்டம் கிடைத்துள்ளதோ அவ்வாறே உங்களது பட்டம் டபுள் புருஷார்த்தியாகவும் இருக்கட்டும். தீவிர புருஷார்த்திகளான இரட்டை வெளிநாட்டினர் வந்துள்ளனர். ஆக இது நடக்கக் கூடுமா? எப்படி இரட்டை வெளிநாட்டினரோ அவ்வாறே தீவிர புருஷார்த்தி ஆகுங்கள். எந்தவிதமான சாதாரண புருஷார்த்தமும் கூடாது. எப்படியோ தைரியத்துடன் வந்து சேர்ந்து விடுகின்றனர். வெளிநாட்டினர் வந்து சேராத எந்தவித முறையும் நடைபெறவில்லை. எப்படி இதனை தற்போது மிக தைரியத்துடன் செய்து கொண்டிருக்கிறீர்களோ அப்படியே இம்மாதிரி தீவிர புருஷார்த்தி ஆகுவதிலும் இரட்டை வெளிநாட்டினராகிய நீங்கள் முன் உதாரணமாகத் திகழுங்கள். நடக்கக்கூடுமா? கை உயர்த்துங்கள். அடுத்த குரூப்பில் யாரெல்லாம் வருவீர்களோ அவர்களெல்லாம் தீவிர புருஷார்த்தம் குரூப். யார் முன்னேறுவார்களோ அம்மாதிரி அடுத்த சீசனிலும் பாப்தாதா அனைவரையும் எழ வைப்பார். அதாவது யாரெல்லாம் தீவிர புருஷார்த்தி ஆகியுள்ளனரோ இடையில் எவ்வித தடைகளும் இல்லையோ அவர்களை எழச் செய்வார். ஆக இரட்டை வெளிநாட்டினரோ நிச்சயமாக எழுந்திருப்பர். மேலும் தீவிர புருஷார்த்தம் செய்ய வேண்டும். அதாவது பாப்தாதாவின் முன்னர் கை தூக்கும் அளவு தீவிர புருஷார்த்தம் செய்ய வேண்டும். சரியா சம்மதமா? முன் வரிசையில் அமர்ந்திருப்போர் சம்மதமா? மதுபன் வாசிகளுக்கு இது விருப்பமா? இங்கு அனைவரும் மதுபன் வாசிகள் அமர்ந்துள்ளனர். உங்களுக்கு பிடித்துள்ளது தானே. மதுபன் வாசிகள் மீண்டும் எழுங்கள். நல்லது உங்களுக்கோ பல கோடி மடங்கு வாழ்த்துக்கள் மிகவும் நன்று பாப்தாதா பார்ப்பார். ஒவ்வொரு மண்டலத்திலும் எவ்வளவு தீவிர புருஷார்த்திகள் உள்ளனர் என்று பாப்தாதா பார்ப்பார். நல்ல முடிவை நீங்கள்தான் தர வேண்டும். ஒவ்வொரு மண்டலத்தினரும். அவர்கள் இங்கு வரவிட்டாலும் சரி, தீவிர புருஷார்த்தம் ஆகும் பெயர்களின் பட்டியலை இங்கே கொண்டு வாருங்கள். சரியா? பின்னால் இருப்பவர்கள் உங்களுக்கு, சரியாக படுகிறதா. உங்களுக்கும் என படுகிறதா? மிக நன்று பாப்தாதாவும் கூட

புருஷார்த்தத்தை மிகவும் விரும்புகிறார். எதுவரை சாதாரண புருஷார்த்தத்தை செய்து கொண்டிருப்பது? செல்ல வேண்டுமல்லவா? தற்போதோ வீடு திரும்பிச் செல்ல வேண்டும் இல்லையா? ஆக தீவிர புருஷார்த்தி ஆகி செல்ல வேண்டும் தானே பாப்தாதாவிற்கு மிகவும் நன்றாக இருக்கிறது. எது? ஒவ்வொரு குழந்தையும் வெற்றியாளர் ஆக வேண்டும் என்பது. இதனை ஏற்கனவே கூறியும் உள்ளார். இது இப்படி ஆயிற்று அது அப்படி நடந்தது. இம்மாதிரி கேட்பது. பிடிக்கவில்லை. எனவே குறைந்தது என்னென்ன மண்டலங்கள் உள்ளனவோ அவர்கள் இந்த 6-மாத காலத்தில் அனைவரும் தீவிர புருஷார்த்தம் செய்துள்ளனரா இந்த முடிவைத் தரலாம் தானே 6-மாத காலம் மிகத் தீவிர முயற்சி செய்யும்போதுதான் அதுவே பழக்கமாகி விடும் தானே! ஆக ரிசல்ட்டை கொடுக்க முடியும் தானே ஆக 6-மாதத்தில் எவ்வளவு தீவிர புருஷார்த்திகள் ஆனார்கள் என்ற முடிவை பார்ப்பார். அதை பார்த்து பாப்தாதா பரிசும் வழங்குவார். எந்த மண்டலத்தில் மிக அதிகமான தீவிர புருஷார்த்திகள் உள்ளனரோ அவர்களுக்கு பரிசும் வழங்குவார். சம்மதமா? மதுபன் வாசிகள் சம்மதமா? நல்லது!

முதன் முறையாக மிக அதிகம் பேர் வந்துள்ளனர்: மிகவும் நல்லது! முதன் முறையாக யாரெல்லாம் வந்துள்ளனரோ அவர்களுக்கு பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார் ஏன்? ஏனெனில் இந்த துக்கமான வாயுமண்டலத்தை கடந்து சுகம் நிறைந்த இடத்தை நோக்கி வந்துள்ளனர். வருகின்ற ஒவ்வொருவரும் தங்களது வாழ்க்கையின் மூலம் பிற ஆத்மாக்களுக்கு அறிமுகத்தை வழங்க முடியும். மேலும் வருகின்றவர்களுக்கு இதுவும் தெரிய வேண்டும். அதாவது கடைசியில் வந்தாலும் வேகமாக சென்று நீங்களும் புருஷார்த்தி ஆக உயர்ந்த நிலையை அடையக் கூடும். ஏனெனில், நீங்கள் பாபாவை ஏற்று கொண்டுள்ளீர்கள். ஆக பாபாவின் மூலம் கிடைக்கும் ஆஸ் அதிகாரி ஆகி விட்டீர்கள். நேரம் முடிவதற்கு முன்பாக உங்களது வீட்டிற்கு வந்துள்ளீர்கள் எனவே பாப்தாதாவிற்கும் மிகுந்த சந்தோஷம். பாபாவுக்கும் மிகுந்த குஷி குழந்தைகள் தங்களது குடும்பத்தை வந்து சேர்ந்துள்ளனர். தங்களது வீட்டையும் வந்தடைந்துள்ளனர். நீங்கள் அங்கு இருப்பது செயல்களை செய்வதற்கான இடமாகும். வீடு பரமாத்மாவின் வீடு உங்களுடைய வீடு. எனவே பாபா பல கோடி மடங்கு குஷி அடைகிறார் பிரிந்து போன

குழந்தைகள் தங்களது குடும்பத்தில் - தங்களது வீட்டை வந்தடைந்துள்ளனர். இப்பொழுது கடைசியிலிருந்தாலும் வேகமாக முன்னேறிச் செல்ல முடியும். கால அவகாசம் உள்ளது. தீவிர புருஷார்த்தம் செய்து, எவ்வளவு முன்னே செல்ல விருப்பமோ ஆத்மா அவ்வாறு முன்னேற முடியும். கவனம் மட்டும் செலுத்தினால்போதும் ஆஹா என் அருமை குழந்தைகளே என்று பாபாவிற்கும் குஷி ஏற்படும். நல்லது வாருங்கள் நன்றாக வந்து உங்களை நீங்களே முன்னேறச் செய்யுங்கள். தீவிர புருஷார்த்தம் செய்து கொண்டே இருக்க வேண்டும். நல்லது!

அனைத்து நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் உள்ளத்து அன்பு நினைவுகள் மற்றும் கூடவே பாபா ஒவ்வொரு குழந்தைக்கும் தங்களது சுவமானத்தின் போதையில் நிச்சய தன்மையை பார்த்து புன்சிரிக்கின்றனர். ஒருபோதும் சுவமானத்தை விடக் கூடாது. சுவமான்தாரி என்றால் சதா சர்வ பிராப்திகளையும் பெற்றவர். சுவமானத்தினுடைய பட்டியல் மிக நீளமானது. தினமும் ஒவ்வொரு சுவமானத்தை புத்தியில் வைத்து தீவிர புருஷார்த்தி ஆகி முன்னேறி செல்லுங்கள். மேலும் பாப்தாதாவின் உள்ளத்தில் நிறுத்தி பயமின்றி மாஸ்டர் சர்வ சக்திவானாகி முன்னேறி செல்லுங்கள். பறந்து கொண்டே செல்லுங்கள். மேலும் பிறரையும் பறக்கச் செய்யுங்கள். ஓம் சாந்தி!

மோகினி சகோதரியுடன்: நடந்து செல்வது வந்து விட்டது அல்லவா! போய்க் கொண்டே இருக்க வேண்டும். துணை இருக்கிறது. கையும் இருக்கிறது (வேறு என்ன வேண்டும்) தாதி ஜானகி அவர்கள் உடல் நிலை காரணமாக மேடைக்கு வரவில்லை) பாப்தாதாவோ எதிரிலேயே டார்த்து கொண்டிருக்கிறார். குழந்தை எங்கிருந்தாலும் சரி பாபாவின் உள்ளத்தில் அமர்ந்துள்ளது. பாப்தாதா குழந்தைக்கு சர்வ சக்தியினுடைய கிரணங்களைத் தந்து கொண்டிருக்கிறார். சேவைக்கு. நிமித்தமான ஆத்மா, எனவே அனைத்து ஆத்மாக்களும் மொத்த குடும்பமும் உங்களுக்கு அன்பு நினைவுகளைக் கூறிக் கொண்டு இருக்கிறது. நிமித்தமாகி இருக்கிறீர்கள். நிமித்தமாக ஆகத்தான் வேண்டும். மற்றபடி இந்த சிறு கணக்கு வழக்கு இதுவும் தீர்ந்து போய்

விடும். பாப்தாதா மற்றும் குடும்பத்தின் சுப ஆசைகள் உங்களின் கூடவே சதா இருக்கும் நல்லது

பரதாதியுடன்: (பிரம்மாபாபாவின் லௌகீக மகள் நிர்மல் சாந்தாஜி) நன்றாக உள்ளீர்களா? சதா புன்சிரிப்புடன் உள்ளீர்கள் நல்லது! எவ்வளவுதான் கஷ்டம் இருந்தாலும் முகத்தில் அது தென்படவே இல்லை, சாட்சியாக இருந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். சாட்சியாக இருந்து செல்வதில் மிகவும் புத்திசாலி! எப்படியும் நம்பர் வாங்கி விடுவீர்கள்.

மூன்று முக்கிய சகோதரர்களுடன்: இவ்வாறு சந்திக்கும் விதியானது மிகவும் நல்லது. வாயுமண்டலத்தை மேலும் சக்தி வாய்ந்ததாக ஆக்குங்கள். அதுவே விசேஷம். யாராவது முன் வாசல் வழியாக வரும்பொழுது எந்த இடத்திற்கு நாம் வந்துள்ளோம் என்று அவர்கள் அனுபவம் செய்ய வேண்டும். அமைதியை அனுபவம் செய்கிறார்கள்தான் ஆனால் கூடவே சக்தியின் அனுபவமும் வேண்டும். இங்கு என்ன வேண்டுமோ அது கிடைக்கும் என்று இருக்க வேண்டும். இந்த மாதிரியான சூழ்நிலை வேறு எங்கும் காணவில்லை. இது மிகவும் விசித்திரமான இடம் இது. இம்மாதிரி அனுபவம் செய்ய வேண்டும். நீங்கள் மூவரும் ஒன்றாகக் கூடி எந்த பிரிவினர்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை எந்த விஜயத்தின் மீதாவது நேரத்தை எடுத்து கொண்டு அவர்களுடைய நிலையை விசாரித்து கொண்டு ஏதேனும் ஏற்பாடு தேவையா, தீர்வு அவசியமா என்று இதனையும் கேட்க வேண்டும் கூடவே ஏதேனும் ஒரு கருத்தை வீட்டு வேலையாகக் கொடுத்து அடுத்த முறை அதைப் பற்றி விசாரிக்கவும் வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் இது நடைபெற வேண்டும். இல்லையெனில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் அல்லவா! அதிலேயே மூழ்கிப் போய்விடுகின்றனர். உங்களிடையே ஆன்மீக உரையாடலும் செய்ய வேண்டும். எப்படி இந்த தீவிர புருஷார்த்த குரூப் செய்கிறது இல்லையா அப்படி அவ்வளவு தூரம் செய்ய முடியாவிட்டாலும் வாரத்தில் ஒரு முறை அல்லது இரண்டு வாரத்தில் ஒரு முறையாவது இம்மாதிரி நிகழ்ச்சிகளை அந்தந்த பிரிவினர்கள் வைக்கட்டும். அப்போது எது உள்ளது எது இல்லை என்று தெரியவரும். ஏதேனும்

வேண்டுமென்றால், அதற்கு தீர்வு தர வேண்டும். பிறகு நன்கு யோசித்து தர வேண்டும். ஆக அனைத்து பிரிவுகளிலும் வெறும் வேலை மட்டும் நடந்தால் போதாது. சில இது போன்ற ஞான விசயங்களும் நடைபெற வேண்டும். அது முடியும் தானே? ஆக. இதனைச் செய்யுங்கள். சென்டரில் இருப்பவர்கள் இரவில் உட்கார்ந்து உரையாடுகின்றனர். அவ்வாறு நிச்சயமாக உட்கார வேண்டும். ஒரு வாரத்தில் அமர்ந்தாலும் 15-தினங்களுக்கு ஒரு முறை அமர்ந்தாலும் சரி! ஆக்கப் பூர்வமாக சிந்தித்து செயல்படும்போது எதிர்மறை உணர்வுகள் அமுங்கி போய் விடும். அனைவரிடமும் ஆலோசித்து இப்பொழுது மீட்டிங் நடக்க உள்ளது அல்லவா? அதில் வழி காணுங்கள். நல்லது!

(நான் யார் என்று சொல்லக்கூடிய குறும் படத்தை கல்வி படம் என அரசு அங்கீகரித்துள்ளது). அனைவருக்கும் இந்த செய்தியைக் கூறுங்கள். ஏதேனும் இம்மாதிரி பரப்பிக் கொண்டிருங்கள். தற்போது என்ன வாயுமண்டலம் சரியாக இருக்கிறதா? இப்பொழுது நீங்கள் என்ன செய்தாலும் அதன் பிரபாவம் ஏற்படும்.

(6-மாத காலத்திற்கு சந்திக்க மாட்டீர்கள்) சந்தித்துக் கொண்டுதான் இருப்போம். அமிர்தவேளையில் சந்திப்போமா இல்லையா!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵
✵✵✵✵✵

# 18.10.2012 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அஹமதாபாத்திலிருந்து வீடியோ மூலம் கலந்துரையாடல்!

இன்று அக்டோபர் 18, அவ்யக்த சந்திப்பிற்கான விசேஷ நாள். பாபாவின் குழந்தைகள் அமிர்தவேளை முதலே பாபாவின் அன்பில் மூழ்கி உள்ளனர். அவ்யக்த வதனத்தின் சுற்று பயணம் செய்து கொண்டுள்ளனர். அனைவரும் மனம் மற்றும் வாய் (பேசுவதிலிருந்து) மௌனமாக இருக்கின்றனர். ஏறத்தாழ 112-நாடுகளிலிருந்து 2100-இரட்டை வெளிநாட்டு சகோதர-சகோதரிகள் மற்றும் 2-3 ஆயிரம் பாரதவாசிகளான சகோதர-சகோதரிகளுடைய மிகப் பெரிய குழுவாக இருந்தாலுமே எந்தவொரு கூச்சலோ, ஆரவாரமோ இல்லை. அனைவரும் உள்நோக்கு முகம் என்கிற குகைக்குள் இருக்கின்றனர். அவ்யக்த சந்திப்பின் அனுபவங்களில் மெய் மறந்துள்ளனர். முழு சாந்திவனம் மதுபன், அமைதி இல்லம் அவ்யக்த வதனமாக மாறிவிட்டது. அனைவரும் வெண்ணிற ஆடை அணிந்த சங்கமயுக பிராமணர்கள் தங்களின் ஃபரிஷ்தா நிலையை சாட்சாத்காரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அமிர்தவேளை 4-மணி முதல் 5-மணி வரையிலும் பிறகு காலை 10-மணி முதல் பிற்பகல் 1-மணி வரை எல்லா இடங்களிலும் பட்டி நடந்தது. சில சகோதர சகோதரிகள் அனுபவங்கள் நிறைந்த வகுப்புகளைக் கூட நடத்தினர். மாலை 5½-மணி முதல் மீண்டும் யோக பட்டி ஆரம்பமாயிற்று. வீடியோ மூலம் அவ்யக்த பாப்தாதாவின் ஆன்மீகத் திருஷ்டி மற்றும் வரமளிக்கும் கைகளின் கீழ் அனைவரும் தபஸ்யாவில் மூழ்கியிருந்தனர். இடையிடையே சகோதரிகள் வர்ணனை கொடுத்து யோகா செய்வித்தனர். சுமார் 7½-மணியளவில் அஹமதாபாத் லைட் ஹவுசிலிருந்து தாதி குல்ஜார் அவர்கள் மற்றும் நிர்வயர் சகோதரர் வீடியோ கலந்துரையாடல் மூலம் அனைவரோடும் சந்தித்தனர். தாதி அவர்கள் மிகுந்த சிநேகம் நிறைந்த, சக்தி நிறைந்த திருஷ்டி கொடுத்தார் மற்றும் மஹா வாக்கியங்களைக் கூறினார்.

ஓம் சாந்தி! இன்று பாப்தாதாவும் கூடியுள்ள சபையைப் பார்த்து புன் முறுவலுடன் ஒவ்வொரு குழந்தைக்கும் சிநேகத்தின் திருஷ்டியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். பாபா இன்று எல்லா குழந்தைகளினுடைய விதவிதமான அலங்காரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறினார். முதலாவது அலங்காரம் ஒளிப்புள்ளிகளினுடையது. ஒவ்வொரு குழந்தை மீதும் ஒளியின் புள்ளிகளின் அலங்காரம் மிக நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, இரண்டாவது அலங்காரம் ஒளியின் கிரீடமானது நெற்றியின் நாலாபுறமும் ஜொலித்துக் கொண்டிருப்பது தெரிகின்றது. மூன்றாவது அலங்காரம் ஒளியாகிய மலர்களின் ரூபத்தில், இந்த அலங்காரம் சிலருடைய கழுத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கிறது, சிலரது தலையில் ஜொலித்துக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. ஆக சபையின் இந்த தோற்றத்தைப் பார்த்து பாபாவும் மிகவும் குஷி அடைகிறார் மேலும் அனைத்து குழந்தைகளும் ஆஹா குழந்தைகளே ஆஹா! என பாபா சொல்கின்றார்.

இன்றைய கால கட்டத்தில் குழந்தைகளுக்கு சமிக்ஞை (சைகை) தருகின்றார். சங்கமத்தின் இந்த சமயத்தில் எந்தளவு பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறீர்களோ, சேமித்துக் கொள்ள விரும்புகிறீர்களோ அந்தளவு செய்து கொள்ள முடியும், இப்போது குழந்தைகள் தங்களுடைய இராஜ்யத்தை அருகாமையில் கொண்டு வர வேண்டும். எனவே குழந்தைகளின் உள்ளத்தில் இந்த எண்ணமுள்ளதைப் பார்த்து பாபா மிகவும் குஷி அடைகிறார். சதா தந்தை உங்களுடனேயே இருக்கிறார் என்ற வரதானத்தையும் கூட பாபா தந்துள்ளார். எதுவானாலும் தன்னிடம் இல்லையெனில் மனதின் சம்மந்தத்தால் வாருங்கள் பாபா. வாருங்கள் பாபா..... என்றால் பாபா முன் வந்து (ஆஜர்) நிற்பார். ஆஜராகி உங்களுடைய துணைவர் ஆகி உங்களுடைய ஆசைகள் என்னவோ அவற்றை நிச்சயமாக பூர்த்தி செய்வார். செய்து கொண்டும் கூட இருக்கிறார். இது போன்ற அனுபவம் ஒவ்வொரு குழந்தைகளுக்குமே ஆகிக் கொண்டிருக்கிறது, எதிர் காலத்திலும் அவ்வாறே ஆகும். எல்லோருடைய மனதிலும் பாபாவின் சுய ரூபம் (இயல்பான வடிவம்) வந்தே விட்டது. பாபாவும் கூட ஒவ்வொரு குழந்தையையும் திரும்பத்திரும்ப பார்த்து ஆஹா! இனிமையான

குழந்தையே ஆஹா! என்ற இதே சொற்களையே உச்சரிப்பு செய்கின்றார்.

தாதி ஜானகிஜி: இனிமையான தாதி இனிமையான பாபாவின் உருவத்தை காணச் செய்தார். என்னுடைய தாதி எல்லோருடைய முகத்தையும் பிரகாசமடையச் செய்கிறார்.

குல்ஜார் தாதிஜி: தாதியை நீங்கள் எந்தளவு நினைவு செய்தீர்களோ அதைவிட நூறு மடங்கு நானும் நினைவு செய்தேன். ஆஹா பாபா ஆஹா! எல்லா குழந்தைகளின் மனதில் ஒரே ஒரு சொல்தான் - ஆஹா பாபா!

தாதி ஜானகிஜி: எல்லோரும் சொல்லுங்கள் ஆஹா பாபா ஆஹா ஆஹா டிராமா ஆஹா ஆஹா! என்னுடைய தாதி ஆஹா!

குல்ஜார் தாதிஜி: பாபா சொல்கிறார் -ஆஹா குழந்தைகளே ஆஹா! அனைவரும் பாபாவின் உள்ளத்தில் நிறைந்திருக்கின்றனர். எல்லா டபுள் வெளி நாட்டவரும் எங்கிருந்தெல்லாம் வந்துள்ளார்களோ அந்நாட்டவர் சகிதம் முன்பாக இருப்பவர்கள் அல்லது இல்லாதவர்கள், அனைவரும் பாபாவின் கண்களுக்கு முன்பாக உள்ளனர். அனைத்து இரட்டை வெளிநாட்டு குழந்தைகளுக்கு பாப்தாதா மிக மிக மிக அன்பு நினைவுகளைத் தருகிறார்.

மோகினி தீதி (நியூயார்க்): யாரெல்லாம் இங்கு அமர்ந்திருக்கிறோமோ அனைவரும் எல்லா தாதிகளுக்கும் மற்றும் பாப்தாதாவிற்கும் நன்றி கூறுகிறோம்.

தாதி ஜானகிஜி: நாம் மிகுந்த பாக்கியசாலிகள், பாபா தாதி, தாதி பாபா இந்த அளவிற்கு நினைவு செய்து அன்பு செலுத்துகிறார்கள். பாபா அன்பு செய்து நினைவு கூறுகிறார் அல்லது நினைவு செய்து அன்பு செலுத்துகிறார். நம் மனதைக் கேளுங்கள் நம்முடைய நிலை என்ன? அதே அளவு நினைவு மற்றும் அன்பு, சிநேகத்தினால் கவரப்பட்டு எங்கெங்கெல்லாமோ இருந்து பாபாவின் குழந்தைகள் வருகிறார்கள். மேலும் நீங்கள் இந்தளவிற்கு பாபாவை வெளிப்படுத்துகிறீர்கள்

என்றால் உங்களுக்கு நன்றி சொல்லும் வகையில் என்ன கொடுப்பது, இப்போது நாம் அனைவரும் சொல்வது பாபா! எங்களுடைய தாதியை மிக விரைவில் அழைத்து வாருங்கள். எங்களிடையே அமரச் செய்யுங்கள். தாதி எல்லோருக்கும் உங்களுடைய முகத்தைக் காட்டுங்கள்.

சகோதரர் கருணா: அனைவரையும் தாதியோடு சந்திக்க வைத்தார். தாதியின் அன்பிற்கும் பாபாவின் அன்பிற்கும் கைம்மாறாக என்ன செய்வது என்று மனம் கேட்கிறது.

சகோதரர் நிர்வயர்: தாதிஜி பாபாவின் செய்திகளைக் கொடுத்தார். திருஷ்டி கொடுத்தார் ஒவ்வொருவரும் தாதியின் கண்கள் மூலமாக நேரடியாக அவ்யக்த அனுபவத்தை சிறிது நேரம் செய்தனர். தாதிஜி மற்றும் தாதி ஜானகிஜி ஆகிய இருவரின் சிறிய உரையாடலைக் கேட்டோம். இது பாபாவின் குழந்தைகளாகிய நாம் அனைவரும் மாலையில் கோர்க்கப் படுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு ஓர் உதாரணம். ஒருவருக்கொருவர் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறோம். பாரத தேசம் மற்றும் வெறிநாட்டில் வெகு தொலைவில் வசிப்பவராக இருக்கலாம் ஆனால் மனதால் ஒருவருக்கொருவர். அருகாமையில் இருக்கிறோம். யாரைப் பார்த்தாலும், ஒவ்வொருவருடைய கண்களில், நெற்றியில், நாவில் பாபாவின் சாட்சாத்காரம் மட்டுமே இருக்கட்டும். பாபாவின் ஒளியினுடைய பிரகாசம் தெரியட்டும். ஏனெனில் தற்காலம் முழு உலகத்திற்குமே ஈஸ்வரிய சிநேகத்தின் அவசியம் தேவைப்படுகிறது. உலகத்தில் உள்ள மற்ற அனைவருக்கும் ஈஸ்வரனின் ஞானமோ அல்லது ஈஸ்வரிய சிநேகத்தின் அனுபவமோ கிடையாது. இச்சமயம் இந்த புருஷோத்தம சங்கம யுகத்தில் தந்தையின் அறிமுகத்தைப் பெறுகின்றவர்களும் மற்றும் அறிமுகம் பெற்றவர்களுமாகிய நீங்களும் - நாமும் எல்லா குழந்தைகளும் பாபாவைத் தெரிந்துள்ளோம். பாபாவே சுயம் தன்னுடைய அறிமுகத்தைக் கொடுத்துள்ளார். ஆக நாம் எந்த அளவு மகாள் பாக்கியசாலிகள் ஆகிறோம். நமக்கு இவ்வளவு மகான் ஆத்மாக்களுடைய தொடர்பு (தோழமை) கிடைத்துள்ளது. அவர்கள் 75-ஆண்டு காலமாக பாபாவின் தொடர்பால் சுயம் தங்களிடம் மாற்றம் கொண்டு வந்தார்கள். வாழ்க்கையை நன்றாக உயர்த்திக் கொண்டார்கள்

மற்றும் ஞானத்தின் ஒவ்வொரு அறிவுரையையும் தன்றாக, ஆழமாக தாரணை செய்தார்கள். ஒவ்வொரு விசயத்தையும் பாபா அந்த அளவு ஆழமாக இரண்டு சொருபத்தின் மூலமாகக் கற்பித்தார். அவைகள் நம் அனைவருக்கும். நிமித்தமாக உள்ள மூத்த தாதிமார்கள் மூத்த சகோதரிகள், மூத்த சகோதரர்கள் அனைவருடைய வாழ்க்கையில் மிக நன்றாகவே அனுபவம் ஏற்படுகிறது. இந்த மாதிரியான பாபாவின் குழந்தைகளுடைய தியாகம் உலகத்திற்கே ஒரு பெரிய பரிசு. மேலும் மிகப் பெரிய ஒரு எடுத்துக் காட்டு எனக்கு முன்பாக இங்கே தாதிஜியுடன் நமது இனிமையான நீலு சகோதரி, நிஜார் பாய், சரளா தீதி, டாக்டர் பனாரஸி மற்றும் பிற எல்லா சகோதரிகள், சகோதரர்கள் அமர்ந்திருக்கின்றனர். இது போன்ற முழு உலகத்திலுமுள்ள குழந்தைகளின் மீது நமது மூன்று சகோதரர்களுக்கும் மிக அதிகமான அன்புள்ளது. இது பிரியமான அன்பு மற்றும் சிநேகம், சிறியவர்களாக உள்ளபோது பிரியம், காரியத்தில் வரும்போது அன்பு, ஆன்மீகத்தில் ஈஸ்வரிய சிநேகம் (நட்பு). ஞான சொருபம், அன்பு சொரூபம், சாந்த சொரூபம், ஆனந்த சொரூபம் என்ற நிலையில் இருந்து இப்போது இனிமையிலும் இனிமையான பாபா நமக்கு அவ்யக்த வளர்ப்பை (பாலனை) கொடுத்து, அவ்யக்த நிலையில் இருப்பதற்கான நடைமுறை பயிற்சி மற்றும் சக்தியை கொடுத்துக் கொண்டிருக்கிறார். சிறிதளவு கூட சரீர (வியக்த) உணர்வு இருக்கக்கூடாது. அன்பான பாபாவின் நினைவில் இருந்து பரிவாரத்திடம் (குடும்பத்திடம்) அன்பு உள்ளது தானே? நீங்கள் அனைவரும் மிக விரைவில் இப்போது என்ன செய்ய வேண்டுமோ அதை செய்து விடுங்கள், ஒன்று சேர்ந்து கலந்தாலோசித்தீர் களானால் ஃபரிஷ்தாக்களின் சாட்சாத்காரம் முழு உலகிலும் காணப்படும். சிந்தி சகோதர. சகோதரிகள் நிறைய பேர் வந்துள்ளார்கள். வந்துள்ள அனைவருக்கும் பாபாவின் சார்பாக அன்பு நினைவு உரித்தாகுக. ஓம் சாந்தி!

இறுதியாக தாதி ஜானகி அவர்கள் அனைவருக்கும் வரிசையாக வரும்போது திருஷ்டி கொடுத்தார். முக்கியமான சகோதரிகள் டோலி கொடுத்தனர். இவ்வாறாக இன்றைய நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋

# 02.11.2012 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அவ்யக்த சந்திப்பின் முதல் குரூப்பின் நிகழ்ச்சிகள் மற்றும் உயிருக்கும் மேலான அவ்யக்த பாப்தாதாவின் இனிய செய்தி! (வீடியோ மிலன்!)

பாரதவாசி சகோதர சகோதரிகளின் பாபாவை சந்திப்பதற்கான இந்த முதல் வாய்ப்பில் சுமார் 8000-சகோதர சகோதரிகள் மதுபன்னில் வந்து சேர்ந்தார்கள். அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் மௌன பட்டி செய்தார்கள். அனைத்து மகாரதி சகோதர சகோதரிகள் பல விஷயங்களில் வகுப்புகள் எடுத்தார்கள். விசேஷமாக இன்று பாப்தாதாவின் அவ்தரன் (வருகை தரும்) நாள். இன்று அனைவருமே வாய் மற்றும் மனதின் மௌனத்தை முழுமையாக கடைப்பிடித்தார்கள். முழு சாந்திவனமும் அவ்யக்த வதனமாக ஆகி விட்டது. என்று அப்படிஅனுபவம் ஆனது. மாலை நேரத்தில் 5-மணியிலிருந்து யோக பட்டி தொடங்கியது. முக்கியமான மூத்த சகோதரிகள் மேடையில் அமர்ந்து சக்திசாலியான யோகா செய்வித்தார்கள். பின்பு பாப்தாதாவின் முந்தைய பாபா வருகையின் வீடியோ காண்பிக்கப்பட்டது. அதற்கு பிறகு அனைத்து தாதிகள் மற்றும் முக்கிய சகோதரர்கள் யோகா செய்வித்தார்கள். பிறகு தாதி குல்சார் அவர்கள் அஹமதாபாத் லோட்டஸ் ஹவுஸிலிருந்து முழு சபைக்கும் பாபாவின் செய்தியைக் கூறினார். அதற்குப் பிறகு தாதி ஜானகி அவர்கள் முக்கியமாக வந்திருக்கும் சகோதர சகோதரிகளுக்காசு அவ்யக்த பாப்தாதா மூலமாக அவ்வப்பொழுது கிடைத்திருக்கும் பிரேரணைகளைப் படித்துக் கூறினார். பின்பு அனைவருக்கும் டோலி கொடுக்கப்பட்டது. பாப்தாதாவின் செய்தி மற்றும் முக்கியமாக அவ்யக்த மகாவாக்கியத்தை உங்களிடம் அனுப்புகிறோம்.

ஓம் சாந்தி. உங்கள் அனைவரின் சபையைப் பார்த்து பாப்தாதா எவ்வளவு குஷியடைந்து கொண்டிருக்கிறார். இன்று நான் உங்கள் அனைவரின் அன்பு நினைவை எடுத்துக் கொண்டு பாபாவிடம் சென்றேன், உங்கள் அனைவரின் அன்பு நினைவைக் கூறினேன். மேலும் பாபாவும் சபையைப் பார்த்தார், அப்படி சபையைப் பார்த்துப் பாபா அனைவருக்கும் மிக அதிகமான சக்திகள் நிறைந்த, அன்பு நிறைந்த திருஷ்டி கொடுத்தார். ஒவ்வொருவரின் கண்களில் பாபாவின் நினைவு மற்றும் அனைத்து பரிவாரத்தின் அன்பு நிரம்பியிருந்தது. நான் பாபாவிடம் பல இடங்களிலிருந்து சகோதர சகோதரிகள் மிக ஊக்கம் உற்சாகத்துடன் வந்திருக்கிறார்கள் என்று கூறினேன். பின்பு பாப்தாதாவும் சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று பாபாவும் கூறினார். மிக அழகான சபை கூடியிருக்கிறது. மேலும் ஒவ்வொருவரின் மனதில் குஷியின் அலைகள் அடித்துக் கொண்டிருக்கின்றன. நம்முடையது எவ்வளவு பெரிய பரிவாரம் என்று ஒவ்வொருவரும் புரிந்து கொள்கிறார்கள். அனைவரும் ஒவ்வொருவரையும் பார்த்து எவ்வளவு குஷியடைந்து கொண்டிருக்கிறார்கள். அதன் பிறகு நாலா புறங்களிலுமுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் திருஷ்டி கொடுத்துக் கொண்டே பாபா கூறினார். குழந்தைகள் நீங்கள் எவ்வளவு காணாமல் போய் கண்டெடுக்கப்பட்டவர்கள். இங்கே வந்து சேர்ந்து விட்டீர்கள். மற்ற பல இடங்களில் மதுபன்னின் ஆர்வம் மற்றும் ஈடுபாடு உருவாக்கப்பட்டு இருக்கிறது என்று பாபா பார்த்தார். மதுபள்ளில் என்ன நடந்து கொண்டிருக்கிறது. பாபாவும் அனைவருக்கும் திருஷ்டி கொடுத்து கொண்டே இதைக் கூறினார். எப்பொழுதும் தன்னுடைய சங்கமயுகத்தின் விலை மதிக்க முடியாத ஜென்மத்தை நினைவில் வைத்துக் கொண்டே, சங்கமயுகத்தின் ஜென்மத்தில் என்ன பிராப்திகள் ஆகியிருக்கின்றனவோ அவற்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை பிராப்திகளை எண்ணுவீர்கள் என்றால் எத்தனை பிராப்திகள் இருக்கின்றன. எனவே தினசரி தன்னுடைய பிராப்திகளை உள்ளத்தில் வர்ணனை செய்து கொண்டே இருக்கிறீர்களா? என்று பாபா கூறினார். அனைவரின் வாயிலிருந்து, ஆஹா, பாபா ஆஹா! என்பதுதான் வெளியாகிறது. ஆஹா, சங்கமயுகத்தின் உயர்ந்த ஜென்மம் ஆஹா! அனைவரும் அவரவர்களின் உள்ளத்திலிருந்து இதைக் கூறினார்கள் என்றால் பாபாவிற்கும் குழந்தைகளைச் சந்திக்க

வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. மேலும் குழந்தைகளின் உள்ளத்திலும் இப்பொழுது சந்திப்போம் என்ற உணர்வு இருந்தது ஆனால் இன்று இந்த செய்தி கேட்பதற்கான பொன்னான வாய்ப்பாகும். அப்படி அமிர்தவேளையில் தொடங்கி எப்பொழுதும் தன்னுடைய பிராப்திகளை நினைவு செய்து கொண்டே இருங்கள். மேலும் எத்தனை பிராப்திகள் என்று யோசியுங்கள் மற்றும் பட்டியல் எடுங்கள். ஒவ்வொரு பிராப்தியும் எவ்வளவு விலை மதிக்க முடியாதது, அப்படி பிராப்திகளை நினைவு செய்வதினால் உள்ளத்தில் மிகுந்த குஷி ஏற்படுகிறது. ஏதாவது ஒன்றின் பிராப்தி ஆகிறது என்றால் முகம் எப்படி மாறி விடுகிறது? அப்படி பாபா என்னென்ன அனேக பிராப்திகளை செய்வித்திருக்கிறார். சுகம், சாந்தி, அன்பு, ஆனந்தம் இவை அனைத்தையும் பாபா கொடுத் திருக்கிறார் என்றால், இந்த அனைத்து பிராப்திகளையும் நினைவு செய்து கொண்டே பறந்து கொண்டே இருங்கள், பறக்க வைத்துக் கொண்டே இருங்கள். அன்போடு சபையைப் பார்த்தார். மேலும் கூறினார் ஒவ்வொரு ரத்தினமும் அந்த மாதிரி பாபா மிக யானவர்கள். ஒவ்வொரு ரத்தினத்தின் விசேஷங்களை வர்ணனை செய்தோம் என்றால் எவ்வளவு நீளமான மாலை உருவாகி விடும். பாபாவிற்கு மற்றும் பரிவாரத்திற்கு ஒவ்வொரு ரத்தினத்தின் மதிப்பு தெரியும். மேலும் குழந்தைகளுக்கும் தன்னுடைய மதிப்பு தெரியும். எனவே இப்பொழுது அனைவருக்கும் நினைவைக் கொடுங்கள். மேலும் மிக அன்போடு என்னுடைய பாபா, அன்பான பயபா, இனிமையான பாபா என்று நினைவு செய்தார்கள் என்றால் பறக்க ஆரம்பித்து விடுவார்கள். இந்த சபையில் பாபாவின் செய்தியைக் கேட்டும் பறந்து கொண்டிருக்கிறார்கள், பறந்து கொண்டே இருப்பார்கள் என்று பாபா பார்த்தார். மேலும் தன்னுடைய இராஜ்யத்தில் சென்றடைந்து விடுவார்கள். நல்லது! ஓம் சாந்தி.

தாதி ஜானகி அவர்கள் தாதி குல்சார் அவர்களுக்கு நன்றி கூறினார்: தாதி நீங்கள் எவ்வளவு இனிமையான செய்தியைக் கூறி எங்களுடைய உள்ளத்தை உருக வைத்து விட்டீர்கள். தாதி நான் எதுவும் பேச முடியாது ஆனால் நீங்கள் பாபாவின் செய்தியைக் கூறி இவ்வளவு சுகம் நிறைந்த, அமைதி, அன்பு, ஆனந்தம் நிறைந்தவர்களாக்கி விட்டீர்கள், அனைவரையும் அன்பில் நிரப்பி விட்டீர்கள். நன்றி தாதி. (தாதி குல்சார்)

முழு சபைக்கும் பாபாவின் தரப்பிலிருந்து மற்றும் பரிவாரத்தின் தரப்பிலிருந்து மிகுந்த அன்பு நினைவுகள்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳
✳✳✳✳✳

# 30.11.2012 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சந்துஷ்ட (திருப்தி) மணிகளின் பாக்கியம், "அடைய வேண்டியதை அடைந்து விட்டோம்" என்னும் உள்ளத்திலிருந்து எழும் கீதம்!

இன்று குழந்தைகளின் நினைவு மற்றும் அன்பு பாப்தாதாவை இந்த சாகார உலகத்தில் தனது ஈர்ப்பின் மூலம் அழைத்து விட்டது. பாப்தாதாவும் குழந்தைகளை சாகார உலகில். சாகார ரூபத்தில் பார்க்க விரும்புகின்றார். நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளும் பாபாவை பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலும் பாபாவும் சாகார சொருபத்தில் பார்த்துக் கொண்டிருக்கின்றார். உள்ளத்தில் நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளின் பொருட்டு ஆஹா! குழந்தைகளே. என்றும் ஒவ்வொரு கல்பத்திலுமுள்ள குழந்தைகளின் பாகத்தைப் பார்த்தும் குஷி அடைந்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையின் பாக்கியம், மற்றும் பிராப்தியைப்பார்த்து சந்தித்துக் கொண்டுமிருக்கின்றார். உள்ளத்தின் அடையாளத்தில் ஒவ்வொரு குழந்தையும் பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் பிரகாசிக்கும் பாக்கியம் தெரிந்து கொண்டிருக்கின்றது. நெற்றியில் ஒளியின் பிராப்தி பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. கரங்களில் ஞானத்தின் பொக்கிஷம் தென்படுகிறது, உள்ளத்தில் உள்ளத்திற்கு ஓய்வளிக்கும் திலாராம் தென்பட்டுக் கொண்டிருக்கின்றார். பாதங்களில் ஒவ்வொரு அடியிலும் கோடானகோடி பிராப்தி தென்படுகிறது. இப்படிப்பட்ட பாக்கியத்தைப் பார்த்து ஒவ்வொருவரின் முகமும் மென் மேலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து குழந்தை களும் மிகவும் திருப்தியான சொரூபத்தில் தென்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இம்மாதிரி முகம் பிரகாசிப்பதைப் பார்த்து பிற

ஆத்மாக்கள் கூட இவர்களுக்கு என்ன அப்படி கிடைத்து விட்டது என்று நினைக்கின்றனர். ஆக, நீங்கள் இதற்கு என்ன பதில் கூறுவீர்கள்? எதை அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம்.... அனைவரும் சந்துஷ் (திருப்தி) மணியின் ரூபத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர். எப்படி உங்களது முகத்தையும், நீங்களும் கூட பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள் இல்லையா? பாப்தாதாவும் இப்படிப்பட்ட சந்துஷ்டமணி ஆத்மாக்களைப் பார்த்து என்ன கீதத்தை பாடிக் கொண்டிருக்கின்றார். ஆஹா, ஆஹா எனது சந்துஷ்டமணி ஆத்மாக்களே, ஆஹா! குழந்தைகளினுடைய உள்ளத்து புகார்களை பூர்த்தி செய்வதற்காக மட்டுமே வந்திருக்கிறோம். உங்கள் அனைவரின் புகார்கள் முடிவுக்கு வந்து விட்டன அல்லவா? மேற்கொண்டு எப்படி நாடகத்தில் உள்ளதோ அவ்வாறே சந்தித்துக் கொண்டிருப்போம்! இன்று நாடகத்தில் சந்திப்பு இவ்வளவே!

அனைத்து குழந்தைகளும் மிகவும் நல்ல முறையில் (பாபாவின் ரதத்திற்கு (குல்ஜார் தாதி) சேவை செய்துள்ளீர்கள். பாப்தாதா அனைத்து சேவைக்கு நிமித்தமான ஆத்மாக்களுக்கும் விசேஷமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார். இன்று குழந்தைகளின் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வத்தை, புகாரை பூர்த்தி செய்வதற்காகவே வந்திருக்கின்றோம். ஆக எல்லோரும் நன்றாக இருக்கின்றீர்கள் தானே! கை தூக்குங்கள் பார்ப்போம் ரதத்தின் சேவையில் ஈடுபட்டவர்களுக்கு இதயப் பூர்வமான வாழ்த்துக்கள்! ரதமானது எங்கே இருக்க வேண்டியிருந்தாலும் பாபா பார்த்துக் கொண்டிருந்தார். குஜராத்தும் குறைவானது அல்ல குஜராத்திலுள்ளவர்கள் எங்கே? பாப்தாதாவும், கூடவே நிமித்தமாக இருந்த பாண்டவர் நிர்வயர் சகோதரரும் மிகவும் துணையாக இருந்தார்கள். (சரளா தீதியை அழைக்கின்றார்) நன்றாக சேவை செய்தீர்கள். அனைத்து தாதிகளுக்கும் நிமித்தமாக இருந்து கவனித்துக் கொள்வதற்காக உங்களுக்கும், உங்களுக்கு துணையாக இருப்பவர்களுக்கும் மிக மிக வாழ்த்துக்கள்.

(**தாதி ஜானகி அவர்களைப் பற்றி): நல்லது! கேள்விப்பட்டோம். அனைத்தும் சரியாகத்தான் ஆக வேண்டும். தாதி ஜானகியுடன்:** அனைவரும் ஒற்றுமையாக இருந்து நன்கு பாகத்தை நடித்தீர்கள். குல்ஸார் தாதியினுடைய சப்தமும் சேர்ந்தே வந்துக்

கொண்டிருக்கின்றது. இன்று சந்திப்பதற்காக மட்டுமே வந்திருக்கின்றோம். மேலும் வந்து கொண்டிருப்போம். சந்தித்துக் கொண்டேயிருப்போம்.

மூன்று மூத்த சகோதரர்களுடன்: இப்பொழுது பாப்தாதா அற்புதங்களைக் காண விரும்புகின்றார். எம்மாதிரி அற்புதத்தை பார்க்க விரும்புகின்றார்? குடும்பத்தில் உங்கள் மூவரைப் பற்றியும் மிகுந்த எதிர்பார்ப்பு உள்ளது, பாப்தாதாவும் தற்போது புரிந்து கொள்கின்றார். ஒரே விசயத்தைப் பற்றி தனித்தனியான எண்ணங்கள் (கருத்துக்கள்) வரத்தான் செய்கின்றன ஆனால் எண்ணங்களை ஒன்றுப்படுத்துவது என்பது உங்கள் கையில்தான் இருக்கின்றது. ஆக பாப்தாதாவும் நிமித்தமாக இருக்கக்கூடிய பாண்டவர்களாகிய உங்களிடம் இந்த அற்புதத்தைப் பார்க்க விரும்புகின்றார். எண்ணங்கள் விதவிதமாக இருக்கலாம் ஆனால் அவற்றை ஒன்றுபடுத்தவும் வேண்டும். ஆக இப்பொழுது மூவரும் இந்த அற்புதத்தைக் காண்பிக்க வேண்டும். மூன்று பேர் அல்ல, ஆனால் மூவரும் ஒருவரே! மற்றபடி பிற அனைத்தும் நன்றாகவே உள்ளது. நல்லது!

உள்நாடு வெளிநாடுகளின் சகோதர சகோதரிகளுக்கு மிகவும் நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக! அதிலும் இரு நிமித்தமான தாதிகளையும் கவனித்துக் கொள்கின்றனர். அதற்காக விசேஷ வாழ்த்துக்கள். மேலும் பிற அனைத்து தரப்பிலும் உள்ள சகோதர சகோதரிகளுக்கு உள்ளத்தின் விசேஷமான அன்பு நினைவுகளைக் கொடுக்கின்றார். அனைவருமே எப்பொழுதுமே உள்ளத்திலேயே இருக்கின்றனர். எனவே எப்பொழுதும் தானும் நினைவில் இருந்து பிறருக்கும் நினைவை ஞாபகப்படுத்தி வாருங்கள்.

இன்று அனைவருக்கும் ஒரு எண்ணம் மட்டுமே இருந்தது. சந்திப்பது, சந்திப்பது, சந்திப்பது அது சரீரத்தின் ரூபத்தில் முழுமையானது. போகப்போக டிராமாவில் என்ன இருக்குமோ அதன்படி சந்தித்து வருவோம். பாப்தாதா குழந்தைகளிடமிருந்து ஒருபோதும் விலகியிருக்க முடியாது. எப்படி குழந்தைகள் பாபாவிடமிருந்து தரமாக இருக்க முடியாதோ அப்படி பாபாவும் குழந்தைகளிடமிருந்து விலகியிருக்க முடியாது. பாப்தாதா அனைத்து குழந்தைகளையும்

பார்த்து குஷி அடைகின்றார், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றார், ஒவ்வொருவரும் நாம் இந்த எல்லையற்ற காரியத்திற்காகவே இருக்கிறமோ தவிர, எனக்காக அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சுயத்தின் கூடவே சேவைக்கும் நிமித்த மாகவே இருக்கிறேன். உலகத்திலுள்ள குழப்பங்களுக்கு தீர்வு காண்பவர்கள் நீங்களே என்னும் இப்படிப்பட்ட அற்புதத்தைக் காண்பியுங்கள். எப்படி அவர்கள், அவர்கள் காரியத்தை விடுவதில்லையோ. அப்படியே நீங்களும் உங்களை நிமித்தமாகப் புரிந்து கொண்டு உங்கள் காரியத்தைச் செய்யுங்கள். அவர்கள் குழப்பத்தில் இருக்கின்றனர். நீங்கள் அசையாது இருக்கின்றீர்கள். இருவரும் ஒன்றாகவே பாகத்தை செய்யுங்கள். நல்லது! இன்று சந்திக்க வந்துள்ளோம்.

மகாராஷ்டிரா, மும்பை, மற்றும் ஆந்திர மாநிலத்தின் சேவை முறை: அனைவரும் கை அசைக்கின்றனர். ஒவ்வொரு மண்டலத்திற்கும் சேவையில் நிமித்தமாக ஆகும் பாகம் கிடைத்துள்ளது. மேலும் பாப்தாதா பார்த்தார். ஒவ்வொருவரும் பாகத்தை நன்றாகவே நடிக்கின்றனர். மேலும் நடிப்பர்.

**நான்கு துறைகள் (கல்வி, மதம், அறிவியல் மற்றும் பொறியியல், கலை மற்றும் CAD துறையினர்):** வந்துள்ளனர். ஒவ்வொரு துறையும் மற்றதை விட முன்னால் உள்ளது. கவனமாக இருந்து காரியங்களை முன்னேறச் செய்து கொண்டுமிருக்கின்றனர். அதற்காக வாழ்த்துக்கள்! நாலாபுறமும் உள்ள குழந்தைகள் தத்தம் காரியங்களை செய்வதற்காக வாழ்த்துக்கள். மேலும் எதிர்காலத்தில் ஒவ்வொரு துறையும், ஒவ்வொரு மண்டலமும் மென்மேலும் முன்னேறிக் கொண்டேயிருப்பீர்கள். இது பாப்தாதாவின் வாழ்த்தாகும்.

**இரட்டை வெளிநாட்டினர்:** யாரெல்லாம் வந்திருக்கின்றனரோ அவர்கள் எழுந்திருங்கள். பாப்தாதா இப்போது இரட்டை வெளிநாட்டினர் என்று கூறுவதில்லை. இரட்டை புருஷார்த்திகள். இரட்டை வெளிநாட்டினர் நாலாபுறமும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றனர். சிறுசிறு இடங்களில் கூட கவனம் செலுத்துகின்றனர். எனவே சேவைக்கான வாழ்த்துக்கள். மேலும் இரட்டை புருஷார்த்தத்திற்கும் வாழ்த்துக்கள். இப்பொழுது இரட்டை வெளிநாட்டினர்கள் என்று சொல்லாதீர்கள். இரட்டை தீவிர

புருஷார்த்திகள் என்று கூறுங்கள். சரிதானே! இரட்டை புருஷார்த்திகள் என்றால் இரட்டை தீவிர புருஷார்த்திகள். ஆக பாப்தாதாவிற்கு நினைவு உள்ளது, ஆனால் அனைவரிலும் மிக தூரத்திலிருந்து யார் வந்துள்ளார்? அமெரிக்கர்களா? அவர்கள் கூட இந்த பூமியைச் சார்ந்தவர்கள்தான் ஆனால் பாப்தாதா எங்கிருந்து வந்திருக்கின்றார்? குழந்தைகள் அழைத்தனர். பாபா வந்து விட்டார்! சரீரத்திற்கு என்ன ஆனாலும் சரி, ஆனால் குழந்தைகள் குழந்தைகளே! பாபா எப்பொழுதுமே வந்து விடுகின்றார். நல்லது!

நாலாபுறங்களிலும் உள்ள தங்களது பாகத்தை மிக நன்றாகச் செய்து வரக்கூடிய பாபா கூறினார், உடனே குழந்தைகள் செய்து முடித்தனர், இப்படிப்பட்ட குழந்தைகள் எப்பொழுதுமே சதா பாபாவின் உள்ளத்தில் இருக்கின்றனர். ஆக இப்படிப்பட்ட நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு பல கோடி குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள்.

(ஜானகி தாதியின் தலையில் சிறு அடிபட்டுள்ளது). இது நடந்து கொண்டுதான் இருக்கும். அதைப் பற்றி பரவாயில்லை. இன்னும் அழகாக ஆகி விட்டீர்கள். (தாதி தலையை முக்காடு போட்டு மூடியுள்ளார்) தாதி தாதி என்று சொல்கிறீர்கள் அல்லவா? ஆக தாதியின் உருவத்தையும் பாருங்கள். இது சரி தானே! (ஹம்சா சகோதரி, பிரவினா சகோதரியுடன்) சேவை செய்து களைத்துப் போகவில்லையே, நல்லது! ஹம்சா சகோதரியுடன் சேவையை மிக நன்றாகச் செய்து வருகிறர்கள். என்னென்ன சேவை செய்கின்றீர்களோ உங்களைப் பார்த்து பிறருக்கும் உற்சாகம் வருகின்றது. எனவே அவர்களுக்கு வாழ்த்துக்களும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. யார் நிமித்தமாக இருக்கின்றார்களோ, அவர்களுக்கும் மருத்துவர்களுக்கும் அன்பு நினைவுகளைக் கூறுங்கள். (இவ்வாறு இரண்டு தாதிகளுக்கு மட்டுமே ஏன் நடந்தது -நீலு சகோதரி இவ்வாறு கேட்டு புகார் கூறுகின்றார்). இதற்கு பதில் நாடகமே கூறும். நாடகம். இதற்கு மேலும் யாரும் பேச முடியாது. நாடகம், நாடகமேதான். மற்றபடி என்ன பேச வேண்டுமோ பேசிக் கொள்ளுங்கள்!

நல்லது! அனைவரும் பிந்து ரூபத்தில் ஸ்திரமாகி விடுங்கள். (டிரில் செய்விக்கின்றார்).

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺

# 15.12.2012 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# 'எனது' என்பதை 'உனது' என்று மாற்றிக் கொண்டு இரட்டை கிரீடதாரி கவலையில்லாத இராஜாக்களாக ஆகுங்கள்!

இன்று முழு சபையும் கவலையில்லாத இராஜாக்களாக தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஏனெனில், பாபாவைப் பார்த்த பிறகு கவலை என்பது பெருமையாக மாறி சென்று விட்டது. நீங்கள் அனைவரும் காலையிலிருந்து இரவு வரை கவலையில்லாத இராஜாக்கள் ஏனெனில் சுயராஜ்யம் கிடைத்திருக்கிறது. ஆக, இவ்வாறு சோதனை செய்கின்றீர்களா? ஏனெனில் கவலையில்லாத இராஜாக்களின் அடையாளம் அவரவர்களது நெற்றியில் ஒளியாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது மேலும் கவலையில்லாத இராஜாக்கள் என்றால் இரட்டை கிரீடதாரிகள். இரட்டை கிரீடதாரிகள் கவலையில்லாத இராஜக்களாக ஆவார்கள். ஆக நீங்கள் அனைவரும் உங்களை கவலையில்லாத மற்றும் இராஜாக்களாக அனுபவம் செய்து கொண்டிருக்கின்றீர்களா? ஒருவேளை இரட்டை கிரீடதாரியாக இல்லையென்றால், கவலையில்லாதவர்களாக இல்லை, ஆக, புத்தியில் என்னென்ன தோன்றுகிறது? குப்பை தொட்டியா? இது நன்றாக இருக்கிறதா? ஆக பாப்தாதா இன்று ஒவ்வொரு குழந்தையையும் இரட்டை கிரீடதாரி, கவலையில்லாத இராஜாக்களாகப் பார்த்து குஷி அடைகின்றார். ஆக நீங்கள் அனைவரும் பாப்தாதாவின் துணை, இந்தமாதிரி அனுபவம் செய்கின்றீர்களா? அல்லது சில சமயம் செய்கிறீர்கள், சில சமயம் செய்வதில்லை. இப்படியா? இந்த இரட்டை கிரீடம் முழு கல்பத்திலும் குழந்தைகளாகிய உங்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. இராஜாக்களாக நிறைய பேர் ஆகின்றார்கள். துவாபர

யுகத்தில் இருந்து இராஜாக்கள் ஆகிக் கொண்டிருக்கின்றீர்கள் ஆனால் இரட்டை கிரீடம் உங்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது.

ஆக, பாப்தாதா இம்மாதிரி கவலையில்லாத இராஜாக்களைச் சந்திக்க வந்துள்ளார். கவலைகளை தந்து விட்டீர்கள் தானே? அல்லது இன்னும் கொஞ்சம் கொஞ்சம் பாக்கியுள்ளதா? கவலையை தந்து விடுங்கள், பாபாவிடம் கவலைகளை ஒப்படைக்க தெரிகிறது அல்லவா? கவலையில்லாத இராஜாக்களாக ஆவதற்கான விதி மிகவும் எளிதானது. எனது என்பதை உனது என்று மாற்றி விடுங்கள். இந்த எனது-உனது எவ்வளவு எளிதானது. உனது மற்றும் எனது வித்தியாசம் இவ்வளவுதான் ஆக அனைவரும் தந்து விட்டீர்கள். எனது என்பதை உனதாக மாற்றி விட்டீர்கள். நாங்கள் கவலையில்லாத இராஜாக்கள் என்று நினைப்பவர்கள் கை தூக்குங்கள். நன்கு உயரமாக உயர்த்துங்கள். பாப்தாதா பார்ப்பார். பிறகு சில சமயம் உனது என்பதை எனதாக ஆக்கிக் கொள்வதில்லையே? ஒருவேளை இப்பொழுது கூட கொஞ்சம் கொஞ்சம் தங்கியுள்ளது என்றால் கவலையைத் தந்து விட்டு பெருமிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், நாளுக்கு நாள் பயம் என்பது அதிகரிக்கத்தான் செய்யும் ஆனால் நீங்கள் அனைவரும் பாபாவின் குழந்தைகள் கவலையில்லாத இராஜாக்களாகி பிறரையும் கவலையிலிருந்து தூரமாக்குவீர்கள். இதற்கான எளிய சாதனம், அமிர்தவேளையில் இருந்து இரவு வரை பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள். ஏனெனில் பிரம்மாபாபாவும் சாகார உடலில் இருந்தபோது எல்லா பொறுப்புகளையும் வைத்துக் கொண்ட பிறகும் கவலையில்லாத இராஜாவாக இருந்தார். இல்லையா? அநேக குழந்தைகள் பிரம்மாபாபாவை இந்த பௌதீக உலகில் பார்க்காமல் இருந்திருக்கலாம் ஆனால் அவரது வாழ்க்கை சரித்திரம், அவரது நடைமுறை வாழ்க்கை, நீங்கள் எப்படி பௌதீகமான உடலில் இருக்கின்றீர்களோ அதே போன்று இருந்து கொண்டே அவ்வளவு பொறுப்புகள் இருந்தபோதிலும் கவலையில்லாத இராஜாவாக விளங்கினார். இறுதி வரை அவரது முகத்தில் கவலையற்ற தன்மையின் சின்னமே தென்பட்டது. கடைசி நாள் வரை எந்த வித ஆதாரமும் இல்லாமல் கடைசி வகுப்பைக் கூட எடுத்தார். இம்மாதிரி ஆரோக்கியமாகவும், பெருமிதத்தில் செல்வ நிலையும் இருந்தது. ஆக நீங்கள் அனைவரும் கவலையற்ற இராஜாக்களாக ஆகியுள்ளீர்கள்

தானே! சரீரத்தினுடைய கணக்கு வழக்கு இருந்தாலும் சரி ஆனால் ஸ்திதி என்பது சதா கவலையற்ற இராஜா!

ஆக இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் இம்மாதிரி பிரம்மாபாபாவைப் போன்று பார்க்க விரும்புகிறார். எனவே சோதனை செய்யுங்கள். சரீரம் எப்படி இருந்தாலும் சரி, ஆனால் மனம் சதா கவலையற்று இருக்க வேண்டும். எனவே குறித்துக் கொள்ளுங்கள், காலையில் எழுந்தவுடனேயே சோதனை செய்யுங்கள். உள்மனதில் கூட எவ்விதமான கவலையும் இல்லையல்லவா? இடையிடையே சோதனை செய்து வர வேண்டும். ஆக, எனது என்பதை உனது என்பதாக மாற்றி விடுங்கள். ஏனெனில் முழு கல்பத்தில் குழந்தைகள் உங்களைத் தவிர இரட்டை கிரீடதாரியாக கவலையில்லா இராஜாவாக வேறு எவருமே ஆனதில்லை. உங்களுடைய சித்திரங்களில் சதா இரட்டைக் கிரீடம் காண்பிக்கப்பட்டுள்ளது. துவாபர யுகத்தில் அநேக இராஜாக்கள் வந்தார்கள் ஆனால் இட்டை கிரீடதாரி, சுயராஜ்ய இராஜா அம்மாதிரி எவருமே ஆனதில்லை. ஆக இன்று உங்களது பட்டமான கவலையில்லாத இராஜா என்பதை சதா நினைவில் கொள்ளுங்கள்.

இன்று கூட அநேக குழந்தைகள் வந்துள்ளனர். அனைத்துக் குழந்தைகளும் பாப்தாதாவை சந்திக்க வந்துள்ளனர். இப்பொழுது புகார் எதுவும் கூற மாட்டீர்களே? ஏனெனில் குழந்தைகள் மீது பாபாவிற்கு எவ்வளவு அன்பு குழந்தைகள் இல்லாது பாபாவால் இருக்க முடியாது. ஆக இந்த பட்டத்தை அமிர்தவேளையில் இருந்தே நினைவில் வையுங்கள். நான் யார்? கவலையில்லாத இராஜா நல்லது. வந்திருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளையும் பாபா சந்தித்தார். பாபாவிற்கும் மிகுந்த குஷி, குழந்தைகளுக்கும் குஷி ஆனால் இந்த வரதானத்தை ஒருபோதும் மறக்கக்கூடாது எப்படி இருந்தாலும் சரி, சரீரத்தின் கணக்கை சரீரமே உணரட்டும் ஆனால் மனம் சதா கவலையில்லாத இராஜாக இருக்க வேண்டும். எப்படிப்பட்ட சோதனை வந்தாலும் சரி, சோதனையானது மேலும் அனுபவிகளாக்கி முன்னேறச் செய்வதாகும். பயப்படக்கூடாது. ஒருபோதும் சோதனையைக் கண்டு மனம் தளர்ந்து விடக்கூடாது. நல்லது,

இன்று குஜராத் மண்டலத்தின் சேவை நடந்து கொண்டிருக்கின்றது. ஆக குஜராத்தும் பாப்தாதாவின் அன்பிற்குரியது. அனைத்து மண்டலமுமே பாபாவின் அன்பிற்குரியதுதான் ஆனால் இன்று குஜராத்தின் சேவை முறையாகும். குஜராத் ஆத்மாக்கள் எழுந்திருங்கள். கை உயர்த்துங்கள். மிகவும் நல்லது. பாப்தாதா அனைத்து செய்திகளையும் கேட்டறிந்து உள்ளார். எம்மாதிரியெல்லாம் புருஷார்த்தம் செய்து வருகின்றனர். அநேக குழந்தைகள் நன்கு கணக்குப் போட்டு காண்பித்துள்ளீர்கள். ஆக, ஒவ்வொரு குழந்தையும் பிரம்மாபாபாவிற்குச் சமமாக மாஸ்டர் பிரம்மா ஆக வேண்டும் என்பதையே பாபா விரும்புகின்றார். ஒவ்வொரு மண்டலம் உள்ளம் நிறைந்து மனப்பூர்வமாக வந்து சேர்கின்றார்கள். பாப்தாதாவும் குஷி அடைகின்றார். இம்மமாதிரியான குழந்தைகள் முழு கல்பத்தில் இந்த சங்கயுகத்தில் மட்டுமே சந்திக்கின்றனர். சத்தியுகத்தில் கூட நண்பர்கள் இருப்பார்கள் ஆனால் இப்போது இன்னார் இவர் என்று புரிந்து கொண்டு சந்திக்கின்றனர். அங்குள்ளவர்கள் புரிந்துக் கொள்வது என்பது முற்றிலும் மாறியிருக்கும்.

நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு குஜராத் நிமித்தமாக உள்ளது ஆனால் பாப்தாதாவின் முன்னால் வெளிநாட்டினரும் அமர்ந்துள்ளனர். இன்னும் சிறுசிறு கிராமங்களில் இருந்து வந்துள்ள குழந்தைகளும் உள்ளனர். ஒவ்வொரு குழந்தையையும், பாப்தாதா இரண்டு தந்தையருமே சதா முன்னேறிச் செல்லுங்கள், வளர்த்துக் கொண்டே போங்கள், உங்கள் இராஜ்யத்தை அருகாமையில் கொண்டு வாருங்கள் என்று கூறுவதோடு நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளையும். எதிரிலே உள்ளதை பாப்தாதா பார்க்கின்றார். பௌதீக ரிதியில் நீங்கள் எதிரில் உள்ளீர்கள் ஆனால் உள்ளத்தில் நாலா புறங்களிலுமுள்ள உள்நாடு, வெளிநாடு கிராமங்களின் குழந்தைகள் அனைவரும் பாபாவின் உள்ளத்தில் நிறைந்துள்ளனர். நல்லது.

மருத்துவத் துறை மற்றும் பாதுகாப்புத் துறை ஆகியவை இன்று வந்துள்ளனர். மருத்துவத் துறையினர் இம்மாதிரி ஏற்பாடுகளைச் செய்யுங்கள். பாப்தாாதா சொல்லியவாறு கவலையில்லாத இராஜாக்களாக ஆக்குங்கள். கவலையில்லை என்றால் நோய் நொடியும் இல்லை. இங்கு அமர்ந்தபடியே அனைவரும் குஷியாக இருக்கும்படி

அப்படி திட்டங்களைத் தீட்டுங்கள், குஷியை இழந்து விடக்கூடாது. எவரேனும் சிறிது உடலாலோ மனதாலோ நோய்வாய்ப்பட்டாலோ உடனேயே இந்த மருந்தை நினைத்தவுடன் குஷியாகி விட வேண்டும். அம்மாதிரி மருந்தை கண்டுப்பிடியுங்கள். அந்த மருந்து என்னவென்று தெரியுமா? என்னுடைய பாபா. ஆக அனைவரின் மனதிலும் என்னுடைய பாபா என்பதை உருவாக்கி விடுங்கள். இதுவே மருந்தாகி விடும். நல்லது. மிகவும் நன்று. சேவை செய்து கொண்டிருக்கின்றார்கள். செய்து கொண்டே போங்கள். வெற்றி என்பது உங்களது கூடவே இருக்கும்.

பாதுகாப்புத்துறையினர் நல்ல முயற்சி செய்து சிரமம் எடுத்துக் கொள்கின்றனர் ஆனால் முயற்சி செய்து மிக எளிதில் நல்ல பயனைத் தரக்கூடிய மருந்து அதாவது மந்திரத்தைக் கண்டுபிடியுங்கள். நாளுக்கு நாள் துக்கம் என்பது அதிகரித்துக் கொண்டேதான் போகும். குழப்பங்கள் ஏற்படத்தான் செய்யும் ஆனால் குழப்பத்தில் கூட தன்னை அசையாது உறுதியாக வைத்திருக்க வேண்டும். அம்மாதிரி எளிய விஷயம் ஒன்றை கண்டு பிடியுங்கள். அந்த விஷயம் எதிரில் வந்த உடனேயே மனம் குஷியாகி விட வேண்டும். அப்போது சரீரத்தின் நோய் மனதில் தோன்றாது. இந்த பாதுகாப்பின் சிகிச்சையை சுருக்கமாக இம்மாதிரி கண்டு பிடியுங்கள். எப்படி பிராமணர்கள் வரதானங்களைப் படித்து குஷி அடைகின்றார்களோ அப்படி! அம்மாதிரியான தீர்வு தரக்கூடிய சாதனைத்தைக் கண்டு பிடியுங்கள். யார் மனதால் நினைத்து பயிற்சி செய்தாலும் உடனேயே மாற்றம் ஏற்பட்டு விட வேண்டும் அம்மாதிரி! பாதுகாப்பு சம்மந்தமாக சிறுசிறு சாதனங்களை தயார் செய்யுங்கள். இன்னும் காலமானது மிகவும் பாதகமாகிக் கொண்டுதான் போகும். அம்மாதிரி சமயத்தில் உங்களது சாதனம் (வழிமுறை) உதவட்டும். நீங்கள் எப்பொழுதும் தயாராக இருக்கின்றீர்கள் அல்லவா? அவ்வாறு எவரெடியாக இருந்தால் எந்த சமயத்திலும், எப்படிப்பட்ட சமயத்திலும் பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயத்திலும் குஷியோடு இருக்க வேண்டும். பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரிகளின் குஷி மறைந்து போய் விடக்கூடாது. இது நடக்க முடியுமா? நடக்குமா? கை உயர்த்துங்கள்! நல்லது! பாப்தாதா அனைவரது கைகளையும் பார்த்தார். சமயம் என்பது வந்துக் கொண்டுதான் இருக்கும். பாப்தாதா முடிவைப் பார்ப்பார். அனைவருமே

கையை உயர்த்திள்ளீர்கள், ஆக சரியான நேரத்தில் கவலையில்லாத இராஜாவாக ஆகி விட வேண்டும். கவலையில்லாதவர்களாகவும், இராஜாக்களாகவும் ஆக்க வேண்டும். சிறு விஷயங்களும், பெரிய விஷயங்களும் கூட வரத்தான் செய்யும் ஆனால் பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரிகளுக்கு எதுவுமே பெரிய விஷயம் கிடையாது. ஒவ்வொரு கல்பத்திலும் பார்த்தது. ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைந்துள்ளீர்கள். அம்மாதிரி அனுபவிகளாகி, இப்பொழுது கூட ஒரு விளையாட்டுப்போல் எளிதில் பாஸாகி விட வேண்டும். அந்த தைரியம் உள்ளதா? இரண்டு கைகளையும் உயர்த்துங்கள். பின்னால் உள்ளவர்கள் கை தூக்குகின்றனரா?

இரட்டை வெளிநாட்டினருக்கு உங்களது பட்டம் நினைவில் உள்ளதல்லவா? நீங்கள் யார்? இரட்டை புருஷார்த்திகள். மேலும் பாப்தாதா பார்த்தார், மிகவும் தைரியமாக இருக்கிறார்கள். பெரும்பான்மை நேரங்களில் வெற்றியும் பெற்று விடுகிறார்கள். பாப்தாதாவிடம் செய்திகள் வந்து சேர்கின்றன. உங்களுக்கு நிமித்தமாக இருக்கக்கூடிய தாதியும் கூட அவ்வப்போது கூறி வருகின்றார். அனைவருக்கும் உற்சாகத்தை நிரப்பி வருகிறார். நல்லது. ஒரு விஷயத்தை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும் -நாம் நிச்சயமாக வெற்றி அடைந்தே தீர வேண்டும்! எந்தவித சூழ்நிலையாக இருந்தாலும் சரி, ஆனால் நமது பெயரோ வெற்றியாளர்கள். வெற்றி என்பது நமது வாழ்க்கையின் உதவி கரமாகும். வெற்றி என்பது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நல்லது. பாப்தாதாவிடம் செய்திகள் வருகின்றன. வெளிநாட்டினரின் முடிவுகளும் நன்றாகவே உள்ளன. பாப்தாதாவும் குஷி அடைகின்றார். நல்லது.

இன்றோ நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளைச் சந்திக்க வந்துள்ளார். அனைவரின் உள்ளதிலும் பாபா, பாபா, பாபா. இந்த அனுபவம் பாபாவிற்கும் ஏற்படுகிறது ஆனால் சரீரத்தின் கணக்கு சரீரத்தோடு மற்றபடி நீங்கள் அனைவரும் பார்த்தீர்கள். பாப்தாதாவும் பார்த்தார். அனைவருக்கும் பாப்தாதாவின் நினைவு அதிகமாக வருகிறது. எப்போது சந்திப்போம், எப்போது சந்திப்போம்! இதில் மறப்பது குறைவுதான் ஆனால் சங்கமத்தின் நேரமானது சந்திப்பு நேரமாகும். எனவே சந்தித்துக் கொண்டே இருப்போம்! நாலா

புறங்களிலுமுள்ள குழந்தைகளின் அன்பு நினைவுகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. எவ்வளவு குழந்தைகள் நினைக்கின்றனரோ அதை விட நூறு மடங்கு பாபா குழந்தைகளை நினைவு செய்கின்றனர். சதா குழந்தைகள் ஆஹா, பாபா! என்று எப்படி கூறுகின்றனரோ, அப்படியே பாபாவும் ஒவ்வொரு மூலையிலும் உள்ள குழந்தைகளைப் பார்த்து ஆஹா குழந்தாய்! ஆஹா குழந்தாய்! என்று கூறி, சங்கல்பத்திலும் அன்பு நினைவுகளை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். நல்லது. மற்றபடி அடுத்து நாடகத்தில் என்ன நடக்குமோ அது நடந்துக் கொண்டேயிருக்கும்.

மோகினி சகோதரி மிகவும் அதிகமாக தனது அன்பு நினைவுகளைக் கூறியுள்ளார். (அவர் மருத்துவமனையில் உள்ளார்) நன்கு நினைவில் இருந்து தனது கணக்கு வழக்குகளையும் தீர்த்துக் கொண்டிருக்கின்றார். பாப்தாதாவும் சக்தி கொடுத்துக் கொண்டிருக்கின்றார். பாபாவிடம் அவரது அன்பு வந்துசேர்கிறது.

தாதி ஜானகியுடன் அன்பாக அரவணைத்துக் கொள்கின்றார் இவர் ஒருவருக்கு மட்டும் இவ்வாறு செய்வது, அனைவருக்குமே செய்வது போலாகும். பாப்தாதா சந்தித்துக் கொண்டுதான் இருப்பார். சங்கமயுகமே தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பதற்கான நேரம். யுகமே இதுதான். எனவே சந்தித்துக் கொண்டேயிருப்போம்.

நிர்வயர் சகோதரர் சில சகோதரர்களின் அன்பு நினைவுகளை எடுத்துக் கூறினார். யாரெல்லாம் நினைவு கூர்ந்தார்களோ அவர்களுக்கு பல கோடி அன்பு நினைவுகள். தில்லி ருக்குமணி தாதி கூட நினைவுகளைக் கூறியுள்ளார். அவருக்கும் பல மடங்கு அன்பு நினைவுகளைக் கூறவும்.

(மூன்று நான்கு தினங்களில் சில சகோதர சகோதரிகளுக்கு விபத்து ஏற்பட்டுள்ளது.) யாருக்கெல்லாம் இம்மாதிரி நடந்துள்ளதோ அவர்கள் அனைவருக்கும் அன்பு நினைவுகளைக் கூறவும் ஆனால் மேற்கொண்டு யாரெல்லாம் ஓட்டுநர்களாக உள்ளனரோ அவர்களை தனியாகக் கூப்பிட்டு புரிய வையுங்கள். வேக வேகமாக ஓட்டுகின்றனர். அம்மாதிரி வேகம் காட்டக்கூடாது. நாம் முதலில் போய் சேர வேண்டும் என்று

நினைக்கின்றனர். முதலில் சேர்வீர்கள்தான் ஆனால் எப்படி? முதலில், குறிப்பாக ஓட்டுநர்களுக்கு இம்மாதிரி அறிவுரை கூற வேண்டும்.

கீதையின் பகவான் யார் என்கிற விஷயம் பற்றி அகிம்சா -நிகழ்ச்சியை நன்றாக செய்துள்ளீர்கள். இதில் நிறைய பேர் உங்களுக்கு துணையாக வருவார்கள். பொதுவாக அநேகர் இம்சையை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களையும் அருகில் கொண்டு வாருங்கள். அப்போது கீதையின் பகவானின் விஷயம் தானாகவே நிரூப்பிக்கப்பட்டு விடும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.12.2012 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இந்த புதிய வருடத்தில் ஒவ்வொருவரும் சந்துஷ்டமணியாகி, திருப்தியின் சக்தியின் மூலம் பிரச்சனை இல்லாதவர்களாக, சமாதான சொரூபமாகுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய நாலா புறங்களிலுமுள்ள சந்துஷ்டமணிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவருடைய ஒளியும் மிக நல்ல முறையில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில், திருப்தியின் சக்தி மிகவும் சிரேஷ்டமானது. எங்கு திருப்தி இருக்கிறதோ அங்கு பிறசக்திகளும் வந்து விடுகின்றன. சந்துஷ்ட (திருப்தி) சக்தி எவ்விதமான பிரச்சனையையும் எளிதில் தீர்த்து விடக்கூடும். எங்கு திருப்தி இருக்கிறதோ அங்கு எந்த சக்தியும் இல்லாதிருக்காது, திருப்தியின் சக்தியானது எப்படிப்பட்ட வாயுமண்டலமாக இருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் அதனை எளிதில் மாற்றி விட முடியும். திருப்தியானது மாயை மற்றும் இயற்கையின் தொந்தரவுகளையும் மாற்றி விடுகிறது. ஆக ஒவ்வொருவரும் தன்னைத்தான் பாருங்கள். நாம் சந்துஷ்டமணியாக ஆகி இருக்கிறோமா? எந்த வித மனித ஆத்மாவினுடைய தொந்தரவையும் மாற்றி வாயுமண்டலத்தை மாற்றி விட முடியுமா?

பாப்தாதாவும் இன்று விசேஷமாக தனது சந்துஷ்டமணி ஆத்மாக்களைப் பார்த்து மிகவும் குஷி அடைந்து கொண்டிருக்கின்றார். பாப்தாதா பார்த்தார். இங்கு சேவையில். கூடவே சேவை புரியும் சேவாதாரிகளில் திருப்தியின் சக்தி வாயுமண்டலத்தை மாற்றி விடுகிறது. ஆக இப்படிப்பட்ட சந்துஷ்டமணியாக அனுபவம் செய்கிறீர்களா? திருபதியின் சக்தி இருக்கிறது என்று நினைப்பவர்கள்

மேலும் குறிப்பிட்ட சமயத்தில் செயலில் ஈடுபடுத்தி வெற்றியின் அனுபவம் ஏற்படுகிறது என்றால் அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. கையை உயரமாக உயர்த்துங்கள், மிக நன்றாக கையை உயர்த்துகின்றார்கள். பாப்தாதாவும் அனைவரது கரங்களையும் பார்த்து குஷி அடைகிறார் ஆனால் உடன் சேவை செய்யும் எவருக்கேனும் தொந்தரவு ஏற்படுகிறதா என்று சோதனை செய்யுங்கள். அந்த சமயத்தில் இந்த சக்தி, மாற்றத்தைக் கொண்டு வருகிறதா? அதனுடைய விளைவாக முதலில் உங்களது இடங்களை (சேவா கேந்திரம்) சக்திசாலி ஆக்குவதில் வெற்றி பெறுகிறதா?

அநேக இடங்களில் இப்பொழுது கூட சகன் சக்தி (சகித்துக் கொள்ளுதல்) மூலம் சென்டர்களை சதா தடைகளற்றதாக ஆக்குவது அவசியத்திலும் மிக அவசியமானது என்பதை பாப்தாதா பார்த்தார். ஒவ்வொரு சென்டரும், மண்டலமும் தடைகளற்ற நிலையை இப்பொழுது செய்ய வேண்டும் என்ற பணியை பாப்தாதா ஏற்கனவே தந்திருந்தார் நினைவிருக்கிறதா? அந்த கணக்குப்படி காலத்தின் அவசியத்தின் அனுசாரம் தற்போது ஒவ்வொரு கிளையும் தடைகளற்று விளங்குவது மிக அவசியமாகும். சேவா நிலையமாக இருந்தாலும் சரி அல்லது தன்னுடைய குடும்பமாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு இடமும் தடைகளற்று திருப்தியினுடைய சக்தி நிறைந்து விளங்க வேண்டும். நேரத்தின் அதி வேகத்தைப் பார்த்துக் கொண்டுதானிருக்கிறீர்கள். பாப்தாதா பார்த்தார் திருப்தியினுடைய சக்தி தன்னிலும், ஒட்டு மொத்தத்திலும் எவ்வளவு உள்ளது என்பதை கவனமாகப் பார்ப்பது அவசியமாகும்.

பிரம்மாபாபா நாலாபுறங்களிலும் சுற்றி வலம் வருகிறார். சம்பூர்ணம் அடைவதற்கு அனைத்திலும் எளிய சாதானம் என்ன என்பதை அறிவீர்களா? பாபாவை பின்பற்றுவது! முதலிலிருந்தே இறுதி வரை திருப்தி எனும் சக்தி மூலம் ஒவ்வொரு பாதக் சூழ்நிலையிலும் வெற்றி கண்டார். ஆக பாப்தாதா இன்று அனைவருக்கும் விசேஷ சைகையைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார், அதாவது ஒவ்வொருவரும் திருபதியின் மணியாகி திருப்தியின் சக்தியை விசேஷமாக காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டே செல்லுங்கள்.

தற்போது புதிய ஆண்டு வந்து கொண்டிருக்கிறது. இதில் ஒவ்வொருவரும் இதனை சோதனை செய்ய வேண்டும். திருப்தியின் சக்தியின் மூலம்' சுயத்தில் திருப்தி, உடனிருப்போரும் திருப்தியாக இருந்து, பாபா விரும்பக் கூடிய அளவு திருப்தி திருப்தியாய் இருந்ததா? எந்தவித பிரச்சனையும் திருப்தியாக முடிவடைந்ததா? ஏனெனில் உலகத்தில் நாளுக்கு நாள் திருப்தியின்மை அதிகரித்து வருகிறது. அதற்காக நான் நாள் முழுவதும் திருப்தியாய் இருக்கிறேனா என்று உங்களை நீங்களே பாருங்கள். இதற்கான எளிய சாதனம் பிரம்மாபாபாவைப் பின்பற்றுவது ஏனெனில், தற்காலத்தில் உலகத்தில் திருப்தியின்மை அதிகரித்து வருகிறது.

மற்றபடி பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் புதிய வருடத்திற்கான விசேஷமாக அமிர்த வேளையில் சகஜமான வரதான ரூபத்தில் வரதானங்களை வழங்குவதற்கான திட்டத்தைத் தீட்டியுள்ளார். புதிய ஆண்டில் என்ன நடக்கும் என்று எல்லோரும் கேட்கின்றனர் அல்லவா? திட சங்கல்பம் செய்வோருக்கு புருஷாரத்தின் சகயோகம் கிடைக்கும். ஆக இந்த புதிய வருடத்தின் பரிசு மிக எளிதாகக் கிடைக்கும். அமிர்தவேளையில் இந்த வரதானம் உங்களுக்கு பிடித்திருக்கிறதா? செய்கிறீர்கள்தான், ஆனால் பாப்தாதாவிடமிருந்து விசேஷமான உதவி, சிநேகம் மற்றும் சக்தி கிடைக்கும். சரிதானே? ஏனெனில் பாப்தாதா பார்த்தார், அனைவரது ஆர்வம் ஈடுபாடு நன்றாக உள்ளது. ஏதேனும் செய்ய வேண்டும். இந்த ஒரு ஆழமான ஆர்வம் நன்றாயிருக்கிறது ஆனால் இடையில் ஏதேனும் சூழ்நிலை வருகின்றது. அதற்காக இந்த வருடத்தில் திருப்தியின் சக்தியை விசேஷமாக காரியத்தில் கொண்டு வர வேண்டும். நன்கு சோதனை செய்து வந்தால் தானாகவே முன்னேறி செல்வீர்கள். நல்லது! பல்வேறு இடங்களிலிருந்து வந்துள்ளீர்கள். நாலா புறங்களிலும் மற்றும் மதுபனிலும் ஆழமான அன்போடு நினைவு செய்து கொண்டிருக்கின்றனர். ஆக நீங்கள் என்னவாக ஆவீர்கள்? திருப்தியின் மணி பிடித்திருக்கிறதா திருப்தியின் மணியாவதில் விருப்பமா? கை அசையங்கள்! ஒவ்வொருவரும் நிருப்தியின் மணி ஆனீர்கள் என்றால் நாலா புறங்களிலும் என்ன நடக்கும்? ஆஹா! ஆஹா! எனும் கீதம் ஒலிக்கும். ஆக நீங்கள் அனைவரும் யார்? திருப்தியின் மணி தானே? நீங்கள் அனைவரும் முழுமையாக திருப்தியின் மணியா அல்லது கொஞ்சம் கொஞ்சம் தானா நாம் ஆக

முடியவில்லை என்றால், வேறு யார் ஆவார்கள் என்று சொல்லுங்கள். பாப்தாதா வலம் வந்தார் என்றால் என்ன பார்ப்பார், ஒவ்வொரு இடத்திலும் திருப்தியான மணிகளின் ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது ஏனெனில் பாப்தாதாவிற்கு நாலா புறங்களிலும் சுற்றி வருவதில் அதிக நேரம் எடுக்காது. ஆக இந்த ஆண்டு நாலா புறங்களிலுமுள்ள திருப்தியின் மணிகளின் ஒளி எந்தளவு பிரகாசிக்கிறது? இந்த ரிசல்ட்டை பாபா பார்ப்பார்.

இந்த வருடம் உங்களில் பிரச்சனை அற்றவர்களாக, சமாதான சொரூபத்தில் விசேஷமான ரிசல்ட்டை பார்க்க வேண்டும். நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகள் பெரும்பாலோர் மதுபனில் மனதால் அடைந்து உள்ளனர். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகள் எவ்வளவு ஆர்வத்துடன் மனதின் மூலம் மதுபனில் வந்து அடைந்துள்ளனர். எதிரில் இருக்கும் நீங்களோ சரீரத்தோடு வந்தடைந்துள்ளீர்கள். நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவும் விசேஷமாக அன்பு நினைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மேலும் விசேஷமான திருப்தி சக்தியின் வரதான நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். திருப்தியாக இருப்பது, திருப்தியை வழங்குவது மற்றும் திருப்தியின் சக்தியின் மூலம் உலகத்திலும் திருப்தியின் அதிர்வலைகளைப் பரப்ப வேண்டும். நல்லது! அனைவரும் குஷியாக இருக்கிறீர்களா? அப்படி இருந்தீர்களென்றால் இரண்டு கைகளையும் உயர்த்துங்கள். பாப்தாதாவிற்கும் மதுபனில் குழந்தைகளைப் பார்த்து மிகவும் குஷி! ஏதேனும் நடந்தால் எந்த விதமான பிரச்சனையும் சிறிதோ, பெரியதோ வந்தால் நீங்கள் மதுபனில் மனதின் மூலமாக வந்து சேர்ந்து விடுங்கள். உடலால் அல்ல மனதால்! பாப்தாதா குழந்தைகளை மனதில் அதிகப்படியான குஷியின் சத்துணவை நிரப்பி விடுவார். நல்லது மதுபனுக்கு வருவது என்றால் புருஷார்த்தத்தில் முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வைப்பது மதுபனில் வந்திருக்கிறோம் என்றால் தன்னை முன்னேற்றம் அடையச் செய்வதில் எவ்வளவு தூரம் சகயோகத்தை எடுத்துள்ளீர்கள் என்று இப்பொழுதும் நீங்கள் சோதனை செய்து பார்க்க வேண்டும். மதுபனில் நாள் முழுவதும் மிக எளிதாக என்ன நினைவு இருக்கிறது? பாபா பாபா பாபா! இங்கு (மதுபன்) கேட்கிறீர்கள் என்றால் பாபாவின் விசயம்

மட்டுமே கேட்கிறீர்கள். நடப்பதும் கூட மதுபனின் தூய்மையான இடத்தில், உண்ணுவதும் பிரம்ம போஜனமே, சக்தி வாய்ந்ததாக (சூழ்நிலை) இங்கு ஏனிருக்கிறது என்றால், இங்கு விசேஷமாக சேவையில் இருப்போருக்கு நினைவானது ஞாபகம் ஊட்டப்படுகிறது. எனவே மதுபன் வருவது என்றால் ஞானம், போகம், தாரணை மற்றும் சேவையில் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பது! மதுபனில் நீங்கள் அனைவரும் இந்த லாபத்தை எடுத்துள்ளீர்களா? பலனை எடுத்துள்ளீர்களா? ஏனெனில் இங்கு (உலக ரீதியான) பொறுப்புகள் ஏதும் கிடையாது. தன்னை முன்னேற்றம் அடைய செய்வதற்கான பொறுப்பு மட்டுமே உள்ளது. நல்லது.

சேவையினுடைய முறை -டில்லி மற்றும் ஆக்ரா டில்லியைச் சேர்ந்தவர்கள் எழுந்து நில்லுங்கள். (அநேகர் கையில் மெழுகு வர்த்தி ஏற்றி வந்துள்ளார்கள்) டில்லிகாரர்கள் ஒளி மற்றும் சக்தியின் ரூபத்தை எடுத்து வந்துள்ளனர். இந்த ஹாலில் கூட நன்கு அழகு கூடி விட்டது. நல்லது. டில்லிகாரர்கள் இராஜாங்கத்தை தயார் செய்ய வேண்டும். ஏனெனில் அனைவருமே இராஜ்யம் செய்து ஆக வேண்டும். பீடத்தில் அமராமல் இருக்கலாம் ஆனால் அனைவருமே இராஜ்ய அதிகாரிகளாக, இருப்பீர்கள் தானே! நல்லது. டில்லிகாரர்களுக்கு சேவையினுடைய உற்சாகம் நன்றாக உள்ளது. டில்லி நம்பர்-1 தடைகளற்ற மண்டலம் என்கின்ற ரிசல்ட்டை காண்பிக்க வேண்டும். உற்சாகம் என்பதோ நன்றாகவே உள்ளது ஆனால் அதனுடைய ஆதாரம் தர வேண்டும். டில்லிகாரர்கள் செய்வீர்கள்தானே, கையை உயர்த்துங்கள். ஏனெனில் இதுவரை பாப்தாதாவிற்கு எந்த ஒரு மண்டலமும் இம்மாதிரி ரிசல்ட்டை கொண்டு வரவில்லை, ஆக இதில் டில்லி நம்பர்-1 எடுக்க வேண்டுமல்லவா? டீச்சர்கள் கையை உயர்த்துங்கள். ஆவீர்கள்தானே? கொஞ்சம் தொய்வாக கையை உயர்த்துகிறார்கள். சகோதரர்கள் உயர்த்தினீர்களா? நல்லது, பல இடங்களில் அமர்ந்திருக்கிறீர்கள் போலும்! பாப்தாதா பார்த்தார் சேவையினுடைய உற்சகாம் அனைத்து மண்டலங்களிலும் உள்ளது மேலும் இந்த வருடத்தில் நாலாபுறங்களிலும் அனைவரும் எவ்வளவு முடியுமோ அந்தளவு நிகழ்ச்சிகளை நன்றாக ஏற்பாடு செய்திருந்தனர். சேவையினுடைய உற்சாகம் ஆர்வம் நாலாபுறங்களிலும் உள்ளது மேலும் இந்த சேவையினுடைய ஆர்வத்தை அதிகரித்துக் கொண்டே போனால்

என்னவாகும்? பாரதம் மகான் நிலையை அடைந்து விடும். நல்லது, டில்லிகாரர்களுக்கு வாழ்த்துக்கள்.

இரட்டை வெளிநாட்டினர் கையை உயர்த்துங்கள். மிகவும் நல்லது மதுபனின் லாபத்தை வெளிநாட்டினர் மிக நன்றாக எடுத்துள்ளதை பாப்தாதா பார்த்தார். அது குறிப்பாக பயிற்சியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த நிகழ்ச்சியாக இருப்பினும் சரி குழுவாக இருந்து ஒருவர் மற்றவர்களுக்கு ஒத்துழைப்பை நல்கி மேலும் தைரியமும் கிடைத்ததின் விளைவு நன்றாக உள்ளது. எனவே பாப்தாதா இரட்டை வெளிநாட்டினருக்கு 100-மடங்கு லாபத்தை எடுத்துக் கொள்வதற்கான வாழ்த்துக்களை வழங்குகிறார். மேலும் இரட்டை வெளிநாட்டினருக்கு பாப்தாதா என்னவொரு பட்டத்தை வழங்கியுள்ளார்? டபுள் புருஷாரத்தி இரட்டை வெளிநாட்டினர் அல்ல. இரட்டை புருஷார்த்திகள். இரண்டு என்று யாரேனும் சொல்லும்போது இரட்டை வெளிநாட்டினர் அல்ல இரட்டை புருஷார்த்திகளாகவும் இருக்கின்றனர் என்று கூறங்கள். தன்னைத்தான் சோதனை செய்ய வேண்டும். பாப்தாதா அறிவார், கவனம் என்னவோ இருக்கிறது. மேலும் விசேஷ கவனம் ஊட்டவும் படுகிறது. எனவே பாப்தாதாவிற்கு மிக நன்றாயிருக்கிறது. பின்னால் தாமதமாக வந்தாலும் சரி, ஆனால் புருஷாரத்தத்தில் பின்னால் இல்லை. முன்னேறிச் செல்கிறார்கள். மேலும் முன்னேறிக் கொண்டே செல்வார்கள். இதையும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். பாப்தாதாவுக்கு குஷி அதற்காக கை தட்டுங்கள்.

நீதி துறையினர் மற்றும் ஐ.டி துறையினரின் கூட்டம் நடந்தேறியது. பாப்தாதா ஏற்கனவே கூறியுள்ளார். அனைத்து துறையினரும் மிக நன்றாக சேவை செய்து வருகின்றனர். அது நீதித்துறையாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த துறையாக இருந்தாலும் சரி, எப்போது துறையாக ஆனதோ பொறுப்பு கிடைத்ததோ பொறுப்பானது தனித்தனியாக கிடைத்தவுடன் புருஷார்த்தமும் நன்றாக செய்து வருகின்றனர். மேலும் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றியும் பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கின்றார், என்னென்ன நிகழ்ச்சிகளை எந்தெந்த துறையினர் செய்தாலும் சரி அனைத்து துறையினரின் ரிசல்ட் என்னவோ மிக நன்றாகவே உள்ளது, ஆக நீதித்துறையின் சேவையும் நன்றாகவே நடந்து வருகிறது. ஒவ்வொருவருடைய கவனமும்

சேவையின் மீது மிக நன்றாக உள்ளது என்று பார்க்கும்போது பாப்தாதாவும் குஷி அடைகின்றார். ஏதேனும் செய்ய வேண்டும் என்ற துடிப்பு, அதனால் செய்தும் வருகின்றனர். ஆக. நீதித்துறையினுடைய சேவையும் ஆங்காங்கு நடைபெற்று வருகிறது. மேலும் நடைபெறும். நல்லது.

தற்போது சேவையின் பொருட்டு பாப்தாதா அனைவருக்கும் வாழ்த்துக்களை வழங்கியுள்ளார். அது எந்த துறையாக இருந்தாலும் சரி இப்போது பாப்தாதா ஒவ்வொருவரின் புருஷார்த்தத்தில் முன்னேற்றமாக இதையே விரும்புகிறார், அதற்காக பாப்தாதா கூறினார். ஒவ்வொரு மண்டலமும் தங்களது மண்டலங்களை தடைகளற்றதாக ஆக்க வேண்டும். இது வரை இந்த ஒரு ரிசல்ட் வரவில்லை. வெறும் தங்களது சென்டர் மட்டுமல்ல. மண்டலமே நிர்விக்னம் அற்றதாக மாற வேண்டும். ஒவ்வொரு மண்டலத்திலும் புருஷார்த்ததில் தொய்வோ பலவீனமோ இருந்து விடக்கூடாது. அந்த மாதிரி திட்டம் தீட்டுங்கள். எப்படி தற்போது துணையாக (சேவையில்) இருக்கிறீர்களோ அவ்வாறு புருஷார்த்தத்திலும் மிக நல்ல துணையாக இருந்து வாருங்கள், ஏனெனில் நீங்கள் தடைகளற்றவர்களாக ஆனீர்கள் என்றால் அதனுடைய அதிர்வலைகள் உலகம் முழுவதும் பரவும், முழு உலகத்தையுமே மாற்ற வேண்டி உள்ளது. நல்லது.

நாலா புறங்களுக்கும் பாப்தாதா அன்பு நினைவுகளை வழங்கி விட்டார் ஆனால் இந்த வருடத்தில் புருஷார்த்தத்தில் நாலாபுறங்கள் அனைத்து தரப்புகளிலும் நம்பர்-1 ஆக வேண்டும். அப்படி ஒருவர் மற்றவர்களுக்கு சகயோகி ஆகி காண்பியுங்கள். எந்த மண்டலத்தைப் பார்த்தாலும் சரி நம்பர்-1 ஆக இருக்க வேண்டும். இது நடக்குமா? நடக்கக் கூடுமா? தாதிகள் கூறுங்கள் நடக்க முடியுமா? சொல்லுங்கள் நடக்குமா? (நாம் செய்யவில்லைபென்றால் வேறு யார் செய்வர் நாம்தானே செய்வோம் என்று ஜானகி தாதி கூறுகிறார்). கை உயர்த்துங்கள், இரட்டை புருஷார்த்திகளாக ஆவீர்களா? எங்கிருந்து கொண்டும் கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ, பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ. அனைவருமே இந்த சங்கல்பத்தை செய்யுங்கள். செய்தே ஆக வேண்டும்! மேலும் யார் வீரர்களாக இருப்பார்களோ அவர்களே கூறுவர். பாபா இது என்ன பெரிய விசயம், ஏற்கனவே நடந்துள்ளது (பவர் ஆப்

ப்யூச்சர் சேவையும் நிசார் சகோதரர் மற்றும் அவரது குழுவினர் நன்றாக செய்து கொண்டிருக்கின்றனர்). பாரத தேசம் செய்து வருகிறது. வெளிநாட்டினரும் செய்கின்றனர். உற்சாகம் என்பது அனைவருக்கும் இருக்கிறது ஆனால் தடைகளற்று இருக்கிறோம் என்ற ரிப்போர்ட் வர வேண்டும். ஒவ்வொரு மண்டலமும் நிர்விக்னமாக உள்ளது. முதல் தரமான புருஷார்த்திகள், ஏனெனில் உங்களது அதிர்வலைகள் உலகம் முழுவதும் செல்லட்டும். நீங்கள் புருஷார்த்தத்தில் முன்னேறிச் சென்றால் அதனுடைய அதிர்வலைகள் உலகின் துக்கமானவர்கள் வரை சென்று சேரும் இந்நாட்களிலோ எந்தளவு துக்கம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. துக்கமே துக்கம் பரவும் அளவிற்கு காரணங்கள் ஏற்பட்டு விடுகின்றன. நல்லது.

அனைவருக்கும் நினைவிருக்கிறதா? வருகின்ற ஆண்டு என்ன செய்ய வேண்டும்? அம்மாதிரி புருஷார்த்தம் செய்து முன்னேறிச் செல்லுங்கள். பிறரையும் முன்னேற்றுங்கள் நல்லது, (ஈஸ்வரிய சேவைக்காக ஏதேனும் புதிய முறையை கூறுவீர்களா என்று பாபாவிடம் கேட்கப்பட்டது) கூறுவோம்!! நல்லது.

தாதிகளுடன் இந்த முறை டீச்சர்கள் கூட்டத்திலும் இது பற்றி பேசப்பட்டது. ஒற்றுமையை வலுப்படுத்துவது எப்படி?

மோகினி சகோதரியுடன் உடல் நிலை சரியில்லை. இப்பொழுது கூட இவருடைய பங்கு (பார்ட்) மற்றும் உதவி உள்ளது. தற்போது சரியாக இருக்கிறீர்களா? நன்றாக ஆகி விடும். வேறு எந்த எண்ணமும் வேண்டாம் சரியாகிப் போய் விடும். இடை இடையே ஏற்படுகிறது அல்லவா? தற்போது என்ன செய்ய வேண்டும் என்ற அறிவுரை சரியாக கிடைத்துள்ளது அல்லவா? அப்படியென்றால் சரியாகிப் போய் விடும். குஷியாக இருக்கிறீர்கள்தானே! சற்று குழப்பம் ஏற்பட்டுள்ளது. அதுவும் சரியாகி விடும், வியாதி அதிகமாகி விட்டது அல்லவா? எனவே சற்று கூட குறைய ஆகத்தான் செய்யும். தற்போது தொடர்ந்து ஒவ்வொன்றாகச் சரி செய்து கொண்டே போங்கள், அனைத்தும் சரியாகி விடும். பிறகும் நன்றாகவே இருக்கிறீர்கள். தயாரான பிறகு ஓட்டமாக ஓடுவார். (நாளை இவரது 72வது பிறந்த நாள்).

மூன்று முக்கிய சகோதரர்களுடன் மூன்று பேரும் ஒன்றாக சேர்ந்து அம்மாதிரி நிகழ்ச்சிகளை ஏற்படுத்துங்கள், அதன் மூலம் மதுபன் சதா எப்பொழுதுமே தடைகளற்று இருக்கட்டும், அனைவரும் திருப்தியாகவும் இருக்க வேண்டும். தியாகியாகவும் இருக்க வேண்டும். தியாகி, திருப்தி இரண்டுமே வேண்டும். கவனம் செலுத்துகிறீர்கள். மேலும் செலுத்தி வாருங்கள். மூவரும் உங்களிடையே ஆலோசனை செய்து ஒரே எண்ணம் உள்ளவர்களாகவும் ஆகி விடுங்கள். மூவரிடமும் ஒரே அலை இருக்கட்டும் எண்ணங்கள் என்பது வேறு வேறாக இருக்கக்கூடும் ஆனால் எண்ணங்களை ஒன்றாக்கிக் கொள்ள வேண்டும். ஆக மூவரது எண்ணமும் ஒன்றாக இருக்க வேண்டும். ஒருவர் மற்றவர்களோடு சந்தித்து ஒருவரைப் போன்று மற்றவரும் எண்ணுங்கள், நல்லது. எப்படி சகோதரிகள் தங்களுக்குள் இருக்கிறார்களோ அவ்வாறே சகோதரர்களும் ஒரே வழிப்படி இருக்க வேண்டும். யாருடைய வழி அல்லது எண்ணமாக இருந்தாலும் இருக்கட்டும் ஆனால் ஒற்றுமையாக செல்லுங்கள்.

பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் புத்தாண்டு (2013) வாழ்த்துக்களை அளித்தார்! நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு புதிய வருடத்தின் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! இந்த புதிய ஆண்டில் ஏதேனும் புதுமையை உங்களிடம் கொண்டு வர வேண்டும். இது வரையில் அந்த மாற்றத்தை கொண்டு வராமல் இருக்கலாம், கஷ்டமாகக் கூட இருக்கலாம். அது இந்த புதிய வருடத்தில் செய்து, செய்தியை இங்கு எழுதவும். உங்களை தடைகளற்றவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும், பிறரையும் அவ்வாறு தடைகளற்றவர்களாக்க உதவ வேண்டும். அனைத்து திருப்தி மணிகள் பிரகாசித்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு பாப்தாதா பார்க்க விரும்புகிறார். நல்லது! நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு மிக அன்பு நினைவுகள் மற்றும் மிக மாற்றத்தை கொண்டு வருவதற்கும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂
☂☂☂☂☂